நாடோடி

# அட பரமசிவா!

608

பிரசுரம் :

நாடோடி

தியாகராயநகர், சென்னை.

விலை ரூபாய் மூன்று
முதற்பதிப்பு ஜனவரி 1946
சகல உரிமையும் ஆசிரியருக்கே

---

## நாடோடி எழுதிய நூல்கள்

நாடகமே உலகம்

பிழைக்கும் வழி

இதுவும் ஒரு பிரகிருதி

ஒரு நாள் கூத்து

அட பரமசிவா!

படித்த பெண் வேண்டாம்!

எங்கள் குடும்பம் பெரிது!

ஹே, அனுராதா!

முடியாத யுத்தம்

என்னைக் கேளுங்கோன்னு! (அச்சில்)

புருஷர்களுக்கு மட்டும்! (அச்சில்)

உலகம் பலவிதம் (அச்சில்)

# நான் குற்றவாளி யல்ல !

என் புத்தகங்களுக்கு மதிப்புரைகள் எழுதும் ஆசிரியர்கள் என் மீது ஒரு குற்றம் சுமத்துகிறார்கள்.

சமூகத்தைச் சீர் திருத்த நான் புறப்பட்டிருப்ப தாகவும், "வாழ்க்கையில் காணும் சில கேவலமான அசட்டுத் தனங்களைக் குற்றவாளிகளின் முதுகில் பட், பட் என்று வீறுவது போல எடுத்துக் காட்டுவ தாகவும்," "மேடைப் பேச்சுக்களால் விட, இத் தகைய புத்தகங்களால் தான் ஜனங்கள் சீர் திருந்து வார்கள் என்றும்" என் மீது குற்றம் சுமத்து கிறார்கள்.

உண்மையில் இந்தக் குற்றங்களை நான் செய்ததுமில்லை, செய்வதாக உத்தேசமு மில்லை. ஜனங்களைச் சீர்திருத்தி, என் பிழைப்பில் மண்ணைப் போட்டுக் கொள்வதற்கு எனக்கு என்ன பைத்தியமா பிடித் திருக்கிறது? ஜனங்கள் சீர் திருந்தி விட்டால் எனக்குப் பின்னர் எழுதுவதற்கு விஷயங்கள் ஏது?

நான் எழுதும் நோக்கமெல்லாம் ஜனங்கள் படித் துச் சிரிக்க வேண்டும் என்பதே யல்லாது வேறு ஒன் றும் இல்லை. ஜனங்களைச் சீர் திருத்த முயலுவதாக என் மீது குற்றம் சுமத்துவது வீண் பழியே யாகும்.

ஆகவே, இப்பொழுதே சொல்லிவிட்டேன். இப்புத்தகத்தைப் படிப்பதால் நீங்கள் சிரிப்பதோடு மட்டும் நில்லாது, சீர்திருந்தவும் செய்வீர்களே யானால் அதற்கு நான் துளிக்கூடப் பொறுப்பாளி யல்ல !

தியாகராய நகர்
10—1—1946

நாடோடி

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| அட பரமசிவா | ... | 9 |
| பாதசாரிகளே ஒன்று சேருங்கள் | ... | 18 |
| நாரதர் கலகம் | ... | 25 |
| தலைவலி எப்படி ! | ... | 44 |
| அடையாளம் | ... | 49 |
| ஹோட்டல் சாப்பாடு | ... | 57 |
| தென்னை மரத்தில் தேள் கொட்ட | ... | 65 |
| மூக்கறுத்தல் | ... | 79 |
| புருஷர்களுக்கு மட்டும் | ... | 81 |
| கௌரி கல்யாணம் | ... | 87 |
| இப்பொழுது தெரிகிறதா ! | ... | 94 |
| யாரும் எழுதாத கட்டுரை | ... | 105 |
| வண்ணான் வந்தானே ! | ... | 111 |
| கலியாண ராமன் கலியாணம் | ... | 118 |
| இப்படியா சமாசாரம் ! | ... | 129 |
| இரண்டு போண்டா சாம்பார் | ... | 136 |
| குழந்தைகள் பட்டாசு | ... | 141 |
| கூரை வீட்டின் மர்மம் | ... | 146 |
| ஐயா புருஷர்களே ! | ... | 155 |
| மாப்பிள்ளைகளே, ஜாக்கிரதை ! | ... | 161 |
| உலகம் பவிதம் | ... | 166 |
| கை கண்ட மருந்து | ... | 172 |
| அழும்பூர் அமளி | ... | 177 |
| குடிக்கூலிக்கு விடப்படும் | ... | 185 |
| டாக்டர் பில் | ... | 191 |

# அட பரமசிவா!

## காட்சி 1

*[வெங்கட்ராமய்யரும் அவர் மனைவி சுந்தரி யம்மாளும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நேரம், காலை பத்து மணி.]*

**வெங்கட்ராமய்யர் :**—இந்தாடி! எனக்கு ஆபீஸுக்குப் போக நாழியாச்சு! பெண்ணைப் பார்க்கிறதற்காக இன்னிக்கு மத்தியானம் வருகிறேன் என்று அந்தப் பிராமணன் எழுதியிருக்கான். குட்டி கோமளத்தைத் தலைவாரிப் பின்னி, நல்ல பாவாடையும், தாவணியும் கட்டிக்கச்சொல். நீ ஏதாவது அவனிடம் எக்கச்சக்கமாக பணம் இவ்வளவு தருகிறேன், அவ்வளவு தருகிறேன் என்றெல்லாம் சொல்லி வைக்காதே. எல்லாம் நான் வந்து தீர்மானம் பண்ணுகிறேன்.

**சுந்தரி யம்மாள் :**—என்ன, இதெல்லாம் எனக்குத் தெரியாதா! என்னமோ சின்னக் குழந்தைக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறாப் போல் சொல்லிக் கொடுக்கிறேளே!.........என்னமோ எங்கப்பாதான் ஏமாந்துபோய் ஒன்றும் விசாரிக்காமல், சொளையாக.........

**வெங் :**—சரிடி, சரி. வாயை அடக்கிப் பேசு. உங்கஅப்பாஎன்ன பிரமாதமாகக் கொடுத்து விட்டார்? கலியாணத்தின்போது ஒரு ஐயாயிர ரூபாய்

கொடுத்தாரே, அது தானே? அதற்கப்புறம் எனக்கு ஒரு ஆடி உண்டா, தீபாவளி உண்டா?....

சுந்த:—ஆமா, உங்களுக்கு என்ன செய்தால் தான் திருப்தி? அவர்தான், "நாளைக்கு என்மேல், இது செய்யவில்லை, அது செய்யவில்லை யென்றெல்லாம் குற்றம் சொல்லாதீங்கோ. இப்பவே எல்லாவற்றிற்குமாகச் சேர்த்து ஐயாயிர ரூபாய் கொடுத்துடறேன்"........

வேங்:—சரி, சரி, நிறுத்து. இந்தப் பழங் கதையெல்லாம் எதற்காக?.....ஆமா, குட்டிக்கு ஏதாவது நல்ல பாவாடை இருந்தால் எடுத்துக் கட்டு.

சுந்த:—ஆ.....மா! புடவையும், பாவாடையும் நீங்கள் அடுக்கடுக்காய்ப் பெட்டியில் வாங்கி அடுக்கி யிருக்கிறீர்களே, அதை எடுத்து......

வேங்:—என்னடீ! பெரிய அதிகப்பிரசங்கியாகி விட்டாய்?......நீ எத்தனை வாங்கிக் கொடுத்தால் தான் இருக்கு என்று சொன்னாய்?......ஏன், போன தீபாவளிக்கு வாங்கிக்கொடுத்த பாவாடையும், தாவணியும் என்னவாச்சு? அதை இடுப்பில் கட்டுகிறது தானே?

சுந்த:—ஆமாம், வலையாட்டமா ஒரு துணி வாங்கிக் கொடுத்துட்டா, அது நாலு வருஷத்துக்கு அப்படியே நிற்கும். இப்பத்தான் புதுசு, புதுசாத் துணிகள், தினுசு, தினுசா வந்திருக்கே. அதிலே நாலு பாவாடை வாங்கித் தைத்துப் போட்டால் என்ன?

வேங் :—சரி, சரி, நான் ஒரு வார்த்தை சொல்ல ஆரம்பிப்பதற்குள் நீ ஒன்பது வார்த்தை சொல்லி முடித்து விடுகிறுய். பிராமணன் மத்தியானம் கட்டாயம் வருகிறேன் என்று சொல்லியிருக்கான். எனக்காகக் காத்துக்கொண் டிருக்காதே. அவனுக்கு நல்ல டிபனும், காப்பியும் பண்ணிக்கொடு. எனக்குத் தினம் ஊற்றித் தருகிருயே தர்மாஸ் பிளாஸ்கில் ஒரு தண்ணி—அது மாதிரி போடாதே.

சுந்த :—என்னமோ சாப்பிடுகிறதையும் சாப்பிட்டுவிட்டுத் தெருவிலே தூத்திஞறும் என்று சொல்வார்களே, அது மாதிரியல்லவா இருக்கிறது, நீங்கள் பேசுவது? என்னமோ கிளிப்பிள்ளைக்குச் சொல்லுகிறுப்போல் இதையெல்லாம் சொல்ல வருகிறீர்களே, நீங்கள் என்னைப் பெண் பார்க்க வந்தபோது நான் தான் காப்பி போட்டு வைத்திருந்தேன். தண்ணியாகவா போட்டிருந்தேன்?

வேங் (சிரித்துக்கொண்டே) :—ஆமாண்டி! ......இருபது வருஷத்திய சமாசாரத்தை நான் இன்னும் ஞாபகம் வைத்துக்கொண் டிருக்கிறேன்!........சரி, சரி, நான் வருகிறேன்........ நான் அந்தப் பிராமணன் வந்தால் இருக்கச் சொல்லு.எல்லாம் வந்து பேசிக்கொள்ளுகிறேன்.

[வெங்கட்ராமய்யர் ஆபீசுக்குப் புறப்பட்டுப் போகிருர்.]

## காட்சி 2

[சுந்தரியம்மாளும் கோமளமும் பேசிக்கொண் டிருக்கிறார்கள். நேரம் பிற்பகல் மூன்று மணி.]

**சுந்த** :—இந்தாடி, கோமளம்! இப்பத்தானே நாலு நாழி மெனக்கட்டு உன் தலையை வாரிப் பின்னினேன்? அதற்குள்ளே கலைத்துக்கொண்டு விட்டாயே. இப்ப உன்னைப் பார்ப்பதற்கு அந்தப் பிராமணன் வருவாரே!

**கோமளம்** :—எல்லாம் வந்தால் வரட்டும்.

**சுந்த** :—என்னடி அப்படிச் சொல்றே? நாங்கவெல்லாம் சிறிசுகளா யிருந்தபோது இப்படியா இருந்தோம்? ஒரு தடவை தலையை வாரி "எஸ்" கட்டுக் கட்டிக்கொண்டால் நாலு நாளு என்றாலும் அப்படியே இருக்குமே! நீ என்னடின்னா.........

**கோம** :—என்னம்மா நீ மாட்டில் அடுப்பிலே கேஸரியைக் கிளறி வைத்துவிட்டு என்னோடே தர்க்கு வெட்டிக்கொண் டிருக்கிறாயே!......

**சுந்த** :—ஆமாடி! நான் போய் அடுப்புக் காரியத்தைக் கவனிக்கிறேன். இந்தா, அந்தச் சாந்தைக் குழைத்து நெற்றியில் அழகாகப் பொட்டு இட்டுக்கோ. அந்தப் பிராமணன் வந்துவிடப் போகிறார்!

[உள்ளே போகிறாள். கோமளம் கண்ணாடியின் எதிரே நின்றுகொண்டு சாந்து இட்டுக்கொண் டிருக்கிறாள். வாசல் கதவு தட்டப்படும் சத்தம் கேட்கிறது.]

சுந்த:—அடியே கோமளம்! போய் அந்த வாசல் கதவு இடுக்கு வழியாய் யார் வந்திருக்கா என்று பாரு. அந்தப் பிராமணன்தான் வந்துட்டாரோ, என்னமோ! இதோ நான் என் கரிக்கையை அலம்பிக்கொண்டு வருகிறேன்.

[கோமளம் வாசல் பக்கம் ஓடிப்போய் கதவு இடுக்கு வழியாய்ப் பார்த்துவிட்டு வருகிருள்.]

கோம :—ஆமாம்மா! யாரோ பிராமணர் வந்து நிற்கிருர். அவர்தான் போலிருக்கு. நீ போய்ப் பாரு.

[சுந்தரியம்மாள் போய்க் கதவைத் திறக்கிருள். வாசலில் அண்ணுசாமி அய்யர் நிற்கிருர்.]

அண்ணு :—என்ன, வெங்கட்ராமய்யர் இருக்கிருரா?

சுந்த :—இல்லே. துரை ஏதோ அவசரமாய்க் கூப்பிட்டனுப்பித்தான். அதற்காகப் போயிருக்கார். இன்னும் சித்த நாழியிலே வந்துடுவார்.........ஏன் வாசல்லே நிக்கறேள்? உள்ளே வாங்கோளே!

அண்ணு :—இல்லே. எனக்கு இன்னொரு மனுஷாளைப் பார்க்கவேண்டி யிருக்கிறது. பார்த்துவிட்டு ஐந்து மணிக்கு வறேன்.

சுந்த :—இல்லே. அவர் இன்னும் அரை நாழியிலே வந்துடுவார். காலம்பரே புடிச்சு நீங்கள் வருவேள் வருவேள் என்று தான் சொல்லிக்கொண்டிருந்தார். கொஞ்சம் டிபன் பண்ணி

விட்டுச் சிரம பரிகாரம் பண்ணிக்கோங்கோ. அதுக்குள்ள வந்து விடுவார்.

அண்ணு :—எனக்கு டிபன், கிபன் ஒன்றும் வேண்டாம் அம்மா ! எல்லாம் இப்பத்தான் சாப் பிட்டுவிட்டு வறேன். எல்லாம் நான் வந்த காரி யம் நிறைவேறினுல் போதும்.

சுந்த :—காரியம் நிறைவேறுவதற்கு என்ன ! எல்லாம் நம்ப கையிலேயா பிடித்துப் போட் டிருக்கிறது? எல்லாம் வேளையும் பிராப்தமும் வந்தால் தன்னுலே ஆகிவிடுகிறது. நாங்களும் தான் ஒரு வருஷமாய்ப் பியத்தனம் பண்ணிக் கொண்டிருக்கிருேம்.........

அண்ணு :—என்ன பிரயத்தனம் பண்ணி என்ன பண்ணுகிறது? நானும் அலேயாத அலேச் சல் கிடையாது.

சுந்த :—என்ன அப்படிச் சொல்றேள்? புள் ளேயைப் பெத்தவா, எதற்கு அலேயரு?......ஆமா, புள்ளேயாண்டான் என்ன பண்ணுகிருர்?

அண்ணு :—அந்த வயத்தெரிச்சலே ஏன் அம்மா கேட்கறே? பி. ஏ. பாஸ் பண்ணிவிட்டு நாலு வருஷமா வேலே யில்லாமல் வீட்டோடு கிடக்கிருன். அவனே அத்தியயனத்தில் போட் டிருந்தால்கூட தினம் கால், அரை என்று ஏதா வது கிடைக்கும்.

சுந்த :—அந்த பிள்ளேக்குத்தான் கலியாணம் போவிருக்கு.........

அண்ணு :—ஆமாம். அது ஒன்றுதான் பாக்கி. ஆனால் என் ஆம்படையாள் கேட்கிருளா? அவளும் இரண்டு வருஷமாக ஆத்துக்கு மாட்டுப் பெண் வரணுமென்று அடித்துக்கொண்டிருக்கிருள்.

சுந்த :—என்ன அப்படிச் சொல்றேள்? எல்லாம் காலா காலத்தில் நடந்தால்தானே தேவலை .......சரி, நீங்க டிபன் சாப்பிட வாங்கோ.

அண்ணு :—இல்லே யம்மா. எனக்கு டிபன் ஒன்றும் வேண்டாம்.

சுந்த :—இல்லை. நீங்கள் இப்படிச் சொல்லக் கூடாது. அப்புறம் அவர் வந்தால் என்னைத் தான் கோபித்துக் கொள்வார்.

[அண்ணுசாமி அய்யர் சாப்பிட உட்காருகிருர். கேஸரியை ருசி பார்த்துக்கொண்டே பேசுகிருர்.]

அண்ணு :—நீங்கள் பணம் என்ன கொடுப்பதாக உத்தேசம் பண்ணி யிருக்கேள்?

சுந்த :—எல்லாம் அவரைக் கேட்டால்தான் தெரியும்.

அண்ணு :—என்ன அம்மா! உங்களுக்குத் தெரியாத காரியமா? எல்லாம் உங்களைக் கேட்டுக்கொண்டு தானே அவர் செய்வார்?

சுந்த :—இப்பத்தான் எல்லாருக்கும் பணமுடையா யிருக்கே. யார் பணத்தைக் கையில் கொட்டி வைச்சுண்டிருக்கா? ஏதோ இரண்டாயிரம் கொடுக்கலாம் என்று உத்தேசம்.

**அண்ணு** :—இரண்டாயிரந் தானு? மூவாயி ரம் ரூபாய் கொடுக்கப் போவதாகச் சொன்னுரே?

**சுந்த** :—இல்லையே. இரண்டாயிரத் துக்கு மேல் எங்களால் ஒரு தம்படி கொடுக்கக் கட்டாது.

**அண்ணு** :—அப்படிச் சொன்னுல்? உங்கள் பணத்தை வாங்கித் தானே நான் என் பெண் ணுக்குக் கலியாணம் ஏற்பாடு பண்ணணும் என்று நினைத்திருக்கிறேன்.

**சுந்த** :—அது என்னமோ, எனக்குத் தெரி யாது. எல்லாம் அவர் வந்தால் கேளுங்கோ.

*[கதவு தட்டும் சத்தம் கேட்கிறது.]*

இதோ, அவரே வந்துட்டார் போலிருக்கு.

*[வாசலுக்கு ஓடிப்போய்க் கதவைத் திறக்கிருள். வெங்கட்ராமய்யர் உள்ளே நுழைகிருர்.]*

**சுந்த** (அவரிடம் ரகசியமாக) :—அவர் வந் திருக்கார். கூடத்தில் டியன் சாப்பிட்டுக்கொண் டிருக்கார்......

**வெங்** (ஆச்சரியத்துடன்) :— வந்துட்டாரா? வரவில்லை, நாளைக்கு வரேன் என்றல்லவா தந்தி யடித்திருக்கிருர் !

**சுந்த** :—பின்னே அவர் வந்து, வந்திருக்கிற வர் வந்து......வந்து......

*[வெங்கட்ராமய்யர் உள்ளே நுழைந்து பார்க் கிருர். அண்ணுசாமி அய்யரைப் பார்த்ததும் அவர் முகத்தில் கோபம் ஜ்வலிக்கிறது.]*

**வெங்:**—என்ன அண்ணுசாமி அய்யர்! டிபன் ரொம்ப பலம்தான் போலிருக்கு !

**சுந்த** (திகைத்து) :—என்ன வந்தவாளைப் பார்த்து இப்படிச் சொல்றேள் ?

**வெங் :**—யாரடி வந்தவாள் ? இவனுக்கு வட்டிப் . பணம் அழறது போருதுன்னு, டிபன் வேறேயா ?

**சுந்த :**—அப்ப இவர் சம்பந்திப் பிராமணன் இல்லையா ?

**வெங் :**—ஆமாமடி ! இவனைத்தான் போயும் போயும் சம்பந்திப் பிராமணனுகப் புடைக்கணும். மூன்றும் வருஷம் நம் ராஜத்தின் கலியாணத்திற்காக மூவாயிரம் ரூபாய் கடன் வாங்கினோமே, அந்த அண்ணுசாமி அய்யரல்லவா இவர் ?

**சுந்த :**—அட பரமசிவா !

[கீழே விழப்போகிருள். அவளை மூந்திக் கொண்டு திரை விழுந்து விடுகிறது.]



# பாதசாரிகளே ஒன்று சேருங்கள்

"ஓய்! உமக்கு மூளை, கிளை இருக்கா ஐயா? பின்னால் கார் வருவது கண் தெரிய வில்லை? நான் ஹாரன் பண்ணினது காது கேட்க வில்லை?"

கண்களில் தீப்பொறி பறக்க அந்த மோட்டார் ஓட்டி என்னை அப்படிக் கேட்டார். நான் காரில் மாட்டிக்கொள்ளத் தெரிந்தேனே என்ற இரக்கத்தினால் ஏற்பட்ட கோபம் அல்ல அவர் கோபம். இந்தப் போலீஸ்காரன் ஒருவன் பக்கத்தில் இருந்து தொலைந்து விட்டானே, இல்லாவிடில் இந்தப் பயல் மீது காரைவிட்டு அவனுக்கு ஒரு நல்ல பாடம் கற்பித்து கொடுத்திருப்பேனே என்று அவருக்கு ஆத்திரம்.

தினம் காலையில் நான் வீட்டிலிருந்து காரியாலயத்துக்கு வருவதற்குள் பத்து மோட்டார் ஓட்டிகளுக்குக் குறையாமல் எனக்கு மூளை இருக்கா, கண் தெரிகிறதா, காது கேட்கிறதா என்று சந்தேகப்படுவார்கள். அவர்கள் இப்படிச் சந்தேகப் படுவதற்கு நான் செய்த ஒரே குற்றம் நான் இன்னும் பாதசாரியாக இருப்பது தான்.

அது என்னமோ தெரியவில்லை, ஊரில் நடக்கும் எல்லாத் தெரு விபத்துக்களுக்கும் இந்தப் பாதசாரிகள் மீதுதான் குற்றம் சுமத்தப்படுகிறது. இது போதாது என்று நமக்கெல்லாம் அறிவு, அதாவது ரஸ்தா அறிவு இல்லை யென்று வேறு

அவர்கள் சொல்ல ஆரம்பித்து விடுகிறார்கள். பாதசாரிகளைக் கொன்று ஒழித்துவிட்டுத்தான் மறு காரியம் என்பது போல், நாம் மாட்டில் சிவனே என்று நடை பாதைகளில் நடந்துகொண்டிருந்தாலும் இந்த மோட்டார் வண்டிகளும், ராணுவ லாரிகளும் நம்மைப் பின்தொடர்ந்து நடை பாதைக்கே வந்து விடுகின்றன.

பாதசாரிகள் ரஸ்தாக்களில் நடக்கக்கூடாது என்று கட்டுப்பாடு இருக்கிறது. ஆனால் ராணுவ லாரிகளும், மோட்டார் பஸ்களும் நடை பாதைகளில் செல்லக்கூடாது என்று கட்டுப்பாடு கிடையாதுபோலிருக்கிறது!

பாதசாரிகளாகிய நாம் இதற்காக ஏதாவது செய்து தான் ஆகவேண்டும். இனியும் காலைக் கட்டிக்கொண்டு, வாயைப் பொத்திக் கொண்டு சும்மா இருப்பதில் பயன் இல்லை.

ஒரு நகரத்தின் நாகரிகத்தை அங்கே நடக்கும் தெரு விபத்துகளின் எண்ணிக்கையைக் கொண்டே மதிப்பிடுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். நாகரிகத்தில் தலைசிறந்த லண்டன் நகரத்தில் விமான விபத்துகளால் இறப்பவர்களைக் காட்டிலும் தெரு விபத்துகளால் இறப்பவர்கள் அதிகம் என்று, லண்டன் நகரத்தின் நாகரிகத்துக்கு அறிகுறியாக எடுத்துக் காட்டப்படுகிறது. ஆனால் பாதசாரிகளாகிய நாங்கள் இனி நம் கையைக் கட்டிக்கொண்டு நாகரிகத்துக்காக எங்கள் உயிரைத் தியாகம் பண்ணப்போவதில்லை.

உலகத்துப் பாதசாரிகளே, ஒன்று சேருங்கள்! "ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு" என்னும் பாரதியாரின் மூதுரையைச் சிந்தித்துப் பாருங்கள். மோட்டார் ஓட்டிகளுக்கு உள்ள உரிமைகள் நமக்கும் வழங்கப்படவேண்டும் என்பதற்காக நாம் போராடவேண்டும்.

பாதசாரிகள் என்றாலே இந்த மோட்டார் சாரதிகளுக்கு இளக்காரமாக இருக்கிறாப்போல் தோன்றுகிறது. ஆகவே பாதசாரி என்ற பெயரை விடுத்து நமக்குப் பாதசாரதி (பார்த்தசாரதி அல்ல) என்ற பெயர் அளிக்கப்படவேண்டும்.

இந்த மோட்டார் ஓட்டிகளுக்கு லைசன்சுகள் அளிப்பதுபோல் பாதசாரிகளாகிய எங்களுக்கும் லைசன்சு அளிப்பதற்கென்ன என்று கேட்கிறேன். லைசன்சு ஒன்று இருப்பதால்தானே இந்த மோட்டார் சாரதிகள் தெரு முழுவதும் தங்களுக்குச் சொந்தம் என்று நினைத்துக்கொண்டு விடுகிறார்கள்?

மோட்டார் ஓட்டிகள் சைகைகள் காட்டுவதுபோல் பாதசாரிகளாகிய நாங்களும் காட்டத் தயாரா யிருக்கிறோம். மோட்டார் ஓட்டிகள் மற்ற வண்டிக்காரர்கள் காட்டும் சைகைகளைக் கவனித்து நடப்பது போல எங்கள் சைகைகளையும் கவனித்து நடக்க வேண்டும். முற் சந்திகளிலும், நாற்சந்திகளிலும் போலீஸ்காரர்கள் எங்களுக்கும் சைகைகள் காட்டவேண்டும்.

போலீஸ்காரர்களின் கவனத்தைக் கவருவதற்கு சைகிள்காரர்களானால் மணி அடிப்பார்கள். (என் நண்பர் ஒருவர் வைத்திருக்கும் சைகிள் மட்டும் இதற்கு விலக்கு. இதில் மணி அடிக்க வேண்டிய அவசியமே இல்லை. சைக்கிளின் எல்லாப் பாகங்களுமே ஒரு மைலுக்கு அப்பால் கேட்கும்படி சத்தம் போடும் பொழுது தனியாக மணி அடிக்கவேண்டிய அவசியம் எதற்கு?)

மோட்டார்க்காரர்களானால் ஹார்ன்கொடுப்பார்கள். ஆனால் பாதசாரதிகள் என்ன பண்ணுவது? கை தட்டி அழைப்பதைத் தவிர வேறு லகுவான வழி இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் தெருவில் நின்று கை தட்டினால் தங்களைத்தான் கூப்பிடுகிறார்களோ என்று தெருவில் போகிற எல்லாருமே திரும்பிப் பார்க்கும் வழக்கம் நம் நாட்டில் இருக்கிறது.

ஆகவே போலீஸ்காரர்களின் கவனத்தைக் கவருவதற்காக மட்டும் தான் கை தட்டலாம், மற்ற சமயங்களில் தட்டக் கூடாது என்று ஒரு விதி ஏற்படவேண்டும்.

"நாங்கள் இப்பொழுதுதான் மோட்டார் ஓட்டக் கற்றுக்கொண்டோம், நாங்கள் கத்துக்குட்டிகள், எங்களைக் கண்டு சற்று எச்சரிக்கையாகவே நடந்து கொள்ளுங்கள்" என்னும் பொருள் பட "எல்" என்னும் அட்டையை வண்டியில் கட்டித் தொங்கவிடுகிறார்கள் அல்லவா?

அதைப்போல பாதசாரதிகளும் இத்தகைய அட்டையைக் கட்டிக்கொண்டு வெளியில் புறப்பட வேண்டும்.

மோட்டார் வண்டிகளுக்கு எப்படிப் பின்னால் கண் இல்லையோ, அதைப் போலவே பாதசாரதிகளாகிய எங்களுக்கும் கண் இல்லை. ஆனால் பின்னால் வரும் வண்டிகள் தெரிவதற்காக நாங்கள் ஒரு நிலைக்கண்ணாடியைக் கையில் எடுத்துக் கொண்டு செல்லவோ, அல்லது மார்பில் கட்டிக் கொண்டு போகவோ தயாரா யிருக்கிறோம்.

"எங்களுடன் சமத்துவம் கொண்டாட வந்து விட்டீரே, வண்டிகள் ஒன்று சேர்ந்து பக்கத்தில், பக்கத்தில் போகக்கூடாது என்று விதி இருப்பதுபோல் பாதசாரிகளும் ஒன்று சேர்ந்து பக்கத்தில் பக்கத்தில் செல்லக் கூடாது என்று விதி வந்தால் என்ன பண்ணுவீர்" என்று என் மோட்டார் நண்பர் ஒருவர் கேட்கிறார். என்ன பண்ணுவோம்? தம்பதிகள் தற்காலத்தில் நடப்பதுபோல் கை கோர்த்துக் கொண்டு நடப்பது விடுத்து பழைய காலத்தில் போல் ஒருவருக்குப் பின் ஒருவராக நடப்போம். புருஷர்களுக்குப் பின்னால் நடந்துவர வெட்கமாய் இருக்கிறது என்று ஸ்திரீகள் சொல்லும் பக்ஷத்தில், அவர்கள் வேண்டுமானால் முன்னால் போகட்டும், நாங்கள் பின்னால் வர தடையில்லை.

இந்த மோட்டார் வண்டிகளுக்கும், ரிக்ஷா வண்டிகளுக்கும் அங்கங்கே நிற்குமிடம் கட்டிக்

கொடுத்திருப்பது போல் எங்களுக்கும் "பாத சாரதிகள் நிற்கு மிடம்" ஒன்று மிகவும் அவசியம்.

ஆக இந்த ரீதியில் மோட்டார்க் காரர்களுக்குள்ள எல்லா உரிமைகளும் பாதசாரதிகளாகிய எங்களுக்கும் சர்க்கார் அளிக்கவேண்டும். மோட்டார் ஓட்டத் தெரிகிறதா என்று அவர்களைப் பரீட்சித்து லைசன்சுகள் வழங்குவது போல் எங்களையும் நடக்கத் தெரிகிறதா என்று பரிசோதித்து லைசன்சுகள் வழங்கவேண்டும்.

இந்த லைசன்சுகள் தகடு ரூப்மாக இருக்கலாம். கைக்கடியாரம் கட்டிக்கொள்வது போல் இதை நாங்கள் கையில் கட்டிக்கொள்வோம்.

பொது ஜனங்களுக்கு அடையாளத் தகடுகள் வழங்க வேண்டுமென்று கொஞ்ச காலத்துக்கு முன்னர் சர்க்கார் ஆலோசித்துக் கொண்டிருந்தார்கள். இந்த லைசன்சு தகடுகளையே அடையாளத் தகடுகளாக வைத்துக் கொண்டால் (விமான விபத்துகளை உத்தேசித்து ஏற்பட்ட இந்தத் தகடுகள் மோட்டார் விபத்துக்களுக்காவது உபயோகப்படட்டுமே) ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடித்த மாதிரி.

ஆகவே, உலகத்துப் பாதசாரிகளே, ஒன்று சேருங்கள்! லைசன்சுக்காகக் கிளர்ச்சி செய்யுங்கள்!! "ஒன்று பட்டாலுண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு" என்

னும் பாரதியாரின் மூதுரையைச் சிந்தித்துப் பாருங்கள்.

சர்க்கார் பாதசாரிகளாகிய எங்களுக்கு லைசன்சுகள் அளிக்க முன்வரப் போகிறார்களா, அல்லது நாங்கள் எல்லோரும் ஒன்று சேரட்டுமா? நாங்கள் ரஸ்தாவில் ஒன்று சேர்ந்து விட்டால், பாக்கி வண்டிகள் ஒன்றும் போக முடியாது. ஞாபகம் இருக்கட்டும்!



# நாரதர் கலகம்

## காட்சி 1

*[தேவலோகத்தில் இந்திரன் தர்பார். இந்திரன் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறான். மற்றுமுள்ள தேவர்கள் தங்கள் தங்கள் ஆசனங்களில் வீற்றிருக்கின்றனர்.]*

**தேவேந்திரன் :**—எங்கே ஊர்வசியைக் காணோம்? நாட்டியம் ஆரம்பிப்பதற்கு இன்று ஏன் இத்தனை தாமதம்? சேவகா, போய் ஊர்வசியை உடனே அழைத்து வா.

[சேவகன் போகிறான்]

தேவர்களே! எங்கே நாரதரைக் காணோம்? நம் சபை நடக்கும்போதெல்லாம் இங்கு இருக்கப்பட்டவராயிற்றே அவர்!

**ஒரு தேவன் :**—தேவேந்திரா! தங்களிடம் சொல்லலாமோ கூடாதோ என்று பயந்துகொண்டிருந்தேன். நாரதர் சமாசாரம் தங்களுக்கு இன்னும் தெரியாது போலிருக்கிறது. கொஞ்ச காலமாக அவர் தேவலோகத்தில் தங்குவதே கிடையாது.

**தேவேந்திரன் :**—ஏன் என்ன சமாச்சாரம்? வேறு எங்கு செல்கிறார்?

**தேவன் :**—அடிக்கடி பூலோகத்துக்குச் சென்று விடுகிறார்.

*[சேவகன் வருகிறான்]*

**தேவேந்திரன் :**—(சேவகனைப் பார்த்து) :— எங்கே ஊர்வசியைக் காணோம்?

**சேவகன் :**—உடை தரித்துக் கொண்டிருக்கிறார்கள். இதோ வந்துவிடுவதாகச் சொன்னார்கள்.

**தேவேந்திரன் :**—அப்பா! பூலோகத்து ஸ்திரீகள் தான் உடை தரித்துக்கொள்ள ஒரு மணி அவகாசம் எடுத்துக் கொள்ளுகிறார்கள் என்றால் தேவலோகத்து ஸ்திரீகளுமா இத் துர்ப் பழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும்? சேவகா! உடனே ஓடிப் போய் நான் கையோடு கூட்டிக் கொண்டு வரச் சொன்னதாகச் சொல்லி ஊர்வசியை அழைத்துக் கொண்டு வா.

[சேவகன் போகிறான்]

இது என்ன ஆச்சரியம்! எத்தனையோ யுகங்களாக ஊர்வசி நம் சபையில் நடனமாடி வருகிறாள். ஒரு நாளும் இப்படி நம்மைக் காக்க வைத்தது கிடையாதே! எங்கே நாரதர்? அவரையும் காணோமே!

**ஒரு தேவன் :**—தேவேந்திரா! நான் தான் சொன்னேனே, அவர் அடிக்கடி பூலோகத்துக்குச் சென்று விடுகிறார் என்று.

[நாரத கானம் கேட்கிறது]

**தேவேந்திரன் :**—அதோ நாரத கானம் கேட்கிறது. அவரே வருகிறாப்போல் தோன்றுகிறது. ........அதோ அவரே வந்து விட்டாரே!

[நாரதர் வருகிறார்]

மகரிஷே! வரவேண்டும்! வரவேண்டும்! ஏனே தங்களை இங்குக் காண்பது அரிதாய் இருக்கிறது?

நாரதர்:—நான் திரிலோக சஞ்சாரி என்னும் விஷயம் தங்களுக்குத் தெரிந்தது தானே? ஒரே சமயத்தில் நான் எப்படி இரண்டு லோகங்களில் இருக்க முடியும்?

தேவேந்திரன்:—முடியாது தான். ஆனால் கொஞ்ச காலமாகத் தங்களுக்குப் பூலோகத்தின் மீது மிகுந்த மோகம் ஏற்பட்டு விட்டதாகத் தெரிகிறது...ஆமாம்...அடடே! நானும் இத்தனை நாழியாகக் கவனிக்காமல் இருந்துவிட்டேனே! ......ஆமாம், தங்கள் தாடி எங்கே காணேம்? அதைப் பூலோகத்தில் மறந்து வைத்துவிட்டு வந்து விட்டீர்களா, என்ன?

நாரதர் (தாடி இருந்த இடத்தைப் பழைய ஞாபகத்தில் தடவிக்கொண்டே):—ஆம்; தாடியைப் பூலோகத்தில் தான் விட்டுவிட்டு வந்து விட்டேன். ஆனால் ஞாபக மறதியால் விட்டு வரவில்லை. வேண்டுமென்றே தான் தாடியை எடுத்து விட்டேன்.

தேவேந்திரன்:—ஏனே? (மற்றுமுள்ள தேவர்களைப் பார்த்து) ஏன், ஊர்வசியை இன்னும் காணேம்? உடை தரித்துக் கொள்வதற்கு எத்தனை நேரம்? நாரதரே! தாங்கள் ஏன் தாடியை எடுத்து விட்டீர்கள்! அதைச் சொல்லவில்லையே!

**நாரதர்** :—பூலோகத்தில் நடக்கும் சில தமிழ் டாக்கிகளைப் பார்த்த பிறகு எனக்குத் தாடி உண்டா, இல்லையா என்று ஒரு பெரும் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. ஒரு டாக்கியில் தாடியுடன் நாரதர் காட்சி யளிக்கிறார்; இன்னொன்றில் தாடியில்லாமல் காட்சி யளிக்கிறார். இதைப் பார்த்த பிறகு தாடி வைத்துக் கொள்வதா, வேண்டாமா என்று ஒரு பெரிய பிரச்னை என்னைப் பிடித்து வாட்ட ஆரம்பித்து விட்டது. கடைசியில் தாடி வேண்டாமே என்று ஊர்வசி சொன்னாள்.

**தேவேந்திரன்** :—ஊர்வசியா?

**நாரதர்** :—ஆம், அவளையும் என்னுடன் பூலோகத்துக்குச் சில தமிழ் டாக்கிகளுக்கு அழைத்துச் சென்றிருந்தேன்.

[ஊர்வசி சேவகனுடன் வருகிறாள்]

அதோ அவளே வந்துவிட்டாளே!

**தேவேந்திரன்** :—இது யார் இது! ஊர்வசியா? எதற்காக இப்படித் தன்னைக் கோரப்படுத்திக் கொண்டு வருகிறாள்? அது என்ன முகத்தில் ஏதோ மாவு பூசிக்கொண்டிருக்கிறாள்! இது என்ன அலங்கோலமான உடை! இதைத் தரித்துக்கொள்வதற்குத்தானா இத்தனை நேரம்?

**ஊர்வசி** :—தேவேந்திரா! நமஸ்கரிக்கின்றேன். நடனம் ஆரம்பிக்கலாமா?

**தேவேந்திரன்** (வெறுப்புடன்) :—ஆரம்பிக்கலாம்?

[ஊர்வசி நாட்டியமாடத் தொடங்குகிருள். அவள் வழக்கமாக ஆடும் பரத நாட்டியத்தை விடுத்துத் தான் சமீபத்தில் பார்த்த ஒரு டாக்கியிலிருந்து நடனம் ஒன்று ஆடுகிருள். ஆடிக்கொண்டே பாடுகிருள்.]

**தேவேந்திரன்** :—நிறுத்து, நிறுத்து! போதும் உன் நாட்டியம்! உன் ஆட்டமும், பாட்டும் துளிக் கூடச் சகிக்கவில்லே. ஐயய்ய பார்க்க வெட்கமாகுது! யார் சொல்லிக் கொடுத்தது உனக்கு, இத்தகைய ஆபாச நடனம்?

**ஊர்வசி** :—யாரும் சொல்லிக் கொடுக்க வில்லே. பூலோகத்தில் பார்த்த ஒரு டாக்கியி லிருந்து நானே கற்றுக்கொண்டேன். பூலோகத் திலே இந்த நடனத்துக்குப் பிரமாதமான கிராக்கி உண்டு. 'காட்டு மிராண்டா' நடனம் என்று பெயர்.

**தேவேந்திரன்** :—உன்னே யார் கூட்டிக் கொண்டு போனது அந்த டாக்கிக்கு?

**ஊர்வசி** :—திரிலோக சஞ்சாரியான நாரதர் தான் அழைத்துக் கொண்டு போனர்.

**தேவேந்திரன்** :—ஓஹோ! நாரதரின் கலகந் தாஞ இது?

[ஒரு தாதி வருகிருள்.]

**தாதி** :—தேவேந்திரா! தங்களே இந்திராணி அழைத்து வரச் சொன்ஞர்கள்.

**தேவேந்திரன்** (தாதியைப் பார்த்துவிட்டு) :— இது என்ன விந்தை! எதற்காக இந்தத் தாதி இப்படிப் புடவை கட்டிக் கொள்ளாமல் சிறு

குழந்தைபோல் பாவாடையுடன் விளங்குகிருள்! எதற்காக உதடுகளிலும் கன்னங்களிலும் சிவப்புச் சாயம் பூசியிருக்கிருள்! என்ன நாரதரே? இவளையும் டாக்கி பார்க்க அழைத்துச் சென்றிருந்தீரா, என்ன?

**நாரதர்:**—ஆம், ஊர்வசிக்குத் துணையாக இவளும் வந்தாள்.

**தேவேந்திரன்:**—ஓஹோ! தேவலோகத்தில் நீர் ஏற்கெனவே தினம் விளைத்து வரும் கலகம் போதாது என்று இது வேறு புது வழி கண்டு பிடித்திருக்கிறீரோ?

**நாரதர்:**—எல்லாம் நன்மைக்காகவே செய்கிறேன். நாரதர் கலகம் நன்மையில் முடியும் என்கிற விஷயம் தாங்கள் அறியாததா?

**தேவேந்திரன்:**—நாரதரே! நான் தங்கள் கொட்டத்தை இத்தனை நாள் சகித்துக் கொண்டிருந்தது போல் இனியும் சகித்துக் கொண்டிருப்பேன் என்று எண்ணுதீர்கள். தேவலோகத்துக்கு நான் அதிபதியாக இருக்கும் வரையில் தாங்கள் ஆரம்பித்து வைக்கும் கலகத்தை வேடிக்கை பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது. இன்று ஊர்வசியை டாக்கிக்கு அழைத்துக் கொண்டு போய், இப்படி யெல்லாம் ஆபாசமாக உடை உடுத்திக் கொள்ளவும், நடனம் ஆடவும் கற்றுக்கொடுத்த தாங்கள், நாளைக்கு இந்திராணியையும் டாக்கிக்கு அழைத்துக்கொண்டு போய், இத் துர்ப் பழக்கத்தைக் கற்றுக்கொடுக்க மாட்டீர்கள் என்பது என்ன நிச்சயம்?

**நாரதர்** :—தேவேந்திரா! ஏனோ வழக்கத்துக்கு விரோதமாக இன்று தங்களுக்கு இத்தனை கோபம்? ஊர்வசியையும், தாதியையும் பூலோகத்துக்கு டாக்கி பார்க்க அழைத்துச்சென்றவன் நான்தான். இல்லை யென்று சொல்லவில்லை. அதற்காகத் தாங்கள் இப்பொழுது என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?

**தேவேந்திரன்** :—என்ன செய்யச் சொல்லுகிறேனா? தங்களைத் தேவலோகத்தி லிருந்து வெளியே போகச் சொல்லப் போகிறேன்...... ஆம். தாங்கள் தேவலோகத்தில் இனிமேல் ஒரு கணமும் இருப்பதற்கு லாயக்கில்லை. தாங்கள் இத்தனை யுகங்களாக இத்தேவலோகத்தில் கலகம் விளைத்தது போதும். இனிமேல் இதை விட்டு வேறு எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்......(சபையோர்களைப் பார்த்து) இன்று தர்பார் இத்துடன் கலைகிறது. எல்லாரும் போகலாம்.

[இந்திரன் எழுந்து உள்ளே செல்கிறான்]

## காட்சி 2

[வைகுண்டத்தில் ஸ்ரீ மகாவிஷ்ணுவும், நாரதரும் பேசிக்கொண்டிருக்கின்றனர்.]

**விஷ்ணு** :—நாரதரே! வீணாக இதற்காக ஏன் கவலைப்படுகிறீர்கள்? இந்திரன் பெரிய அசடன். ஏதாவது கோபத்தில் சொல்லியிருப்பான். அதைப் பெரிதாக வைத்துக்கொண்டு தாங்கள் எங்கேயோ போகிறேன் என்கிறீர்களே!

நாரதர் :—அப்படி யில்லை சுவாமி! என்ன இருந்தாலும் தேவலோகத்துக்கு அதிபதி தேவேந்திரன் தானே? அங்கு இருக்கக்கூடாது என்று அவன் உத்தரவிட்டால் நான் கேட்கவேண்டியவன் தானே?

விஷ்ணு :—ஆம். நானும் இல்லை யென்று சொல்லவில்லை. நானும் இதில் என் அதிகாரத்தைச் செலுத்துவதற்கு இல்லை. ஆனால் சிநேக முறையில் வேண்டுமானால் இந்திரனிடம் இரண்டு வார்த்தை சொல்லிப் பார்க்கலாம். ஆனால் தாங்கள் வேண்டாம் என்கிறீர்களே!

நாரதர் :—ஆமாம், சுவாமி! வேண்டாம், வேண்டவே வேண்டாம். மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம் என்று தமிழர்கள் ஒரு வசனம் சொல்வார்கள்.

விஷ்ணு :—ஏது? வர, வர பூலோகம், அதிலும் தமிழ்நாடு தங்களுக்கு மிகவும் பிடித்துவிட்டாற்போல் தோன்றுகிறதே! பேசுவதற்குக் கையாள்வதற்குக் கூடத் தமிழ்ப் பழமொழியாக அல்லவா பார்த்துப் பிடிக்கிறீர்கள்!

நாரதர் :—ஆம், இங்கு வசிக்கும் பாரதியாருடன் நெருங்கிப் பழகிய பிறகு எனக்கும் செந்தமிழ் நாடெனும் போதினிலே, இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே.

விஷ்ணு :—அப்படியானால் நான் ஒன்று சொல்லுகிறேன், கேளுங்கள். தமிழ் நாட்டுக்

குத்தான் போய் அங்கு கொஞ்ச நாள் இருந்து விட்டு வாருங்களேன்!

**நாரதர்:**—அதே யோசனைதான் நானும் பண்ணினேன்.

**விஷ்ணு:**—ரொம்ப சரியான யோசனை. பூலோக வாசிகளுக்கும் தாங்கள் எவ்வளவோ சேவை செய்யக் கிடக்கிறது. ஆகவே தாங்கள் சுப்பிப் பாட்டியாகப் பிறந்து பூலோகத்தில் வசித்து வாருங்கள். அதற்குள் இந்திரன் உங்களுக்குச் சொல்லி அனுப்பாவிட்டால் என்னை ஏன் என்று கேளுங்கள். நிழலின் அருமை வெய்யிலில் தெரியும். என்ன நாரதரே! தமிழ்ப் பழமொழிகள் கையாள்வதற்குத் தங்களுக்கு மட்டுந்தான் தெரியும் என்று நினைக்காதீர்கள்! எனக்கும் தெரியும்.

**நாரதர்:**—பிரபோ! கபட நாடக சூத்ரதாரியான தங்களுக்குத் தெரியாததும் ஒன்று உண்டா? இப்பவும் தங்கள் சித்தப்படியே நான் பூலோகத்தில் சுப்பிப் பாட்டியாகப் பிறக்கத் தயார். சென்று வருகிறேன்.

**விஷ்ணு:**—சர்வ மங்களானி பவந்து! சர்வ மங்களானி பவந்து!

[நாரதர் செல்கிறார்.]

## காட்சி 3

[தேவலோகத்தில் தேவேந்திரன் தர்பார்.]

**தேவேந்திரன்:**—தேவர்களே! இன்று வெகு முக்கியமான காரியம் ஒன்றைப் பற்றி விவாதிப்பதற்காக, நான் உங்கள் எல்லாரையும் வர

வழைத் துள்ளேன் ! அந்தப் பொல்லாத நாரத முனிவரை நம் தேவ லோகத்தை விட்டு முன்ன மேயே விரட்டி யடித்திருக்க வேண்டும். அதை விடுத்து, கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வது போல் காரியம் செய்துள்ளோம். ...ஆம், அந்த நாரத முனிவர் இப்பொழுது எங்கு இருக்கிறார், என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று யாருக்காவது தெரியுமா ?

ஒரு **தேவன்** :—பிரபோ ! அவர் இங்கு செய்து கொண்டிருந்த வேலையைத் தற்சமயம் தமிழ் நாட்டில் செய்து கொண்டிருக்கிறாப் போல் தோன்றுகிறது. சுப்பிப் பாட்டி என்று பெயர் வைத்துக் கொண்டு கணவன், மனைவிக்கு இடையில் தினம் ஒரு கலகத்துக்குக் குறை யாமல் விளைவித்துக் கொண்டிருக்கிறார்.

**தேவேந்திரன்** :—அந்தப் பூலோக வாசிகளுக்கு நன்கு வேண்டும். வர, வர, தேவர்கள் ஞாபகமே கிடையாது அவர்களுக்கு. ஆமாம், அது இருக் கட்டும், நாம் நாரத முனியைத் தேவலோகத்தி னின்றும் விரட்டியதைப் பற்றி ஸ்ரீ மகாவிஷ்ணு வின் அபிப்பிராயம் என்ன, யாருக்காவது தெரியுமா ?

ஒரு **தேவன்** :—தாங்கள் மிகவும் பிசகான காரியம் செய்து விட்டதாகவே ஸ்ரீ மகாவிஷ்ணு கருதுகிறார் என்று தோன்றுகிறது.

**தேவேந்திரன்** :—பிசகான காரியமா ! (சிரிக் கிறான்.)

**ஒரு தேவன்** :—ஆமாம், பிரபோ! அப்படித் தான் ஸ்ரீ மகாவிஷ்ணு கருதுகிருர். ஏனெனில் நாரதர் கலகம் நன்மையில் முடியுமாம்!

**தேவேந்திரன்** :—பலே பேஷ்! நாரதர் கலகம் நன்மையில் முடியுமாமா? ரொம்ப அழகாய் இருக்கிறது ஸ்ரீ மகா விஷ்ணு சொல்வது! இப்பொழுது நாரத மகாமுனி நமக்குச் செய்து வைத்து விட்டுப் போன பெரிய "நன்மையை" யைப் பற்றிப் பேசுவதற்காகத்தான் உங்கள் எல்லாரையும் இங்கு அழைத்துள்ளேன். அன்று, ஊர்வசி மாத்திரம் அலங்கோலமான ஆடையுடன் ஆபாச நடனம் ஆடுவதைக் கண்டீர்கள். ஆனல் இன்ருே ரம்பை, திலோத்தமை, மேனகை எல்லாரும் அவளுடன் போட்டி போட ஆரம்பித்து விட்டனர். சீக்கிரமே தேவலோக ஸ்திரீகள் எல்லாருமே இந்த ஆபாச நடனத்தைக் கற்றுக்கொண்டு விடுவார்களோ என்று பயமாய் இருக்கிறது. ஏன் நாளைக்கு இந்திராணியே இப்படி ஆட ஆரம்பித்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. இப்பொழுது நீங்களே சொல்லுங்கள், இதெல்லாம் நன்மைக்காகவா?

**தேவர்கள்** :—இல்லை, இல்லவே இல்லை.

**தேவேந்திரன்** :—சீக்கிரமே இத் தூர்ப் பழக்கத்தை வேரோடு களைந்தெறிவதற்கு நாம் ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கிடையில் அந்த நாரத முனி பூலோகத்தில் சுப்பிப்

பாட்டியாகவே இருக்கட்டும். கணவன், மனைவிக்கு இடையில் சண்டை விளைவித்துக் கொண்டிருக்கட்டும். இங்கே திரும்பி வர வேண்டியதில்லை.

[ஒரு சேவகன் வருகிறன்.]

**சேவகன் :**—பிரபோ! மன்னிக்க வேண்டும். நான் என்ன சொல்லியும் கேட்கமாட்டேன் என்று போய்விட்டார்கள், போய்விட்டார்கள்!

**தேவேந்திரன் :**—யாரடா போய்விட்டார்கள்? எங்கேடா போய் விட்டார்கள்?

**சேவகன் :**—அவர்கள்தான் பிரபோ! இந்திராணி அவர்கள்தான். நான் என்ன சொல்லியும் கேட்கமாட்டேன் என்று சொல்லி விட்டார்கள்.

**தேவேந்திரன் :**—எங்கேடா போனார்கள்? பூலோகத்துக்காக? ஸினிமா – டாக்கி பார்ப்பதற்கா?

**சேவகன் :**—ஆமாம், பிரபோ! ஸினிமா – டாக்கி பார்ப்பதற்காகத்தான்.

**தேவேந்திரன் :**—போய் எத்தனை மணி நேரம் இருக்கும்?

**சேவகன் :**—நான்கு மணி நேரம் இருக்கும்.

**தேவேந்திரன் :**—பின் ஏண்டா, உடனேயே என்னிடம் வந்து சொல்ல வில்லை?

**சேவகன் :**—இந்திராணி யவர்கள் தங்களிடம் கண்டிப்பாகச் சொல்லக் கூடாது என்று தடுத்திருந்தார்கள்.

**தேவேந்திரன் :**—அப்படியானல் இப்பொழுது ஏண்டா வந்து சொன்னே ?

**சேவகன் :**—இப்பொழுது அவர்கள் சினிமா பார்த்துவிட்டுத் திரும்பி வந்து விட்டார்கள். அதனுல்—

**தேவேந்திரன் :**—ஏன், இப்பொழுது மாத்திரம் அவள் சினிமாவுக்குப் போனது எனக்குத் தெரியலாமாக்கும் ?

**சேவகன் :**—நான் சொல்லாவிட்டால் கூட தாங்கஃளே தெரிந்து கொண்டு விடுவீர்கள். அதனுல் நானே முன்னமேயே சொல்லி விடுவது நலம் என்று ஓடி வந்தேன்.

**தேவேந்திரன் :**—நீ சொல்லா விட்டால் நான் எப்படியடா தெரிந்து கொண்டிருக்க முடியும் ?

**சேவகன் :**—இந்திராணி அம்மாள் ஆடுகிற ஆட்டத்தைப் பார்த்தால் தானே தெரிகிறது.

**தேவேந்திரன் :**—என்ன, ஆட்டமா ?

**சேவகன் :**—ஆமாம், பிரபோ ! அன்றைக்கு ஊர்வசி ஆடின மாதிரியே, இந்திராணி அம்மாளும் ஆட ஆரம்பித்து விட்டார்கள் !

**தேவேந்திரன் :**—என்ன, இந்திராணியுமா அந்த ஆபாச நடனத்தை ஆட ஆரம்பித்து விட்டாள் ?

**சேவகன் :**—ஆமாம், பிரபோ !

**தேவேந்திரன் :**—ஈசுவரா ! இந்த நாரதர் ஊர்வசியை சினிமாவுக்கு அழைத்துக் கொண்டு

போக, இவ்வளவு பெரிய அனர்த்தம் விளைந்து விட்டதே! எனக்கு என்ன பண்ணுவது என்று தெரியவில்லையே! ஆ! என் தலை சுழலுகிறதே! ஆ!

[மூர்ச்சையாய்க் கீழே விழுகிறான்.]

## காட்சி 4

[தேவலோகத்தில் தேவேந்திரன் ஒரு படுக்கையில் சாய்ந்து கிடக்கிறான். தாதிகள் விசிறிக்கொண்டிருக்கிறார்கள்.]

**ஒரு தேவன்:**—தேவேந்திரா! ஏனோ இப்படி வீணாக மனதை அலட்டிக் கொள்கிறீர்கள்? இச் சிறு விஷயத்துக்காகத் தாங்கள் இப்படிக் கவலைப் படலாமா! இந்திராணி இந்த நடனத்தை ஆட ஆரம்பித்திருப்பது என்னமோ உண்மைதான். அவரைப் பார்த்துக்கொண்டு தேவலோகத்து ஸ்திரீகள் எல்லாருமே இந்த நடனத்தை ஆட ஆரம்பித்திருப்பதும் உண்மை தான். ஆனால் வீணாக ஏன் கவலைப் படுகிறீர்கள்? எல்லாம் கொஞ்சம் நாள் ஆனால் எல்லாரும் தன்னைப்போல் அந்த நடனத்தை மறந்து விடுவார்கள்.

**தேவேந்திரன்:**—நீர் சொல்வது உண்மைதான். கொஞ்ச நாள் ஆனால் மறந்துவிடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் திரும்பவும் இந்த மாதிரி ஆபாசப் படங்களைப் பார்க்கச் சென்று, அதில் உள்ளதைப் போல் நடிக்கத் தொடங்கி விட்டார்களானால் என்ன பண்ணுவது என்றுதான் கவலையா யிருக்கிறது.

**ஒரு தேவன்** :—தேவேந்திரா! தேவலோக வாசிகள் யாரும் பூலோகத்துக்குச் செல்லக் கூடாது என்று தாங்கள் உத்தரவிட முடியாதோ?

**தேவேந்திரன்** :—எப்படி முடியும்? இந்திராணியையே என்னல் கட்டுப்படுத்த முடியாதிருக்கும்போது, மற்ற தேவர்களை எப்படிக் கட்டுப்படுத்த முடியும்?

**தேவன்** :—ஏன் இந்த பூலோக வாசிகள் ஆபாசக் கதைகளைப் படம் எடுப்பதைத் தடுக்க முடியாதா?

**தேவேந்திரன்** :—எனக்கு என்னமோ முடியும் என்று தோன்றவில்லை.

**தேவன்** :—அப்படிச் சொல்லாதீர்கள்? அனந்த சயனன ஸ்ரீ மகாவிஷ்ணு இருக்கும் வரையில் நமக்கு என்ன குறை? அவரிடம் சென்று முறையிடுவோம், வாருங்கள். அவர் கட்டாயம் ஏதாவது வழி சொல்வார்.

**தேவேந்திரன்** :—அதுதான் சரி. ஆபத்பாந்தவன், அனுதரக்ஷகன ஸ்ரீ மகா விஷ்ணு இருக்கும் வரையில் நமக்கு என்ன குறை? தேவர்களே! வாருங்கள், ஸ்ரீ மகா விஷ்ணுவிடம் சென்று முறையிடுவோம்.

[தேவேந்திரனும் தேவர்களும் செல்லுகின்றனர்.]

## காட்சி 5

**[வைகுண்டத்தில் ஸ்ரீ மகாவிஷ்ணு தம் இருப்பிடத்தில் இருக்கிறார். எதிரே தேவேந்திரனும் மற்றும் உள்ள தேவர்களும் கை கூப்பி நிற்கின்றனர்.]**

ஸ்ரீ மகா விஷ்ணு (சிரித்துக்கொண்டே) :— தேவேந்திரா! இதற்குத்தானு இப்படி உருகிப் போய்விட்டாய்? கவலைப்படாதே! பூலோகத்தில், அதுவும் குறிப்பாகத் தமிழ் நாட்டில், ஆபாசப் படங்கள் வராமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்.

தேவேந்திரன் :—இதற்கென்று தாங்கள் ஏதாவது தனி அவதாரம் எடுக்கப் போகிறீர்களா, என்ன?

ஸ்ரீ மகா விஷ்ணு :—அவதாரம் ஒன்றும் எடுக்கப் போவதில்லை. ஆனுல் பூலோகத்தில் இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் யுத்தம் இன்னும் சற்றுக் கடுமையாக நடக்கும்படி ஏற்பாடு செய்யப் போகிறேன். இதனுல் இந்தியாவுக்குக் கச்சா பிலிம் எடுத்து வரும் சில கப்பல்கள் மூழ்கும்.

தேவேந்திரன் :—மூழ்கினுல்?

ஸ்ரீ மகா விஷ்ணு :—மூழ்கினுல் இந்தியாவில் பிலிம் குறையும். பிலிம் கட்டுப்பாடு ஏற்படும். இதனுல் இந்தியா வெங்கணும் உள்ள டாக்கி முதலாளிகள் மிகவும் திண்டாடிப் போவார்கள். முதலில் படம் எடுப்பதற்கே பிலிம் கிடைத்தால் தானே ஆபாசப் படம் எடுப்பதற்கு?

தேவேந்திரன் :—பிரபோ! இத்தகைய பெரிய உதவி செய்ததற்காகத் தங்களை நான் நமஸ்கரிப்பதைத் தவிர வேறு என்னுல் என்ன செய்ய

முடியும்? தங்களை ஆபத்பாந்தவன் என்றும், அனாத ரக்ஷகன் என்றும் வேதங்கள் முறை யிடு வதில் பிசகே இல்லை.

ஸ்ரீ மகா விஷ்ணு :—கவலைப்படாதே! போய் விட்டு வா......ஆமாம், இனி மேலாவது நார தரை தேவலோகத்துக்குள் அனுமதிக்கலா மல் லவா?

தேவேந்திரன் :—எதற்காகப் பிரபோ! அவ ரால் தானே இத்தனை அனர்த்தமும் விளைந்தது?

ஸ்ரீ மகா விஷ்ணு (சிரித்துக்கொண்டே) :— தேவேந்திரா! நீ நாரதருடன் இத்தனை காலம் பழகியும் அவர் குணத்தைத் தெரிந்து கொள்ள வில்லை. நாரதர் கலகம் நன்மையில் விளையும் என்னும் உண்மையைத் தெரிந்து கொள்ள வில்லை.

தேவேந்திரன் :—நன்மையா? ஆச்சரியமாய் இருக்கிறதே! இந்த நாரதர் கலகத்தினால் ஒரு நன்மையும் விளைந்ததாக எனக்குத் தெரிய வில்லையே?

ஸ்ரீ மகா விஷ்ணு :—இப்பவும் பூலோகத்தில் பிலிம் கட்டுப்பாடு ஏற்படப்போகிறதே, அது எவ்வளவு பெரிய நன்மை என்பதை யோசித் துப் பார். இதனால் தமிழ் நாட்டில் ஆபாசப் படங்கள் எவ்வளவு குறையும் என்பதையும் எண்ணிப் பார். இதனால் ஜனங்களின் ஒழுக்கம் எவ்வளவு உயரும் என்பதையும் நினைத்துப் பார்.

நாரதர் மாத்திரம் இப்படிக் கலகத்தை ஆரம்பித்து வைத்திராவிட்டால் இவ்வளவு பெரிய நன்மை விளையுமா என்பதை ஆலோசித்துப் பார்.

**தேவேந்திரன்** :—ஆம், பிரபோ ! தாங்கள் கூறுவது உண்மைதான். நாரதர் திரும்பவும் தேவலோகத்துக்குத் திரும்பி வரட்டும். நான் அவரைப் பூலோகத்துக்கு விரட்டியது பிசகுதான்.

**ஸ்ரீ மகா விஷ்ணு** :—ஆனால், அதனாலும் நன்மையே விளைந்திருக்கிறது என்பதைக் காண்பாய் ! நாரதர் சுப்பிப் பாட்டியாகப் பிறந்து கணவன் மனைவிக்கு இடையில் பூசலைக் கிளப்பிக் கொண்டிருக்கிறார் என்கிற விஷயம் மாத்திரம் உங்களுக்குத் தெரியுமே யொழிய, அதனால் எவ்வளவு பெரிய நன்மை விளைந்திருக்கிறது என்பது தெரியாது.

**தேவேந்திரன்** :—என்ன நன்மை, பிரபோ !

**ஸ்ரீ மகாவிஷ்ணு** :—என்னவா ! மேற்படி ஆபாசப் படம் நடந்துகொண்டிருக்கும் சமயம் கணவன், மனைவி பூசல் ஏற்பட்டு விட்டபடியால், இப்படிச் சண்டை போட்டுக்கொண்ட புருஷர்கள் எல்லாம் தங்கள் மனைவியை இந்தப் படத்துக்கு அழைத்துக் கொண்டு செல்லவில்லை. தமிழ் நாட்டு ஸ்திரீகள் பெரும்பாலோர் இந்தக் கோரத்தைப் பார்ப்பதினின்றும் காப்பாற்றப் பட்டனர்.

தேவேந்திரன் :—*பிரபோ! தாங்கள் சொல்வது சரியே. நாரதர் கலகம் நன்மையில் விளையும் என்பதை இன்றுதான் உணர்ந்தேன். பூலோகத்தில் அவர் சுப்பிப் பாட்டியாக இருந்து வேலை செய்தது போதும். இனிமேல் தேவலோகத்துக்கே திரும்பி விடலாம் என்று சொல்லுங்கள்.*

ஸ்ரீ மகா விஷ்ணு :—*அப்படியே!*

தேவர்கள் :—*(பாடுகின்றனர்.)*

ரகுபதி ராகவ ராஜாராம்
நாரதர் கலகம் செய்வாராம்
ரகுபதி ராகவ ராஜாராம்
நன்மையில் கலகத்தை முடிப்பாராம்.

# தலைவலி எப்படி

"என்ன கிருஷ்ணய்யர்! நம்ம ராமுவின் தங்கைக்கு வருகிற வெள்ளிக்கிழமை கலியாண மாம். 'நீ கட்டாயம் வந்தால்தான் ஆச்சு' என்று ராமு கடுதாசு போட்டிருக்கிறான். அவாள் அவாள் கலியாணத்துக்கு லீவு கிடைப்பதே இந்தக் காலத்தில் கஷ்டமா யிருக்கே, இதற்கு எப்படி ஆபீசில் லீவ் கொடுக்கப் போகிறான்! நல்ல வேளை, எங்கம்மா ரொம்ப புத்திசாலி. எனக்கு வேலை கிடைப்பதற்கு முன்னமேயே கலியாணத்தைப் பண்ணி வைத்துவிட்டாள்" என்று கிருஷ்ணய்யரைப் பார்த்துச் சொன்னேன்.

"இதற்குத்தானா பிரயாதம்? பாட்டி செத்துப் போய்விட்டாள் என்று லீவுக்கு எழுதேன்" என்றார்.

"நன்றா யிருக்கிறது நீர் சொல்கிறது? நல்ல சுப காரியத்திற்குச் சாவோலையா போடச் சொல்றேள்? போனால் போகிறதென்று அப்படியே எழுதலாம். ஏன், போன வருஷம் என் தம்பிக்குப் பூணூல் போட்டேனே, இல்லையோ, அதற்கு அப்படித்தான் எழுதினேன். அதோடு இந்த வருஷம் ஆறு தடவை பாட்டி செத்தாள் என்று எழுதியாய் விட்டது. கடைசியாக பாட்டி நிஜமாகவே செத்துப் போய்விட்டபடியால் இனி

மேல் அப்படி எழுத முடியாது. பாட்டி ஒருத்தி இருந்தால் தானே அவள் செத்தாள் என்று எழுதலாம்?" என்று கிருஷ்ணய்யரைக் கேட்டேன்.

"சரி....என் அப்பாவுக்குச் சிராத்தம் என்று எழுதேன்."

"சரியாய்ப் போச்சு! இந்த வருஷம் இது வரையில் மூன்று தடவை அப்பாவுக்குச் சிராத்தம் என்று எழுதியாய்விட்டது. இப்பொழுது நான்காவது தடவை எழுதினேனானால் அந்தப் பாழும் மானேஜர் இருக்கிறானே, அவனும் பிராமணன்தான், கண்டுகொள்வான்; என் மானம் போய்விடும்."

"சரி. அப்பா தான் வேண்டாம். அம்மாளுக்கு சிராத்தம் என்று எழுதேன்."

"சரிதான். வேறு வினை வேண்டாம். இது என் அம்மா காதில் பட்டாலோ, அவ்வளவுதான், வீட்டை இரண்டு பண்ணி விடுவாள். 'ஏண்டாப்பா! நான் ஒருத்தி இருக்கிறது உனக்கு இடைஞ்சலா யிருக்காக்கும்! எல்லாம் அவ கொடுக்கிற மருந்துடா, மருந்து' என்று சொல்லி என் மண்டையை உருட்டிவிடுவாள். எனக்கு லீவே வேண்டாம். ராமு கோபித்துக் கொண்டால் கோபித்துக் கொள்ளட்டும். எனக்கு லீவு கிடைக்கவில்லை யென்று எழுதிவிடுகிறேன்" என்று சற்றுச் சலிப்பாகவே சொன்னேன்.

இதைப் பார்த்துக் கிருஷ்ணய்யர், "என்னடா இது! இதற்காக ஒருவன் கலியாணத்

துக்கு வரவில்லை என்று எழுதுவாஞ? வீட்டிலே உட்கார்ந்து கொண்டு 'உடம்பு சரியாயில்லை. இரண்டு நாள் லீவ் வேண்டும்' என்று எழுதிப் போட்டுவிடேன். இதுகூடவா சொல்லிக் கொடுக்கணும்?" என்ருர்.

"நல்ல யோசனை சொல்லிக் கொடுத்தீர் ஐயா! வேலைக்கு வேறு வெடி வேண்டாம். 'உடம்பு சரியாயில்லை' என்று எத்தனையோ தடவை லீவ் எழுதிப் போட்டிருக்கிறேன். எங்கள் மானேஜருக்கே என் மீது சந்தேகம் தான். 'என்னய்யா! கொட்டாப்புளியாட்டமாக இருக்கிறீர். நினைத்தால் உடம்பு சரியாயில்லை என்று எழுதுகிறீர். அடுத்த தடவை உமக்கு உடம்பு சரியா யில்லாவிட்டால் உம்மை என் ஆபீசில் வைத்துக் கொள்வதற்கு எனக்கும் சரிப்படாது' என்று போன வாரம் தான் சொன்ஞர்" என்றேன்.

"என்னடா என்னமோ பேத்தறே! நான் ஒரு யுக்தி சொல்லிக் கொடுக்கிறேன். அதன் படி கேளு. இன்றைக்கு என்ன திங்கட்கிழமையா? வெள்ளிக்கிழமை தானே உனக்கு லீவு வேண்டும்!... இன்னியே பிடித்து உடம்பு சரியாயில்லாதவன்போல் பாசாங்கு பண்ணேன். வெள்ளியும் சனியும் லீவ் எழுதிப் போட்டுவிட்டால் சந்தேகமே படமாட்டான். ஞாயிற்றுக் கிழமையோ லீவாய்விட்டது. மூன்று நாளும் கலியாணச் சாப்பாடு சாப்பிட்டுவிட்டுத் திங்கட்கிழமை ஆபீசுக்குப்போனுல்போகிறது" என்ருர்.

கிருஷ்ணய்யர் சொன்ன யோசனை என்னமோ எனக்குச் சரியாய்த்தான் பட்டது. அதன் படியே நடக்கவும் ஆரம்பித்தேன்.

திங்கட்கிழமை கிராப்பைக் கூடச் சரியாக வாரிக் கொள்ளாமல் முள்ளம்பன்றியின் மயிரைப் போல் வைத்துக் கொண்டு போனேன். மானேஜர் கேட்டதற்கு "ஒரே தலைவலி காலை முதற் கொண்டு" என்று பதில் சொன்னேன்.

செவ்வாய்க்கிழமை ஆபீஸில் 'லொக்கு' 'லொக்கு' என்று இருமிக்கொண்டே இருந்தேன்.

புதன்கிழமை ஆபீசில் இரண்டு தடவை மயக்கம் போட்டாற்போல் விழுந்தேன்.

புதன்கிழமை சாயங்திரம் மானேஜர் என்னைக் கூப்பிட்டனுப்பினார்.

"என்னய்யா! திங்கட்கிழமையிலிருந்து உங்கள் உடம்பு சரியாயில்லைபோலிருக்கிறதே, என்ன சமாசாரம்?" என்று விசாரித்தார்.

"ஒன்றுமில்லை ஸார். திங்கட்கிழமை ஒரே தலைவலியாய் இருந்தது. நேற்று ஒரே இருமலாய் இருந்தது. இன்று ஒரே மயக்கமாய் இருக்கிறது" என்றேன்.

இதைக் கேட்டதும் மானேஜர் மனம் இளகி விட்டது. "சரி, நான் ஒரு காரியமாக இன்று ஊருக்குப் போகிறேன். உம் உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும். நாளையிலிருந்து மூன்று நாள் லீவ் எடுத்துக் கொள்ளும்" என்று சொன்னார்.

நானும் லீவ் எடுத்துக்கொண்டேன். வியாழக்கிழமை இரவு புறப்பட்டு வெள்ளிக்கிழமை காலை ராமுவின் தங்கை கலியாணத்துக்குப் போய்ச் சேர்ந்தேன்.

ராமு என்னைப் பார்ப்பதற்கு ரொம்ப சந்தோஷப்பட்டான். பிறகு "இவர்தான் மாப்பிள்ளை" என்று ஒரு அதிரூப சுந்தரனை அறிமுகப் படுத்தினான். நான் அவருடைய முக அழகைப் பருகிக்கொண்டிருக்கையில், "இவர்தான் சம்மந்திப் பிராமணர். மாப்பிள்ளையின் தகப்பனார். சென்னையில் ஒரு கம்பெனியில் இருக்கிறார்" என்றான்.

மாப்பிள்ளை இத்தனை அழகு சுந்தரனாய் இருக்கும்போது, அவர் தகப்பனார் எப்படியிருக்கிறாரோ பார்க்கலாம் என்று திரும்பினேன்.

"என்ன, ஸார்! தலைவலி இப்போது எப்படி இருக்கிறது?" என்று கேலிச் சிரிப்புடன் கேட்டார் சம்மந்திப் பிராமணரான எங்கள் ஆபீஸ் மானேஜர். அவர் சிரிப்பில் இடி விழ!

# அடையாளம்

"என்னமோ, கோடை வீவாயிற்றே, இதைச் சாக்கு வைத்துக்கொண்டாவது அத்திம்பேர் வீட்டில் கொஞ்ச நாளைக்குச் சாப்பிட்டு விட்டு வரலாமென்று சிதம்பரத்திலிருந்து பட்டணத்திற்குப் புறப்பட்டு வந்தேன். ஆனால் வந்த இரண்டு நாளைக்குள்ளாகவே, ஏண்டா ஊரை விட்டு வந்தோமென்றாய்விட்டது.

ஏனென்றால் காலையில் காப்பி சாப்பிட்டு விட்டு வீட்டை விட்டுக் கிளம்பினால் பிறகு வீடு வந்து சேர்வது ராத்திரி பத்து மணிக்குத்தான். வழி தெரியாமல் ஒரு தெருவிலிருந்து மற்றொரு தெருவு, மற்றொரு தெருவிலிருந்து இன்னொரு தெருவிற்குமாக அலைந்து கொண்டிருப்பேன். பஸ்ஸோ, டிராமோ ஏறித் தொலைப்போமென்றால், எந்த டிராமில் ஏறினால் எங்கே கொண்டு போய் விடுமென்பது தெரியாது.

சென்னையில் ஒரு தடவை பார்த்த இடத்தையே மற்றொரு தடவை பார்க்கும்போது அடையாளம் தெரிகிறதில்லை. ஒரு தடவை எழும்பூர் ஸ்டேஷனுக்கு எதிரேயே நின்று கொண்டு, "எழும்பூர் ஸ்டேஷன் எங்கே?" என்று விசாரித்திருக்கிறேன்.

ஆனால் நான் அப்படி விசாரித்ததில் ஆச்சரியம் அதிகம் இல்லை; நான் விசாரித்தவர்கள் சொன்ன பதிலில்தான் ஆச்சரியம் அதிகம்.

ஒருவர் "இன்னும் இரண்டு மைல் இந்தப்பக்கம் போகவேண்டும்" என்று சொல்லி ஒரு பக்கத்தை காண்பித்தார். மற்றொருவர் "இன்னும் இரண்டு மைல் இந்தப் பக்கம் போகவேண்டும்" என்று சொல்லி எதிர்ப்பக்கத்தைக் காண்பித்தார். இன்னொருவர் தமக்குத் தெரியாதென்றார். (இவர் மகாராஜனாயிருக்கட்டும்!) இன்னொருவர் "எக்மோர் ஸ்டேஷன் இங்கெங்கேயோ தான், ஸார், இருப்பதாகக் கேள்வி. விசாரியுங்கள்" என்றார்.

இப்படி விசாரித்துக் கொண்டிருக்கும் பொழுது திடீரென்று ரயில் ஊதின சப்தம் கேட்டு, அத்தனை நாழியும் அந்த ஏழும்பூர் ஸ்டேஷன் வாசலிலேயே நின்று கொண்டிருந்தேன் என்று அறிந்தேன்.

ஆனால் என் புத்தியை மெச்சிக் கொள்வதா, அல்லது எனக்குப் பதில் சொன்னார்களே அவர்கள் புத்தியை மெச்சிக் கொள்வதா வென்று எனக்கு நிச்சயப்படவில்லை. ஒருவேளை அவர்களும் கோடை லீவிற்காக என்னைப்போல் அத்திம்பேர் வீட்டுக்கு வந்து வழி தெரியாமல் அலைகிறார்களோ என்னமோ!

இந்தத் தொல்லையை நிவர்த்தி செய்வதற்காக, இனிமேல் பட்டணத்திற்குப் புதிதாக வருகிறவர்களுக்கும் பட்டணத்தில் இருக்கும்வரை எனக்கும் உபயோகப்படும்படியாக எல்லா இடங்களுக்கும் அடையாளம் எழுதி வைத்திருக்

கிறேன். அவற்றில் சிலவற்றைக் கீழே தந்திருக்கிறேன்.

இதைப் புஸ்தக ரூபமாக வெளியிட வேண்டுமென்பது என் அவா. யாராவது இந்தக் கைங்கரியத்தை ஏற்றுக்கொண்டால், கையெழுத்துப் பிரதிகளுடன் கூட, என் நன்றியறிதல் முழுவதையும், அவர்களிடமே சமர்ப்பித்து விடுகிறேன்.

எழும்பூர் :—ஏதாவது ஓர் எலெக்டிரிக் டிரெயினில் ஏறிக்கொள்ளுங்கள். (டிக்கெட் வாங்கின பிற்பாடுதான்.) தப்பித் தவறி நீங்கள் தாம்பரமோ, பீச்சோ போய்ச் சேர்ந்து விடுவீர்கள். பரவாயில்லை. ஆனால் இனிமேல் மிக சுலபம். தாம்பரமோ, பீச்சோ போய்ச் சேர்ந்தவுடன் அந்த இடங்களைவிட்டுப் புறப்படும் வண்டியில் மறுபடியும் ஏறிக்கொள்ளுங்கள். இவை எழும்பூர் வழியாய்ப் போய்த்தான் தீரவேண்டும். ஆனால் ஒன்று. ஒவ்வொரு ஸ்டேஷன் வந்ததும், தலையை வண்டிக்கு வெளியில் நீட்டி அது என்ன ஸ்டேஷன் என்று கவனிக்கவேண்டும். எழும்பூர் என்கிற பெயரைக் கண்டதும் இறங்கிவிட வேண்டும்.

வங்காளக் குடாக்கடல் :—இந்தியாவிற்குக் கிழக்கே வங்காளக் குடாக்கடலும், மேற்கே அரபிக்கடலும், தெற்கே இந்து மகா சமுத்திரமும், வடக்கே... (என்ன கடல் என்று ஞாபகமில்லை) இருப்பதாக வாசித்தது ஞாபகமிருக்கிறதா ?

அந்த வங்காளக் குடாக்கடல் தான் நான் இப்பொழுது சொல்வது.

ஆனல் இந்தக் கடலைக் கண்டுபிடிக்க நான் பட்டபாடு திண்டாட்டமாய் முடிந்தது.

நான் பட்டணத்திற்குப் புறப்பட்டு வந்ததே என் அத்திம்பேர் வீட்டில் சாப்பிட வேண்டுமென்பதைத் தவிர சமுத்திரத்தையும் பார்க்க வேண்டுமென்று தான். அதனல் எழும்பூர் ஸ்டேஷனை விட்டு ரிக்ஷாக்காரர்கள், மோட்டார் டிரைவர்கள் புடைசூழ வெளியே வந்ததும், நான் கேட்ட முதல் கேள்வி, சமுத்திரம் எங்கேயென்பது தான்.

இதற்குக் கிடைத்த பதில்களையெல்லாம் எழுதினல் நீங்கள் சிரித்துச் சிரித்து உங்கள் வயிறு புண்ணய்ப் போய்விடும். உங்களுக்கு அந்தச் சிரமம் கொடுக்காதிருப்பதற்காக, ஒரே பதில் மாத்திரம் எழுதுகிறேன். ஒருவர் "சமுத்திரமே இந்த ஊரில் கிடையாதே" என்ருர். இத்தனைக்கும் அவருக்கு ஹார்பரில் குமாஸ்தா வேலை!

ஆனல் நான விடுகிறவன்? சமுத்திரத்திற்கு வழி கண்டு பிடிக்காமல் விடுவேன? நான் கையாண்ட வழியைச் சொல்கிறேன். அதை நீங்களும் பின் பற்றலாம். சற்று சிரமத்தைப் பார்க்காமல் காலமே ஐந்தரை மணிக்கே எழுந்து விடுங்கள். கொஞ்ச நாழியானதும் கட்டாயமாகச் சூரியன் கிழக்கே உதித்துத் தான் தீர்வான். அதுவும் கிழக்கே உதிப்பானே

யொழிய மேற்கில் உதிக்கமாட்டான். ஆகையால் காலை ஆறு மணிக்குச் சூரியன் இருக்கும் திக்கை நோக்கி ஓடுங்கள். கட்டாயமாய்ச் சமுத்திரத்தைப் போய்ச் சேர்வீர்கள். தேகப்பயிற்சிக்கு தேகப்பயிற்சி ; ஸ்நானத்திற்கு ஸ்நானம் !

**ரிப்பன் பில்டிங்ஸ்** :—இந்தக் கட்டிடத்திற்குத் திடீரென்று என்றுமில்லாத கிராக்கி வந்து விட்டது. முன்னெல்லாம் நமது கார்ப்பொரேஷன் மெம்பர்கள் கொட்டாவி விட்டுக்கொண்டு தூங்கிக் கொண்டிருந்த இடம் இப்பொழுது "படித்த ஓட்டர்க"ளால் நிரம்பப் பட்டிருக்கிறது. ஆகையால் இந்த இடம் உங்களுக்குத் தெரிய வேண்டுமானுல் யாரையாவது "படித்த ஓட்டர்க"ளைக் கேளுங்கள்.

**சென்ட்ரல் ஸ்டேஷன்** :—பூ ! இது தெரியாதா? ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு எதிரே சென்ட்ரல் ஸ்டேஷன்.

**ஜெனரல் ஆஸ்பத்திரி** :—இதைக் கண்டு பிடிப்பது மிக சுலபம். சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு எதிரேயிருப்பதுதான் ஜெனரல் ஆஸ்பத்திரி.

**ஹைகோர்ட்டு** :—உங்களுக்கு ஹைகோர்ட்டுக்குப் போக வேண்டுமென்ருல் கோர்ட்டில் வியாஜ்யம் இருந்துதான் தீரவேண்டுமென்கிற அவசியம் இல்லை. இதைக் கண்டு பிடிப்பதற்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று பகலில் கண்டு பிடிக்கும் வழி. மற்ருென்று இரவில் கண்டு பிடிக்கும் வழி.

பகலில் கண்டுபிடிக்கும் வழி:—நல்ல பதிஞேறு மணி வெய்யிலில் எங்கேயாவது பஸ் ஸ்டாண்டில் போய் நின்றுகொண்டிருங்கள். அப்பொழுது பக்கத்திலேயே வக்கீல்கள் யாராவது ஹைகோர்ட்டுக்குப் போவதற்கு வந்து கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு பஸ் சார்ஜ் கொடுத்துக் கூட்டிக்கொண்டு போக நீங்கள் சம்மதப்பட்டால் உங்களை ஹைக்கோர்ட்டுக்கு கூட்டிக் கொண்டு போவதுமன்றி தினம் ஹைக்கோர்ட்டுக்குப் போகவேண்டிய வழியையும் சொல்லிக் கொடுப்பார்கள். இந்தச் சங்கடம் இல்லாமலிருக்க வேண்டுமானல் கீழே சொல்லப்பட்டிருக்கும் இரண்டாவது வழிதான் சிறந்தது.

இரவில் கண்டுபிடிக்கும் வழி:—இந்த வழியை அநுசரிக்குமுன் ஒரு விஷயத்தை நன்ருக மனதில் பதிந்துகொள்ள வேண்டும். அல்லது ஒரு கடுதாசியிலாவது பதிந்துகொண்டு கடுதாசியைக் கையிலேயே வைத்துக்கொண்டிருக்க வேண்டும். அதுதான் லைட் ஹவுஸ். ஹைகோர்ட் கட்டடத்தின் மேல் தான் இது அமைக்கப்பட்டிருக்கிறதென்ற விஷயம் தெரிந்ததே. ஆகையால் இரவில் தரையிலிருந்து 43 டிகிரி உயரத்தில் ஆகாயத்தை உற்று நோக்கினீர்களானல், பளிச் பளிச்சென்று ஒரு வெளிச்சம் தெரியும். அது தான் லைட் ஹவுஸ். அதனடியில்தான் ஹைகோர்ட் அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறது.

மூர்மார்கெட்:—இதைக் கண்டுபிடிக்க வேண்டுமானல், சற்று ஆகாசத்தை நோக்கிக்

கொண்டே நடந்து போங்கள். ஆனால் உங்கள் கவனமெல்லாம் உங்கள் சட்டை ஜேபியின் மீதே இருக்கட்டும். நீங்கள் இப்படிப் போய்க்கொண்டிருக்கையில் மணிபர்ஸைத் தூக்கிக்கொண்டு போகும் சிரமம் உங்களுக்குக் கொடுக்க வேண்டாமென்று யாராவது இரக்கமுள்ள கனவான் ஒருவர் அதை எடுத்துக் கொள்வார். உடனே "சடக்"கென்று நில்லுங்கள். அதுதான் மூர் மார்க்கெட்.

உங்களுக்கு உங்கள் மணிபர்ஸ் திரும்பி வேண்டுமென்றால், அவரை நோக்கி "ஹி, ஹி" என்று சிரியுங்கள். அவரும் உங்களைப் பார்த்து, "ஹி, ஹி" என்று சிரித்து விட்டு, 'என்ன ஸார், இவ்வளவு அஜாக்கிரதையாய் மணிபர்ஸை எடுத்துக்கொண்டு போகிறீர்களே! எவனாவது அயோக்கியப் பயல் தூக்கிக்கொண்டு போய் விட்டால் என்ன செய்வது?" என்று சொல்லிக் கொண்டே திருப்பிக் கொடுப்பார்.

**பயித்தியக்கார ஆஸ்பத்திரி :**—இதற்கு நான் இதுவரையில் போனதில்லை யாதலால் அடையாளம் எழுதிவைக்கவில்லை. இது எங்கே இருக்கிறதென்று தெரிந்துகொள்ள வேண்டிய ஆஸ்பதமும் உங்களுக்கு ஏற்பட வேண்டாம் என்று வேண்டிக் கொள்கிறேன்.

**கவர்னர் மாளிகை :**—இதற்கு உங்களுக்கு அடையாளம் தெரியவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அடையாளம் தெரிந்து போனாலும் உங்களை உள்ளே விடப் போகிறதில்லை.

என் அத்திம்பேர் வீடு:—இத்தனை இடங்களுக்கு அடையாளம் எழுதி வைத்துக்கொண்டவன், இன்னும் நான் குடியிருக்கும் வீட்டிற்கு அடையாளம் எழுதிவைக்கவில்லை. இதனால் ஒவ்வொரு இரவும் நான் வீடு வந்து சேருவது பிரம்மப் பிரயத்தனமாய்ப் போய்விடுகிறது. ஏதோ பகவான் அநுக்கிரகத்தினால் தான் நான் தினந்தோறும் இரவு பத்து மணிக்காவது வீடு வந்து அடைகிறேன்.

ஆனால் நேற்று என்னமோ இந்த பகவத் அநுக்கிரகம் என்னைவிட்டுப் போய்விட்டது. வீடு தெரியாமல் எங்கெங் கெல்லாமோ சுற்றி விட்டுக் கடைசியில் ராத்திரி பதினோறு மணிக்கு ஒரு வீட்டுத் திண்ணையில் படுத்து உறங்கினேன். காலையில் எழுந்ததும், அந்த வீட்டுச் சொந்தக்காரரை நான் போகவேண்டிய தெருவிற்கு 'அடையாளம் கேட்கலா'மென்று வாயெடுத்தேன்.

என்ன ஆச்சரியம்! என் அத்திம்பேர் அந்த வீட்டின் உள்ளேயிருந்து வெளியே வந்து, "ஏண்டா கிட்டு! ராத்திரி முழுக்க எங்கேடா போயிருந்தே?" என்று கேட்டார்.

நான் விழுந்து விழுந்து சிரிக்காமல் வேறு என்ன பண்ணுவது? வேறு எங்கேயோ தங்குகிறேனென்று நினைத்துக்கொண்டு எங்கத்திம்பேர் வீட்டுத் திண்ணையிலேயே இரவு முழுவதும் படுத்து உறங்கியிருக்கிறேன்!

# ஹோட்டல் சாப்பாடு

அப்பாடி! சரசுவை அவள் பிறந்தகத்துக்கு அனுப்பினாலும் அனுப்பினேன், (என்ன ஸார் சிரிக்கிறீர்கள்?...சரி, அவளாக நான் என்ன சொல்லியும் கேட்காமல் போனாலும் போனாள் என்றுதான் வைத்துக் கொள்ளுங்களேன்) என் சாப்பாட்டு வாயில் மண் விழுந்து விட்டது.

எனக்கும் சரசுவுக்கும் எதாவது வாக்கு வாதம் வரும்போதெல்லாம் அவள் ஒரே வார்த்தையை அடிக்கடி சொல்லுவதுண்டு.

"நானொருத்தி வீட்டில் இல்லாவிட்டால் தெரியும். உங்கள் சோற்று வாயில் மண்தான் விழும்" என்பதுதான் அந்த வார்த்தை.

எனக்கு இதைக் கேட்கும்போதெல்லாம் சிரிப்பாகத்தானிருக்கும். இடறி விழுந்த இடத்திலெல்லாம் சாப்பாட்டு ஹோட்டல்கள் நிறைந்திருக்கும் இந்நாளில் சாப்பாட்டுக்குத் திண்டாடுவானேன் என்று ஆச்சரியப்படுவேன்.

இப்பொழுது சரசு என்னிடம் கோபித்துக் கொண்டு, ஊருக்குப் புறப்பட்டுப் போன பிறகு தான் அவள் சொன்ன வார்த்தையின் உண்மை புலனாகின்றது.

சரசு ஊருக்குப் புறப்பட்டுப் போன மறு நாள், ஹோட்டலில் சாப்பிடுவதற்காக இலையின்

முன் உட்கார்ந்திருந்தேன். அப்போது என் ஞாபகம் என் மனைவி மீது சென்றது. வீட்டில் நான் சாப்பிட இலையின் முன் (அதுதான் வெள் ளித் தட்டின் முன்) உட்கார்ந்ததும், இவள் என்னைக் கேட்கும் கேள்வி ஒன்றே ஒன்றுதான்.

"இந்தாங்கோ! உங்களைத் தானே! சாப்பிட உட்கார்ந்து விட்டேளே! சந்தியாவந்தனம் பண்ணினேளா?" என்பதுதான் அந்தக் கேள்வி. இது அவளுக்கு என் தாயாரிட மிருந்து படிந்த ஒரே ஒரு "நல்ல" வழக்கம்.

பரிமாறுகிறவர்கள் யாராவது, "என்ன ஸார்! ஸந்தி ஆய்ட்டதோ?" என்று கேட்கப் போகிறார்களோ என்று பயந்து என் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக்கொண்டு ஏதோ யோசனையி லாழ்ந்திருந்தேன்.

"டக், டக், டக், டக்," என்று நான்கு 'டக்' சத்தம் கேட்கவே, திரும்பிப் பார்த்தேன். பரி மாறுபவன் எனக்குப் பரிமாறி விட்டுப் பக்கத்து இலையில் பரிமாறிக் கொண்டிருந்தான்.

"டக்!"

இது பச்சடி.

"டக்!"

இது கறி.

"டக்!"

இது கூட்டு.

"டக்!"

இது ஊறுகாய்.

இந்த மாதிரி அவன் வைக்கும் ஒவ்வொரு பதார்த்தத்துக்கும், அதை வைக்கும்போது, 'டக்' கென்று ஒரு அடி கரண்டியால் இலையில் அடித்தான். அவன் அடிக்கும் வேகத்தில் ஒன்று கரண்டி கிழிந்து போகவேண்டும், அல்லது இலை நசுங்கிப் போகவேண்டும்—இல்லை, கரண்டி நசுங்கிப் போகவேண்டும், அல்லது இலை கிழிந்து போகவேண்டும் என்பது போலிருந்தது.

அவன் கரண்டி நசுங்கிற்றோ, இல்லையோ, எனக்குத் தெரியாது. ஆனால் என் இலை கிழிந்தது மாத்திரம் உண்மை. அந்தக் கிழிசல் வழியாய் பச்சடியும், கூட்டும் கீழே ஓடினதும் வாஸ்தவம். அவன் அப்படி 'டக், டக்,' என்று அடிப்பது, நம்மைப் பார்த்து, "உம்மைத்தான் ஸார்! இரண்டாந் தடவை கேட்காதேயும். கேட்டால் இந்தக் கரண்டியாலேயே உம் தலையில் 'டக்'கென்று ஒரு அடி" என்று சொல்வதுபோ லிருந்தது.

இதற்குள் சாப்பாடு வந்தது. "டக், டக்". தாம்பாளத்தில் ஒரு அடி, இலையில் ஒரு அடி. இதன் பயனாக இலையில் விழுந்தது ஒரு காக்காப் பிடி அன்னம்.

"என்ன அய்யர்வாள் ?" என்று முகத்தில் கேள்விக் குறியுடன் என்னைப் பார்த்துக் கேட்டான் பரிசாரகன். இதற்கு "என்ன ஸார்! சாதம் போதுமா ?" என்று அர்த்தம். நானோ வெகு சங்கோஜப் பிராணி. எங்கம்மாகூட, "எங்க அம்பி அவன் ஆம்படையாள் போட்

டால்தான் வயிறு நிறையச் சாப்பிடுவான்" என்று சொல்வது வழக்கம்.

என்னதான் சங்கோஜியா யிருந்தாலும், கலத்தில் ஒரு காக்காப் பிடி அன்னத்தைப் போட்டுவிட்டு, "இன்னும் வேண்டுமா?" என்று கேட்டால், "இன்னும் வேண்டும்" என்று சொல்ல யாருக்குத்தான் தைரியமிருக்காது? ஆகவே என் தைரியத்தை யெல்லாம் ஒன்று சேர்த்து, "இன்னும் கொஞ்சம்" என்றேன்.

"டக், டக்"—இன்னொரு காக்காப் பிடி அன்னம்.

"இன்னும் கொஞ்சம்."

"டக் டக்"—இன்னொரு காக்காப் பிடி.

இதற்கு மேல் எந்த மனிதன் வாயை விட்டுக் கேட்பான்? பரிசாரகனே எனக்குச் சளைக்க மாட்டான்போல் தோன்றிற்று. இந்த மாதிரி இவனைக் கேட்டுக் கேட்டு வாங்கினாலும், நூறு தடவை கேட்டாலும், பாதி வயிறு நிரம்பாது போலிருந்தது. ஆகவே மரியாதைக்காக, "போதும், போதும்" என்றேன். பரிசாரகனும் "அப்பாடா!" என்று பெரு மூச்சு விட்டவனாய் அப்பால் நகர்ந்தான்.

நான் போதும் என்று சொன்னதற்கு இன்னொரு காரணமும் உண்டு. என்னுடன் கூட வந்து உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண் டிருந்தவர்கள் எல்லாம் ஒன்று "வயிற்று வலிக்காரர்களா" யிருக்க வேண்டும், அல்லது வேறு எங்கே

யாவது வயிற்றை நிரப்பிவிட்டு, இங்கு பெரு மைக்காகச் சாப்பிட வந்தவர்களாயிருக்க வேண்டும்! ஏனெனில் அவர்கள் பரிசாரகன் முதல் தடவை போட்ட அந்தக் காக்காப்பிடி அன்னத்துக்கே, "போதும் போதும்" என்று தலையையும், கையையும் ஆட்டினது மல்லாமல், நான் "இன்னும் கொஞ்சம்" என்று கேட்டதற்கு என்னை மிகவும் ஆச்சரியத்துடன் விழித்துப் பார்க்க ஆரம்பித்துவிட்டனர்.

இதற்குள் ஸாம்பார் வந்தது. "என்ன அய்யர்வாள்! வற்றல் குழம்பு இருக்கிறது. ஸாம்பார் வேண்டுமா?" என்று கேட்டான் பரிசாரகன்.

"அட பாவி! வற்றல் குழம்பு இருந்தால், முதலில் ஸாம்பாரை ஊற்றிவிட்டு, பிறகு அதையும் ஊற்றுவதுதானே!"

இது மனதுக்குள். அவனிடம் வாய்விட்டுச் சொல்ல முடியுமா? சொன்னால் அவன்தான் என்னைச் சும்மா விடுவானு?

"கொஞ்சம் ஸாம்பார் போடுங்கோ" என்றேன்.

ஒரு உத்தரணி ஸாம்பார் கலத்தில் விழுந்தது.

"தான் ஒன்று போடுங்கோ!"

திரும்பவும் ஒரு உத்தரணி ஸாம்பார்தான் விழுந்தது. தானைக் காணேம். சட்டியில் இருந்தால் தானே கரண்டியில் வரும்?

இதற்குள் கலத்தில் இருந்த கறி தீர்ந்து விட்டது.

"கொஞ்சம் கறி போடுங்கோ."

அப்போதுதான் மேல் பார்வை பார்க்க வந்த ஹோட்டல் சொந்தக்காரர், "இந்தா, அய்யர்வாளுக்கு ரஸம் போடு" என்றார்.

"இல்லே ஸார்! கறி" என்றேன் நான்.

அப்பொழுது பரிசாரகன் அவசரம் அவசரமாக மோரைத் தூக்கிக்கொண்டு ஓடி வந்தான்.

"என்ன ஸார், மோரா!" என்றான்.

எனக்கா பெரிய தர்ம சங்கடமாயிருந்தது. மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று நினைத்து, "ஆமாம்" என்று தலையை ஆட்டிவிட்டு, மோரை ஊற்றிக் கொண்டு சாப்பிட்டு விட்டு எழுந்துவிட்டேன்.

ஹோட்டலில் சாப்பிட்டது எனக்கு அரைக் கால் வயிறு கூட நிரம்பவில்லை. அதற்காக நான்கு வாழைப்பழத்தை வாங்கிச் சாப்பிட்டு என் பசியைத் தணித்துக் கொண்டேன். எனக்கு அந்த ஹோட்டல்காரர் மீது இருந்த ஆத்திரத்தில், "ராத்திரியாகட்டும், அவனை என்ன பாடு படுத்துகிறேன், பார்" என்று தீர்மானித்துக் கொண்டேன்.

ராத்திரி சாப்பிட உட்கார்ந்ததும், "டக், டக்" கென்று நான்கு 'டக்' வைத்தான் பரிசாரகன். சாப்பாடு வந்ததும், அதையும் "டக்,

டக்''கென்று இரண்டு பிடி வைத்துவிட்டு "என்ன அய்யர்வாள் ?'' என்ருன்.

"இன்னும் கொஞ்சம்'' என்றேன்.

"டக், டக்.''

"என்னய்யா, இப்படி வைத்தால் என்ன பண்ணுகிறது? அந்தத் தாம்பாளத்தில் இருக்கிற அத்தனை சாதத்தையும் போடு, ஐயா' என்றேன்.

அவ்வளவுதான். நான் சொன்ன வார்த்தை அங்குள்ள எல்லாரையும் ஒரு தூக்குத் தூக்கிப் போட்டது! பரிசாரகன் தாம்பாளத்தோடு உள்ளே போய் ஹோட்டல் சொந்தக்காரரிடம் ஏதோ குசு குசு என்று சொல்வது கேட்டது. அவர் கொஞ்சம் இரைந்து, என் காதுக்குக் கேட்கும்படியாகவே, "அவன் எவண்டா குண்டோதரன்?'' என்று கத்திஞர்.

கொஞ்ச நாழி கழித்து, பரிசாரகனும் அவரும் வெளியே வந்தார்கள். அவர் என்னைச் சற்று முறைத்துப் பார்த்தார். நானு அவருக்குப் பயப்படுகிறவன்? நானும் அவரை முறைத்துப் பார்த்தேன். அவர் சாப்பிட உட்கார்ந்திருந்தவர்களை யெல்லாம் ஒரு சுற்றுப் பார்த்தார்.

"நீங்களெல்லாம் கொஞ்சம் க்ஷமிக்கணும். இன்னும் அரை மணி காத்திருக்கணும். அய்யர்வாளுக்கு முதலில் சாப்பாடு போட்டு அனுப்புகிறேன். உங்களுக்கெல்லாம் இரண்டாம் தடவை சமைக்கச் சொல்லி யிருக்கிறேன்'' என்ருர்.

அவன் தலையில் இடி விழ! அந்த க்ஷணமே அந்த ஹோட்டலை விட்டு நகர்ந்தேன். சரசுவுக்குத் தந்தியடித்தும், அவள் இன்னும் இரண்டு மாதத்திற்கு வர முடியாது என்று பதில் தந்தியடித்து விட்டாள். நான் இனிமேல் எந்தச் சாப்பாட்டு ஹோட்டல் பக்கமும் என் தலையைக் காட்டப் போவதில்லை. சரசு வருமட்டும் வாழைப்பழத்தைச் சாப்பிட்டேதான் காலத்தைத் தள்ளப் போகிறேன்!

# தென்னை மரத்தில் தேள் கொட்ட

## காட்சி 1

[மானேஜர் மகாதேவய்யர் வீடு. காலை மணி 9. மகாதேவய்யர் அப்பொழுது தான் வெள்ளித்தட்டின் முன் சாப்பிட உட்கார்ந்திருக்கிறார். பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும் தம் குழந்தைகளுடன் சந்தோஷமாகச் சிரித்துப் பேசிக் கொண்டிருக்கிறார். அவர் மனைவி ராஜி கலத்தில் பச்சடி பறிமாறுகிறாள். பச்சடியைத் தொட்டு நாக்கில் தடவிக் கொண்டதும் மகாதேவய்யரின் முகம் திடிரென்று மாறுகிறது!]

மகா (கோபமாக) :—ராஜி!

ராஜி :—இதோ வந்தேன்.

[தட்டில் கறியுடன் ஓடி வருகிறாள்!]

மகா :—உனக்கு மூளை கீளை இருக்கா? இது என்ன சமையல் பண்ணியிருக்கே?

ராஜி :—ஏன்?

மகா:—ஏனா? நீ பண்ணியிருக்கும் பச்சடியை நீயே சாப்பிடு. வீட்டிலிருக்கும் அத்தனை உப்பையும் இதில் கொட்டித் தொலைச்சிருக்கயே?

ராஜி:—அப்பாடி! என்னமோன்னு பயந்து விட்டேன். இதற்குத் தானா இத்தனை ரகளை பண்ணிப்பிட்டேள்? ஏதோ ஒரு கல் ஜாஸ்தியாகி

விட்டதாக்கும்! கொஞ்சம் தயிர் கலந்துண்டா சரியாப் போயிடறது.

[இப்படிப் பேசிக் கொண்டே கறி பறிமாறிவிட்டு அப்பால் செல்கிருள்].

மகாதேவய்யர்:—[கரியை ருசி பார்க்கிருர். அவர் கோபம் இன்னும் அதிக மாகிறது. பக்கத்தில் உள்ள குழந்தைகள் நடுங்குகின்றன.] ராஜி!

ராஜி [கையில் ஒரு சிப்பல் தட்டில் சாதத்துடன் வருகிருள்]:—என்ன இப்படிப் பறக்கிறேள்? சாதத்தை எடுத்துக் கொண்டுதானே வர வேண்டும்? இன்றைக்கு நாழியும் அப்படியொன்றும் ஆகிவிடவில்லையே?

மகா:—இந்தா, இன்றைக்கு நான் சாப்பிடணும்னு சமைச்சிருக்கயா, அல்லது சமைத்துத் தொலைக்க வேண்டியிருக்கிறதே என்று தண்டத்துக்குச் சமைத்திருக்கயா?

ராஜி:—வெள்ளிக்கிழமையும் அதுவுமா ஏன் இப்படிக் கன்னு பின்னு என்று பேசறேள்?

[கலத்தில் போடப்பட்ட கொத்தரக்காய்க் கறியைக் கையில் எடுத்துத் தாலத்தில் ஒரு அறை அறைகிருர்!]

மகா:—கன்னுவாவது, பின்னுவாவது? பச்சடியில் ஒரு படி உப்பென்ருல் இதில் இரண்டு படி உப்பு! ஏன், வர வர எனக்குச் சரியாகச் சமைத்துப் போடுவதுகூட உனக்குக் கஷ்டமாய்ப் போய்விட்டதாக்கும்?

ராஜி (திகைத்தவளாய்!):—ஐயையோ! கறியி லும் உப்பு அதிகமாகி விட்டதா? நான் என்ன பண்ணுவேன்? கைக்குழந்தை காரியம் செய்ய வொட்டாமல் அடிக்கிறது. அதைக் கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள் என்றால்......

மகா:—ஆமாம். குழந்தையைப் பார்த்துக் கொண்ட நாளெல்லாம் நீ கிழித்து விட்டாயாக் கும்? புறப்பட்டு வா, புறப்பட்டு வா, என்று நூறு கடிதம் உங்கம்மாளுக்கு வரிந்து வரிந்து எழுதினாயே? ஏன், உங்கம்மா ஒரு மாதம் வந்து சற்று ஒத்தாசையாக இருந்துவிட்டுப் போனால் என்ன?

ராஜி:—உங்கம்மா தன் பெண்ணே ஒஸ்தி யென்று ஊரில் உட்கார்ந்து கொண்டிருக்கட்டும். எங்கம்மா அப்பாவையும் குழந்தைகளையும் திண் டாட வைத்துவிட்டு—

மகா:—இந்தா, எங்கம்மாளைப் பற்றிப் பேசாதே என்று உனக்கு எத்தனை தடவை சொல்லியிருப்பேன்?

ராஜி:—ஏன், அப்படி அம்மாளுக்குப் பரி கிறவர் கொஞ்ச நாளைக்கு ஒரு சமையற்காரனை ஏற்படுத்துகிறதுதானே?

மகா:—ஆமாம், பணம் கொழுத்துக் கிடக் கிறது, சமையற்காரனும் ஏற்படுத்தலாம், இன்னும்—

ராஜி :—இதற்கெல்லாம் பணம் இருக்குமா? தங்கைக்கு மாதா மாதம் கிண்டு கிண்டாய் அனுப்புவதென்ருல் இருக்கும்.

[சாதம் பறிமாறுகிருள்.]

மகா :—சீ, கழுதே! உப்பில் கொத்தவரங் காயைக் கொட்டியது மல்லாமல் வாய் வேறு நீண்டு விட்டதா? உன் சோறும் வேண்டாம், நீயும் வேண்டாம்.

[தாலத்தை வீசி எறிகிருர். சட்டையை மாட்டிக் கொண்டு ஆபீசுக்குக் கிளம்புகிருர்.]

## காட்சி 2

[ஆபீஸ் மானேஜர் மகாதேவய்யர் வெகு கோப மாக ஆபீஸ் அறையில் நுழைகிருர்.]

மகா :—முனிசாமி! முனிசாமி!

முனி (ஓடி வந்து) :—எசமான்!

மகா :—போய் குமாஸ்தா குப்புசாமி அய்யரை வரச்சொல்.

[புறப்படுகிருன்.]

டேய்! இது என்னடா மேஜை யெல்லாம் குப்பையும் கூளமுமாயிருக்கிறது? வர வர நீ ஒழுங்காகவே வேலே செய்கிறதில்லே. இன்னெரு தடவை இம்மாதிரி இருந்தால் டிஸ்மிஸ் பண்ணி விடுவேன். ஜாக்கிரதை!

முனி :—இல்லே, எசமான்.

மகா :—சரிடா. போய்க் குமாஸ்தா குப்புசாமி அய்யரை வரச்சொல்.

[முனிசாமி போகிறான். இவர் வெகு கோபத்துடன் மேஜைமீதுள்ள காகிதக் கட்டுகளை யெல்லாம் புரட்டிப் பார்க்கிறார். ஒரு பைலைக் கண்டதும் கோபத்தால் அவர் முகம் சிவக்கிறது. இந்தச் சமயத்தில் முனிசாமி உள்ளே வருகிறான்.]

மகா :—எங்கேடா குப்புசாமி அய்யர்?

முனி (மிக பயத்துடன்) :—அவர் வந்துங்க— இன்னும் வந்துங்க—

மகா :—இன்னும் வரவில்லையா அவர்?

முனி :—ஆமாங்க. இல்லிங்க.

மகா (எதிரே சுவரில் மாட்டப் பட்டிருக்கும் கடியாரத்தைப் பார்த்துவிட்டு) :—மணி பத்தரை ஆகிறது, இன்னுமா ஆபீசுக்கு வரவில்லை? வந்த உடனே என்னை வந்து பார்க்கச் சொல், தெரியுமா?

முனி :—அப்படியே எசமான்!

[வெளியே போகிறான். கொஞ்ச நேரத்துக் கெல்லாம் குமாஸ்தா குப்புசாமி அய்யர் உள்ளே நுழைகிறார்.]

மகா :—ஓய், மணி என்னய்யா இப்போ?

குப்பு :—இல்லை ஸார், வந்து—

மகா :—இல்லை ஸாராவது, நொள்ளை ஸாராவது? இது என்ன ஆபீசு என்று நினைத்தீரா? உம் வீடு என்று நினைத்திரா? வர வர உம்முடைய வேலை எனக்குத் துளிக்கூடப் பிடிக்கவில்லை.

ஆபீசுக்கும் நாழி கழித்து வருகிறீர், பைல்களையும் சரியானபடி பார்ப்பதில்லை—இதோ பாரும். (ஒரு பைலை பேஜையிலிருந்து எடுக்கிறார்.) நாலு நாளைக்கு முன்னால்போக வேண்டிய கடிதம் இன்னும் அப்படியே இருக்கிறது. ஏன் ஐயா இதை முன்னாலேயே அனுப்ப வில்லை?

குப் :—தங்கள் கையெழுத்துக்காகத்தான் நாலு நாளைக்கு முன்னாலேயே டைப் அடித்தேன்—

மகா :—டைப் அடித்தால் உடனே என் கையெழுத்தை வாங்கி அனுப்புவதற் கென்ன ஐயா ?

குப்பு :—கையெழுத்துக்காகத்தான் அங்கு வைத்தேன். தாங்கள் வந்து—

மகா :—நான் கையெழுத்துப் போடாமல் வைத்து விட்டேன். இல்லையா? நான் கை யெழுத்து போடவில்லை யென்றால் ஞாபகப் படுத்துவதற்கு என்ன ஐயா?

குப்பு :—நான்கு நாளாகத் தினம் ஒரு தடவை ஞாபகப் படுத்திக்கொண்டுதான் இருக்கிறேன்—

மகா :—நான் ஏதாவது வேறு காரியமாக இருந்தபோது ஞாபகப்படுத்தி யிருப்பீர்! ஒரு தடவைக்கு நான்கு தடவையாக ஞாபகப்படுத்து வதற்கென்ன? இந்தாரும். இதை இப்பொழுதே அனுப்ப வேண்டும். தெரிந்ததா?

[வெகு கோபமாகப் படித்துப் பார்க்கிறார். கடி தத்தைப் படித்து முடிந்ததும் அவர் முகம் கோபத் தால் சிவக்கிறது.]

உமக்கு மூளை கீளை இருக்கா என்னய்யா? யார் உம்மை இந்தப் பதில் எழுதச் சொன்னது? இந்தக் கடிதத்துக்குப் பதிலே தேவையில்லையே?

குப்பு (தயக்கத்துடன்):—நீங்கள்தான் வந்து டிக்டேட் பண்ணினேள்—

மகா:—ஆமாம், எல்லாப் பழியையும் என் தலைமேல் போடும்.

[தாம் சற்று முன் கையெழுத்திட்ட கடிதத்தைக் கிழித்து எறிகிறார்.]

வர வர நீர் உம் வேலையைச் சரிவரச் செய்வதில்லை. இதோ பாரும். (இன்னொரு பைலை மேஜை மேலிருந்து எடுக்கிறார்.)

இந்தக் கணக்கையெல்லாம் இன்றே தீர்த்துக் கட்டவேண்டும். இன்றைக்கு எத்தனை நாழி யானாலும் சரி, இதைப்பார்த்து விட்டுத்தான் நீர் வீட்டுக்குப் போகவேண்டும், தெரிந்ததா? சரி, போம்.

[குப்புசாமி அய்யர் வெளியே வருகிறார். முனிசாமி நின்றுகொண்டிருக்கிறான்.]

முனி:—ஏஞ்சாமி! மானேசர் ஐயா ஏன் இன்னிக்கி இப்படி சுள்ளு புள்ளுன்று எறிஞ்சி விழறாரு?

குப்பு:—வேலை யென்ன அவருக்கு? வீட்டிலே ஏதாவது கோபமாயிருக்கும். அந்தக் கோபத்தை என் மீது காட்டுகிறார். சீ! என்ன பிழைப்பு!

## காட்சி 3

[குப்புசாமி அய்யர் வீடு. ராத்திரி மணி எட்டு. குப்புசாமி அய்யர் மனைவி அப்புஜம்மாள் வாசலுக்கும் உள்ளுக்கும் நடந்துகொண்டிருக்கிருள். தன் புருஷன் வருகிருரோ என்று அடிக்கொரு தடவை வாசலை எட்டிப் பார்க்கிருள். கடைசியில் கடுகடுத்த முகத்துடன் குப்புசாமி அய்யர் வந்து சேர்கிருர். மனைவி அலங்காரம் செய்து கொண்டு நிற்பதைப் பார்க்கிருர்.]

குப்பு:—எதற்காக வாசலில் வந்து நின்னுண்டிருக்கே? வெட்கம் மானம் எல்லாத்தையும் வித்தாச்சா என்ன? வாசலில் நூறு தடியன்கள் போகிருர்களே. மூளையில்லை?

அம்பு (தயக்கத்துடன்):—மணி எட்டாச்சே, ஆபீஸிலிருந்து இன்னும் வரக் காணுமே யென்று கவலையாயிருந்தது—

குப்பு:—கவலை என்ன கவலை? ஆபீசுக்குப் போனவன் தன்னைப் போல் வருகிருன். அப்படியே ஓழிந்து போய் விடுவான் என்று நினைத்தாயோ?

அம்பு:—வெள்ளிக் கிழமையும் அதுவுமா ஏன் இப்படிக் கன்னு பின்னு என்று பேசறேள்? ஆபீசிலே எவனுவது கோவிச்சுண்டால் அந்தக் கோபத்தை என் மேலேயா காண்பிக்கணும்?

[உள்ளே போகிருள்.]

அப்பு:—சரி; சரி ரொம்ப வாயாடாதே. போ அந்தண்டே.

[சுற்றும் முற்றும் பார்க்கிருர்.]

எங்கே அந்தப் பயல் அம்பித் தடியன்? படிப்பா கிடிப்பா ஒரு மண்ணு கிடையாது. வீட்டில் தடியாட்டமா ஒரு பொம்மனாட்டி இருக்கிறாளே அவளும் கவனிப்போம் என்று கிடையாது.

[அம்புஜம்மாள் ஒரு டம்ளர் காப்பியுடன் வருகிறாள்.]

அம்பு:—இந்தாங்கோ, சட்டையையெல்லாம் அப்புறம் கழற்றலாம். இந்தக் காப்பியை முன்னாலே சாப்பிடுங்கோ.

குப்பு:—காப்பியும் வேண்டாம், மண்ணும் வேண்டாம். எனக்குத் தூக்கம் வருகிறது. தாலத்தை வைத்துச் சோத்தைக் கொட்டு.

அம்பு:—காப்பியைக் கொஞ்சம் சாப்பீடுங்கோன்னா! வந்ததிலிருந்து இப்படிக் கடு கடுன்னு விழறேளே?

[காப்பியை மேஜை மேல் வைக்கிறாள்.]

உங்கள் சிநேகிதர் ராமசாமி அய்யர் வந்திருந்தார். இத்தனை நாழி உங்களுக்காகத் தான் காத்துக் கொண்டிருந்தார். இப்பத்தான் போகிறார் அகத்துக்கு, அம்பியையும் அழைத்துக் கொண்டு.

குப்பு:—அம்பியை எதற்காகக் கூட்டிக் கொண்டு போனார்? பாடத்தைப் படிக்காமல் அந்தத் தடியனுக்கு அங்கே என்ன வேலை?

அம்பு:—என்னன்னா, ஒண்ணும் தெரியாதது போலப் பேசறேளே? இன்னிக்கி அவாத்துலே

நம்மையெல்லாம் சாப்பிடக் கூப்பிட்டு இருக்கிருளே, மறந்துட்டேளா? நீங்களும் போகலாமின்னு சொன்னேளே?

குப்பு :—நான் ஓராத்துக்கும் சாப்பிடப் போகப் போறதில்லே. இங்கே ஏதாவது சோறு கீறு சமைச்சுத் தொலேச்சிருக்கயா, இல்லேயா?

அம்பு :—(மௌனம்.)

குப்பு:—தெரியுமே உன் யோக்யதை? இங்கே சமையல் பண்ணி வைத்திருந்தா உன் ஆஸ்தி என்ன பாழாகவா போய்விடும்? உன் தரித்திரம் பாழாய்ப் போக! சோற்று வாயில் மண்ணைப் போட்டவள் காப்பி வாயிலும்தான் மண்ணைப் போடேன்.

[பக்கத்தில் மேஜைமேல் உள்ள காப்பி டம்ளரைத் தூக்கி எறிகிருர். சட்டையையும் தலேப்பாகையையும் கழற்றி எறிகிருர். மாடிக்குப் போகிருர். மாடிக் கதவு படாரென்று சாத்தப்படும் சத்தம் கேட்கிறது.]

## காட்சி—4

[குப்புசாமி அய்யர் வீடு. ராத்திரி மணி ஒன்பது. சமையலறையில் பாத்திரங்கள் ஒன்ருேடு ஒன்று தடால் புடால் என்று மோதிக் கொள்ளும் சத்தம் கேட்கிறது. இதிலிருந்து சமையலறையில் அம்புஜம்மாள்தான் இருக்கிருள், அதுவும் மிகக் கோபமாக இருக்கிருள் என்று தெரிந்து கொள்ளலாம். பத்துத் தேய்க்கும் பளனியாயி வருகிருள்.]

பளனி :—அம்மா!

அம்பு :—யாரடி அது?

பளனி :—நான்தாம்மா ! பளனி.

[அம்புஜம்மாள் சமையலறையிலிருந்து வெளியே வருகிருள்.]

அம்பு :—உனக்கு வேளையா நேரமா ஒண்ணு கிடையாதாடி? நீ இஷ்டப்பட்டபோது வரது, இஷ்டப்பட்டபோது போறது. இப்ப என்ன மணின்னு நினைச்சிண்டே?

பளனி :—என்னம்மா, இப்படிக் கோவிச்சுக்கிறே? வளக்கம் போலத்தானே 9 மணிக்கு வந்திருக்கிறேன். இப்பத்தானே தாலுக்கா ஆபீசிலும் மணி ஒன்பதடித்தது.

அம்பு :—சரி, சரி, ரொம்ப வாயாடாதே! பாத்திரங்களைச் சட்டுப் பிட்டுன்னு தேய்ச்சிட்டுப் போ!

பளனி:—ஏம்மா ! பாத்திரங்களை யெல்லாம் குழாயண்டை காணுமே?

அம்பு :—குழாயண்டையில் இல்லாவிடில் எடுத்துண்டு போய்க் குழாயண்டையில் போட்டுக்கோ. எல்லாத்தையும் உன் கையில் கொண்டு வந்து கொடுக்க வேண்டும் என்கிருயா?

[பளனி பதில் சொல்லாமல் சமையலறைக்குள் நுழைகிருள், உள்ளேயிருந்து கண்ணுடி உடைந்த சத்தம் கேட்கிறது.]

அம்பு:—என்னடி, என்னத்தை உடைச்சுத் தொலைச்சே?

[உள்ளே போகிருள்.]

பளனி :—ஒண்ணுமில்லை அம்மா, வந்து....

அம்பு :—கண்ணாடி டம்ளரை உடைச்சாச்சோ, இல்லையோ? எனக்குத் தெரியுமே, உன் யோக்யதை, தினம் ஒண்ணு உடைச்சுத் தொலை!

பளனி :—இல்லேம்மா, வந்து...

அம்பு :—வந்தாவது, போயாவது? இந்தா, நீ இங்கு வேலை செய்ததும் போதும், பாத்திரங்களை உடைத்ததும் போதும். இன்னியிலிருந்து நின்னுக்கோ.

பளனி :—என்னம்மா, இப்படி சிடுசிடுன்னு விழுறே? ஒரு வருஷமா உன் வூட்டிலே வேலை செய்யறேனே. என்னிக்காவது ஒரு பாத்திரம் உடைத்ததுண்டா?

அம்பு :—இந்தாடி, உன் அதிகப் பிரசங்கித்தனத்தை மூட்டை கட்டி வைச்சுக்கோ. நாளையிலேந்து நீ வேலைக்கு வரவேண்டாம்னு வரவேண்டாம். போ !

பளனி :—சரிம்மா. கண்ணாடி டம்ளருக்கு வோணுமின்னு துட்டைப் பிடிச்சுக்கோம்மா ! இதுக்கு என்னமோ பிரமாதமாக் கோவிச்சுக்கிறியே? மானேஜர் அம்மா வூட்டிலும் அஞ்சு வருசமா வேலை செய்யறேன். அவங்க ஒரு நாளைக்காவது என்னை இப்படிக் கோவிச்சுக்கிட்டது கிடையாது.

அம்பு :—சரி. சரி. அந்த மானேஜர் அம்மா உன்னைத் தலையில் வைத்துக் கூத்தாடினா நீ அங்கேயே வேலை செய். இங்கு செய்தது போதும். நாளைக்கு வந்து கணக்கைத் தீர்த்துண்டு போ.

## காட்சி—5

[மானேஜர் மாகதேவய்யர் வீடு. ராத்திரி 10 மணி. பளனியாயி மானேஜர் மனைவி ராஜியுடன் பேசிக் கொண்டே பாத்திப் பாத்திரங்களைத் தேய்த்துக் கொண்டிருக்கிருள்.]

ராஜி:—என்னடி பளனி! ஏன் இன்னிக்கி ஒரு மாதிரி இருக்கே? வழக்கமா உள்ள குஷியைக் காணுமே?

பளனி:—ஒண்ணுமில்லையே, அம்மா! வளக்கம் போலத்தானே இருக்கிறேன்.

ராஜி:—என் கிட்ட ஒளிக்காதடி. உன்னைப் பார்த்தாலே தெரிகிறதே? ஏன், உன் புருசன் ஏதாவது கோபித்துக் கொண்டானு?

பளனி:—அதெல்லாம் ஒண்ணுமில்லை யம்மா!

ராஜி:—பின்னே?

பளனி:—அந்தக் குப்புசாமி அய்யர் வூட்டு அம்மா இருக்காங்கல்ல....

ராஜி:—அந்த அம்மா ஏதாவது கோவிச்சிண்டாங்களா?

பளனி:—ஆமாம்மாங்கறேன். அந்த அம்மாளுக்கு யார் மேலே கோபமோ தெரியல்லே. நான் போற போதே தடால் புடாலுன்னு பாத்திரங்களை உடைச்சுக்கிட்டிருந்தாங்க. நான் கண்ணுடிடம்ளரைக்கை தவற விட்டுட்டேன். அதுக்காக வந்து,வேலையை விட்டுப் போ போ என்னு களுத்தைப் பிடிச்சுத் தள்ளறுப் போலே தள்ள வந்தாங்க......

ராஜி :—போடி, இதற்காகவா மூஞ்சியைத் தொங்கப் போட்டிண்டிருக்கே? எல்லாம் காலம் பர சரியாய்ப் போய்விடும். அந்த அம்மா ரொம்ப நல்லவங்க ளாச்சுதே. ஒரு வேளை அய்யர் ஏதாவது அம்மாளைக் கோவிச்சுக்கிட்டிருப்பார். அந்தக் கோபத்தை அம்மா உன் மீது காண்பிச்சிருப்பாங்க.

பளனி :—ரொம்ப நல்லா இருக்குதே அம்மா! அய்யர் கோவிச்சுக்கிட்டா அதற்கு என்மேலேயா சீறி விழணும்? என்னமோ சொல்லுவாங்களே பள்மொளி, 'தென்ன மரத்துலே தேள் கொட்ட பண மரத்துலே நெறி ஏறிச்சு' என்னு, அதுமாதிரி யல்ல இருக்குது?



# மூக்கறுத்தல்

மூக்கறுத்தல் என்முல் அவமானப் படுத்துவது என்று அர்த்தம். அவமானப்பட்டால் மூக் கறுந்தது என்று சொல்வார்களே யொழிய, மூக் கறுந்தால் அவமானம் ஒன்றும் இல்லை. இது தெரியாமல்தான் லட்சுமணன் சூர்ப்பனகை யின் மூக்கை யறுத்துவிட்டான். தான் அவளை அவமானப் படுத்தி விட்டதாக எண்ணம்! அந்த அசடு சூர்ப்பனகையும், தான் அவமானப் பட்ட தாகவே கருதினுள்.

இந்த "மூக்கறுத்தல்" என்னும் சமாசாரத் திற்கு இந்தச் சூர்ப்பனகை விஷயம்தான் மூல காரணமோ என்று நினைத்தேன். ஆனுல் மூல காரணக் கதை ஒரு பழைய சீனப் புத்தகத்தில் கண்டிருந்தது. கதையை யெல்லாம் எனக்கு முன்னதாகவே கரையான் வாசித்து, ஜீரணித்து விட்டபடியால், கதையை முக்கியமாய் என் ஊகத்தைக் கொண்டு எழுதுகிறேன். நான் சொல்லும் கதை சரிதானு என்பதைக் கரை யானைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

முன்னொரு காலத்தில் சீன தேசத்தில் ஒரு ராஜகுமாரி இருந்தாள். அவளுக்கு மூக்கு மிக வும் அழகாயிருந்தது. இவளைக் கல்யாணம் பண் ணிக்கொள்ள ஜப்பான் தேசத்துச் சக்கரவர்த்தி ஆசைப்பட்டார். ஆனுல் அவருக்கு மூக்கு அத் தனை அழகாயில்லை. ராஜகுமாரி தன்னைப்போல்

மூக்கு அழகில்லாதவர்களைக் கண்டிப்பாய்க் கல்யாணம் பண்ணிக்கொள்ள முடியாது என்று சொல்லி விட்டாள். சக்கரவர்த்தி என்ன பண்ணுவார்! இனிமேல் எங்கே போய்த் தன் மூக்கை அழகுபடுத்திக் கொள்ளுவார்? ஒரு யோசனையும் தோன்ருமல் தம் மந்திரிகளைக் கூப்பிட்டு ஆலோசனை கேட்டார்.

அதில் இந்தியா தேசத்திலிருந்து சென்றிருந்த மதியூகி என்னும் மந்திரி எழுந்திருந்து, "அந்த அழகிய மூக்கு இருப்பதினுல்தானே ராஜகுமாரி கர்வங்கொண்டு உங்களைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள மாட்டேன் என்கிருள்? ஆகையால் அவள் மூக்கை அறுத்து விட்டால், அவள் கர்வம் ஒழிந்து உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொள்வாள்" என்ருர்.

"என்ன இருந்தாலும் இந்தியர்கள் மூளையே மூளை !" என்று சக்கரவர்த்தி மெச்சிவிட்டு, அந்த ராஜ குமாரியின் தாதிகளுக்கு லஞ்சம் கொடுத்து, அந்த ராஜ குமாரியின் மூக்கை யறுத்துப் பிறகு அவளை மணம் புரிந்துகொண்டார்.

சக்கரவர்த்திக்கு ஒரு விதத்தில் ஏமாற்றமே. ஏனெனில் அந்த ராஜகுமாரியின் மூக்கின் அழகிற்காகத்தான் அவர் அவளை மணம் புரிய விரும்பினது! சக்கரவர்த்தி தம் ஏமாற்றத்தையும் கவனிக்காமல் நமக்கு ஒரு அழகிய பதப் பிரயோகம் கற்றுக் கொடுத்ததற்காக அவருக்கு நம் மனமார்ந்த வந்தனம் உரித்தாகுக !

# புருஷர்களுக்கு மட்டும்

(ஸ்திரீகளும் வாசிக்கலாம்)

அப்பொழுதுதான் ஒரு கட்டுரை எழுதலாம் என்று உட்கார்ந்தேன். சரசு என்னிடம் ஏதோ பேச வந்துவிட்டாள்.

'ஒரு விஷயமின்னு—'' என்று ஆரம்பித்தாள்.

"ஒரு விஷயமா யிருக்கட்டும், பல விஷயமா யிருக்கட்டும். எனக்கு உன்னோடு பேச இப்பொழுது ஒழியாது."

"உங்களுக்கு என்றைக்குத் தான் ஒழிந்தது? எப்பொழுது கண்டாலுந்தான் ஒரு பேப்பரையும் பேனாவையும் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள். ஏதோ இரண்டு வார்த்தை பேசலாமென்று வந்தால்—"

"அந்த இரண்டு வார்த்தையை முன்னாலேயே பேசி விடுவது தானே! அதற்கு இத்தனை பூர்வ பீடிகை பண்ணி, இருபத்தைந்து வார்த்தை பேசி, என் காலத்தை வீணாக்கி விட்டாயே? நேற்று எல்லாம் மண்டையை உடைத்துக் கொண்டு யோசனை பண்ணி இப்பொழுதுதான் ஒரு கட்டுரை எழுத உட்கார்ந்தேன்......"

"அப்படி என்ன கட்டுரை எழுத ஆரம்பித்தீர்கள்?" என்று சொல்லிக் கொண்டே என் பக்கத்தில் வந்து தோள் பக்கமாக நான் எழுதிக் கொண்டிருந்ததை வாசித்தாள்.

"'சரசு—என் காதலி!'—என்ன போங்கோ! எப்பொழுது பார்த்தாலும் என் பெயரைச் சந்திக்கு இழுக்கிறதில்தான் உங்களுக்குப் பரம திருப்தி. இப்பொழுது என்னைப் பற்றித்தானே எழுதி யிருக்கிறீர்கள்? என்ன எழுதி யிருக்கப் போகிறீர்கள்! ஒட்டியாணம் கேட்கிறாள் என்று எழுதி யிருப்பீர்கள்."

"ஆம். அதைத் தான் எழுதி யிருக்கிறேன்."

"ஆம். நான் அதற்குத்தான் இப்பொழுது கூட வந்தேன். இப்படி என்னைப் பற்றியே எழுதுவதற்கு நேற்று முழுவதும் மண்டையை உடைத்துக் கொள்வானேன்? என்னைக் கேட்டால்கூட நானே சொல்லி யிருப்பேனே! என்னைப் பற்றி ஒரு பத்து கட்டுரைகள் எழுதுகிறீர்களே; உங்களுக்குத் துளியாவது பெண்டாட்டியை எப்படி வைத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிகிறதா? நான் எத்தனை நாளாக உங்களை ஒட்டியாணம் வாங்கித் தரும்படி கேட்டுக்கொண்டிருக்கிறேன். நீங்கள் வாங்கிக் கொடுத்தீர்களா?"

"வாங்கிக் கொடுக்கவில்லைதான்."

"ஏன் வாங்கிக் கொடுக்கிறீர்கள்? நீங்கள் எம். ஏ. பாஸ் பண்ணி யென்ன, பாஸ் பண்ணு

மல் என்ன? எங்களுக்குத் தையல், சமையல் எல்லாம் சொல்லிக் கொடுக்கிறார்களே, அது மாதிரி உங்களுக்கெல்லாம் மனைவியை வைத்துக் காப்பாற்றுவது எப்படி, அவள் மனங் கோணாமல் நடப்பது எப்படி என்றெல்லாம் சொல்லிக் கொடுத்தால்தானே ?"

"சரி, காலேஜில்தான் சொல்லிக் கொடுக்கவில்லை. நீதான் இப்பொழுது சொல்லிக் கொடேன்."

"நான் சொல்லிக் கொடுப்பதென்ன ? அதுதான் அந்த விஷயத்தைப் பற்றிப் பத்திரிகைகளிலெல்லாம் கட்டுரைகள் வருகின்றனவே. அதைப் பார்த்துத் தெரிந்து கொள்வதுதானே ?"

"கட்டுரைகளா ?"

"ஆம். சமீபத்தில் ஒரு பத்திரிகையில் 'புருஷர்களுக்கு மட்டும்' என்று ஒரு கட்டுரை வெளிவந்ததே. அதைப் படித்தீர்களா ?"

"எனக்கு எங்கே அது எல்லாம் படிக்க ஒழிகிறது ? நீ படித்தாயா ?"

"படிக்காமலா இருப்பேன் ?"

"நீ அதை எப்படிப் படிக்கலாம்? அதுதான் 'புருஷர்களுக்கு மட்டும்' என்று போட்டிருந்தது என்று சொல்லுகிறாயே ?"

"அது எப்படி அந்தப் பத்திரிகைக்காரர்கள், அல்லது அந்தக் கட்டுரையை எழுதினவர் 'புருஷர்களுக்கு மட்டும்' என்று போட்டு அவர்

களுக்குச் சலுகை காட்டலாம் என்று ஒரு தட வைக்கு இரண்டு தடவை வாசித்துப் பார்த் தேன்."

"அந்தக் கட்டுரையாளர் என்னமோ 'புருஷர் களுக்கு மட்டும்' என்று தலைப்புப் போட்டதற்கு உனக்கு இத்தனை கோபம் வருகிறதே, பத்தி ரிகைகளிலெல்லாம் 'ஸ்திரீகள் பக்கம்' என்று தனியாகப் போடுகிறார்களே, அதற்கு நாங்கள் ஏதாவது சொல்கிறோமா?"

"நீங்கள் சொல்லாவிட்டால் அது ஸ்திரீ களின் தப்பாகுமா?"

"சரி; அந்தக் கட்டுரையில் என்ன எழுதி இருந்தது, சொல்லு."

"புருஷர்கள் மனைவிகளை எப்படி நடத்த வேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தது."

"அவர்களைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாட வேண்டுமென்று சொல்லி யிருந்ததா? ஒருவேளை எவனாவது ஒரு பெண் டாட்டி தாஸன் இதை எழுதியிருப்பான்."

"உங்களுக்கு உங்களைத் தவிரப் பாக்கி யெல்லாரும் பெண்டாட்டி தாஸர்கள்தான். நான் போகிறேன், போங்கோ" என்று எழுந்து ஓட ஆரம்பித்தாள்.

நான் எழுந்து ஓடிப்போய் அவள் கையைப் பிடித்திழுத்து, "கோவிச்சுக்காதேயுங்கோ ஸார்! கொஞ்சம் கட்டுரையில் என்ன எழுதியிருந்தது

என்று சொல்லுங்கள்" என்றேன். சரசு சொல்ல ஆரம்பித்தாள்.

"புருஷன், மனைவி முகங் கோணுமல் நடந்து கொள்ள வேண்டும். அவள் கேட்கும் சாமான்களை வாங்கித் தரவேண்டும். தினம் சாயந்திரம் எங்கேயாவது உலாவக் கூட்டிக்கொண்டு போக வேண்டும். வாரம் இரண்டு தடவை சினிமாவுக்கு அழைத்துக் கொண்டு போகவேண்டும். மாதம் இரண்டு தடவை டிராமாவுக்கு அழைத்துக்கொண்டு போகவேண்டும். மாதம் ஒரு புதுப் புடவை வாங்கித் தரவேண்டும். இரண்டு மாதத்துக் கொருதடவை பிறந்த வீட்டுக்கு அனுப்ப வேண்டும். ஆறு மாதத்துக் கொரு தடவை—" என்று இப்படி அடுக்கிக்கொண்டே போனுள்.

"இதெல்லாம் உன் கைச்சரக்கா, அல்லது கட்டுரையில் எழுதி யிருந்ததா?"

"உங்களுக்கு ஏன் சந்தேகம்? கட்டுரையை வாசித்துப் பார்ப்பதுதானே? எனக்கு இத்தனை கைச்சரக்கு இருந்தால் நானும் உங்களைப்போல் கட்டுரைகள் எழுதமாட்டேனு?"

"சரி, இப்படி யெல்லாம் இல்லாத புருஷர்களை என்ன பண்ணுவதாம்? அந்தமானுக்கு அனுப்பிவிடுவதாமா?"

"அந்தமானுக்கு ஒன்றும் அனுப்பவேண்டியதில்லை. கடைசியில் அந்தக் கட்டுரையில் இதற்கும் ஒரு வழி சொல்லியிருந்தது."

"அதாவது சம்பளத்தை எல்லாம் மனைவி கையில் கொடுத்துவிட்டு அவள் இஷ்டப்படி செலவு செய்யவிடச் சொல்லியிருந்ததோ?"

இதைக் கேட்டதும் சரசு ஆச்சரியத்தால் ஒரு துள்ளுத் துள்ளினாள்.

"இது உங்களுக்கு எப்படி தெரிந்தது? நீங்கள்தான் அந்தக் கட்டுரையை வாசிக்கவில்லை என்றீர்களே?"

"நான் அந்தக் கட்டுரையை வாசிக்கவில்லையென்பது உண்மைதான். ஆனால் அதை எழுதினது நான்தானே?"

இதைக் கேட்டு சரசு ஆச்சரியத்தால் மூர்ச்சையாவாள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அப்படி ஒன்றும் நேரவில்லை. அதற்குப் பதிலாக அவள் "எனக்கும் முன்னாலேயே தெரியும். தெரிந்துதான் நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்று பார்த்தேன். வேறு பெயருடன் எழுதி யிருந்தாலும் உங்களுக்கு வந்த 'செக்'கையும் அதனுடன் இருந்த கடிதத்தையும் நான் பார்க்கவில்லையென்று நினைக்கிறீர்களா, என்ன?" என்றாள்.

'ஹா' என்று மூர்ச்சையானேன்.

# கௌரி கல்யாணம்

என் மனைவி சரசு இருக்கிறாளே, அவளுக்கு எப்பொழுதும் மெள்ளப் பேசும் சுபாவமே கிடையாது. வெண்கலக் கடையில் யானை புகுந்தது என்று சொல்வார்களே, அதைப் போலத் தான் இருக்கும் இவள் குரலும். "இந்த வெண்கலக் கடையில் யானை புகுந்த" சப்தத்தை நான் "பஞ்சுக் கடையில் பூனை புகுந்த" சப்தமாகப் பண்ண என்ன பிரயத்தனப்பட்டும் பிரயோஜனப் படவில்லை.

ஒரு தடவை சரசு சற்றுப் பலமாகவே, "நம்ம கௌரி இத்தனை துஷ்டத்தனம் பண்ணுகிறாளே, இவளுக்கு எப்பேர்ப்பட்ட ஆம்படையான் வரப் போகிறானோ?" என்றாள். அவ்வளவுதான்! இது எப்படியோ ஏழு, எட்டுத் தரகர்கள் காதில் விழுந்துவிட்டது. அவர்கள் இந்த சந்தேகத்தை நிவர்த்திக்க அடுத்த நாளே வந்து சேர்ந்து விட்டார்கள்.

அடுத்த நாள் காலை நான் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் பொழுது ஒரு மடிசஞ்சிப் பிராமணன் வந்து சேர்ந்தார்.

"இதுதான் வெங்கடராமய்யர் கிரஹமோ?" என்றார்.

"ஆமாம்.. நான்தான் வெங்கடராமய்யர். என்ன சமாசாரம்?" என்றேன்.

"இல்லே, நான் திருவிடமருதூர். அங்கே ஒரு பையன் இருக்கான். தங்கக் கம்பி என்றால் தங்கக் கம்பிதான் போங்களேன். எனக்கு ரொம்பவும் வேண்டியவன், நான் கிறின கோட்டைத் தாண்டமாட்டான். பையன் பி. ஏ. பாஸ் பண்ணியிருக்கான். வேலே இன்னும் அகப்படவில்லே...... அதுக்கென்ன? அவனுக்குக் கலெக்டர் வேலே கொடுத்தாலும் பார்ப்பான், அத்தனை கெட்டிக்காரன். பொண்ணு அதிர்ஷ்டம் வேலே கிடைத்தாலும் கிடைத்து விடுகிறது. எதிர்ஜாமீன் ஒன்றும் கேட்கமாட்டான். நீங்கள் பணமே கொடுக்க வேண்டாம்னு பாருங்களேன்! பொண்ணுக்கு ரூ. 2,000-க்கு நகைகளும், பையனுக்கு ஒரு ரூ. 1,000-க்குச் செலவும் செய்தால் போதும். அவன் கையில் ஒரு தம்பிடி கொடுக்க வேண்டாம். அப்புறம், தீபாவளி, ஆறும் மாசம், இது இரண்டுக்கும் ஐந்நூறு, ஐந்நூறு செய்தால் போதும். அதற்கு மேல் மூச்சுவிட வேண்டாம். (இதற்கு மேல் நான் உயிரோடிருந்தால்தானே மூச்சு விடப் போகிறேன்!)........எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே போனர்.

நான் அவரை இடை மறித்து, "என்ன, நீங்கள் சொல்லுவது ஒன்றும் புரியவில்லேயே? இப்போது கலியாணத்திற்கு எங்காத்தில் பெண் ஒன்றும் இல்லேயே?" என்றேன்.

"எல்லாம் உங்கள் பெண்ணைப் பற்றித்தான் சொல்லுகிறேன்."

"என் பெண்ணுக்குக் கலியாணத்திற்கு ஒன்றும் அவசர மில்லையே!"

"என்ன அப்படிச் சொல்றேள்? அவசரம் இல்லேன்னு ஒன்று உண்டா? எல்லாம் காலா காலத்தில் கலியாணம் பண்றதுதானே தேவலை?" என்றார்.

இதற்குள் இன்னொரு "மடிசஞ்சி" வந்து சேர்ந்தார். இவரும் தரகர்தான் என்பது அவ ரைப் பார்த்த போதே தெரிந்தது.

"வெங்கட ராமய்யரைப் பார்க்க வந்தேன்."

"நான்தான் வெங்கடராமய்யர்" என்றேன்.

"இல்லை; நான் இருப்பது திருச்சிணுப்பள்ளி. அங்கே ஒரு பையன் இருக்கான். பார்க்கிறதற்கு வெகு லட்சணமா யிருப்பான். படிப்பு சொல் பம்தான். ஆனால் ஆஸ்தி ஒரு லட்சத்துக்கு இருக்கிறது. இந்தக் காலத்தில் படிப்பை எவன் லட்சியம் பண்ணுகிறான்? பி. ஏ. பாஸ் பண்ணி னவனெல்லாம்தான் லாட்டரி போடுகிறானே!—"

இவர் இப்படிப்பேசினது முதல் தரகருக்குப் பிடிக்கவில்லை. "பி.ஏ. பாஸ் பண்ணினவன் எவன் ஐயா லாட்டரி போடுகிறான்? பணத்துக்கு என்ன ஐயா? இன்றைக்கு இருக்கும்; நாளைக்குப் போகும். ஏதோ படிப்பு இருந்தால் நாலு இடத் தில் போய்ப் பிழைத்துக் கொள்வான். உம்ம பையன் லட்ச ரூபாய் ஆஸ்தியும் அப்படியே இருக்கும் என்று என்ன நிச்சயம்? நாளைக்கு ஒரு

பெரிய வெள்ளம் வந்து நிலங்களைப் பாழ் பண்ணி விடுகிறது என்று வைத்துக் கொள்ளும்."

"அவனுக்கு நிலம் இல்லேங்காணும். எல்லாம் பாங்கியில் ரொக்கமாக வைத்திருக்கிருனுக்கும்."

"பாங்கி முழுகிப்போய் விட்டதென்று வைத்துக்கொள்ளும்."

"பாங்கி முழுகிப்போனாலும் அவனுக்குப் பத்து வீடு இருக்கு, ஐயா!"

"வீடு நெருப்புப் பற்றிக் கொண்டு விட்டது என்று வைத்துக்கொள்ளும்—"

"என்ன ஐயா இது? சிவ பூஜையில் கரடி புகுந்தாற்போல் கலியாண விஷயம் பேசிக்கொண்டிருக்கும்போது அபசகுனமாய்ப் பேசுகிறீர்? உம்மைத் தெரியும் ஐயா, எனக்கு. திருவிடமருதூர் ஆசாமிதானே? 'மெட்ரிகுலேஷ'னில் நாலு தடவை 'கோட்' அடித்தானே உம் மாமா பிள்ளை; அவனைத்தானே 'பி. ஏ.' 'பி. ஏ.' என்று பொய் சொல்லிக்கொண்டு அலைகிறீர்?" என்றுர் இரண்டாம் தரகர் மிகவும் கோபத்துடன்.

முதல் தரகர் இதற்குத் துளிக்கூடச் சளைத்தவராகக் காணவில்லை. "உம்மையும் தெரியும் ஐயா, எனக்கு. நிற்கிறதற்கு நிழலில்லே, அந்த நொண்டிக் குப்பன் பிள்ளையைத்தானே நீர் லட்ச ரூபாய் ஆஸ்திக்காரன் என்று சொல்லிக்கொண்டு அலைகிறீர்! இன்னித் தேதியில் அவனுக்கு ஐவேஜி ஒரு காலணு உண்டா, சொல்லும்!"

சண்டை மிகவும் பலத்தது. சண்டை பார்ப்பதற்கு முதலில் சற்றுத் தமாஷா யிருந்த தால் நான் தலையிடவில்லை. ஆனால் இரைச்சல் பலமாகப் போகவே நான் குறுக்கிட்டு, "சுவாமி களே! ஏன் வீணாகச் சண்டை போடுகிறீர்கள்? நான்தான் என் பெண்ணுக்குக் கலியாணத் துக்கு அவசரமில்லை என்று சொன்னேனே" என்றேன்.

இதற்குள் இன்னும் இரண்டு தரகர்கள் அங்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களில் சற்று ஸ்தூலமாக இருந்தவர் முதலில் பேச ஆரம்பித் தார். "என்ன வெங்கட்ராமய்யர்! உங்கள் பெண்ணுக்கு வரன் தேடுகிறீர்களாமே! நேற்று ராத்திரிதான் என் காதில் பட்டது. (ஆம், என் மனைவியின் தொண்டை அத்தனை பெரி தாய் இருக்கும்போது, அது யார் காதில்தான் படாது?) தஞ்சாவூரில் ஒரு பையன் இருக்கிறான். பெரிய குடும்பம். அவன் தகப்பனாருடைய அம் மாஞ்சி பிள்ளைக்கு டிப்டி கலெக்டர் உத்தியோ கம். அவன் அத்தானுடைய மாமனார் பெரிய தாசில்தார். அவன் பாட்டியுடைய மாமாவுடைய பேரன் சீமைக்குப் போயிருக்கான், டாக்டர் பரீக்ஷை பாஸ் பண்ணுவதற்கு. ஏன், இந்தப் பையனுடைய முப்பாட்டனார் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் திவான் பேஷ்க்கார் வேலை பார்த்தார் என்றால், அவாள் எத்தனை பெரிய குடும்பம், நீங்களே பார்த்துக் கொள்ளுங் களேன்..............."

இதற்குள் இவருடன்கூட வந்திருந்தவரும், எங்கே எந்தச் சமயத்தில் ஒடிந்து விழுந்துவிடப் போகிறாரோவென்றுஇருந்தவருமான இன்னொரு தரகர் பேச ஆரம்பித்தார். "ஓய்! பையன் என்ன பண்றான்? அதைச் சொல்லும் ஓய்! முதலில்!"

"பையன் என்ன பண்ணினால் என்ன— சொந்தக்காரர் எல்லாம் பெரிய, பெரிய வேலை யில் இருக்கும்போது?"

"ஐயர்வாள்! நான் சொல்றதைக் கேளும். எனக்குத் தெரிந்து ஒரு 'பையன் இருக்கிறான். பையன் மாசம் ஐம்பது ரூபாய் சம்பளத்தில் இருக்கிறான். நல்ல ஆஸ்தி இருக்கிறது........" என்று என்னைப் பார்த்துப் பேச ஆரம்பித்தார் 'ஒல்லி' ஆசாமி.

"என் ஐயா, அந்த ஹோட்டல்கார சுப்பன் பிள்ளையைத்தானே சொல்லுகிறீர்?" என்று இடை மறித்தார் அந்தத் 'தடி' ஆசாமி.

"ஓய்! ஹோட்டல்காரனாயிருந்தால் என்ன ஐயா! ஹோட்டல் வைத்துப் பணம் சம்பாதித் தால் அது என்ன கசக்குமா? ஏன், இப்பொழுது என்னமோ துட்பட்டி கலெக்டர், திவான் பேஷ்க் காரர் என்றெல்லாம் பேசிக் கொண்டிருந்தீரே, அந்தப் பிள்ளையாண்டானும் ஹோட்டல்தானே வைத்திருக்கான்?"

அவ்வளவுதான். அவர்களுடைய ஒருவர் குடுமி இன்னொருவர் கையில் சிக்கியது. இந்தச் சமயத்தில் இன்னும் இரண்டு தரகர்கள் உள்ளே நுழைந்தார்கள்.

சரி, இனிமேல் பேசாதிருந்தால் விஷயம் முற்றி விடும் என்று நான் பயந்து அவர்களைப் பார்த்து, "நான் என் பெண்ணுக்கு இப்பொழுது கலியாணம் பண்ணப் போவதில்லை. அவள் என்னைக் கலியாணம் பண்ணி வை என்று இன்னும் கேட்கவில்லை" என்றேன்.

"கலியாணம் பண்ணி வை என்று பெண்களே கேட்பார்களா? நீங்கள் உங்கள் பெண்ணை இங்கு கூப்பிடுங்கள். நாங்கள் எங்கள் மாப்பிள்ளைகளைப் பற்றிச் சொல்லுகிறோம். யார் தனக்கு இஷ்டம் என்று அவளே சொல்லட்டும்" என்றார்கள் தரகர்கள்.

"சரசு! கௌரியை இங்கே கூட்டிக் கொண்டு வா!" என்று ஒரு இரைச்சல் போட்டேன்.

"அவள் குதிருக்கடியில் ஒளிந்து கொண்டிருக்காள்" என்று உள்ளேயிருந்து பதில்வந்தது.

"என்ன, கலியாணப் பேச்சை எடுத்ததும் அவளுக்கு வெட்கம் வந்துவிட்டதா, என்ன? எல்லாம் இங்கு இழுத்துக்கொண்டு வா" என்றேன்.

இரண்டு நிமிஷங்கள் கழித்து சரசு கௌரியை இடுப்பில் தூக்கிக் கொண்டு காட்சியளித்தாள். என்ன......... இடுப்பிலா என்று ஆச்சரியப்படுகிறீர்கள்? நீங்கள் ஆச்சரியப்படுவது எனக்கு ஆச்சரியமா யிருக்கிறதே! மூன்று வயதுக் குழந்தையை இடுப்பில் தூக்கிக் கொள்ள மாட்டார்களா, என்ன?

# இப்பொழுது தெரிகிறதா?

"என்னடா, கொஞ்ச நாட்களாக 'நாடோடி' யின் கட்டுரைகளையே காணுமே! ஒரு வேளை தன் பெயருக்கேற்றாற்போல் தேச சஞ்சாரம் கிளம்பி விட்டாரோ என்னமோ!" என்று நீங்கள் நினைக்கா விட்டாலும், நீங்கள் அந்த மாதிரி நினைத்துக் கொண்டிருப்பீர்கள் என்று நான் நினைத்துத் தான் சமாதானம் சொல்ல முன் வந்திருக்கிறேன்.

என்னுடைய கதை தீபாவளித் தினத்தன்று ஆரம்பமாகிறது. அன்று விடியற்காலை எழுந்து ஸ்நானம் பண்ணிவிட்டு என் மனைவி செய்து கொடுத்த பக்ஷணங்களைச் சுவை பார்த்துக் கொண்டிருந்தேன். பக்ஷணங்கள் மிகவும் நன்றாகத்தானிருந்தன. முதல் நாளிரவு மனைவி புடவை வகையராக்களுக்காகவே ரூபாய் நூற்று ஐம்பத்தேழு செலவழித்திருக்கும்போது பக்ஷணங்கள் நன்றாயில்லாமலா யிருக்கும்? என் மனைவியும் ஒன்றும் எதிர்த்து வாயாடாமல் சமையல் அறையில் ஏதோ செய்து கொண்டிருந்தாள். ஒரு வேளை வாயிலிருந்த பக்ஷணங்கள் அவளைப் பேசவொட்டாமல் செய்து விட்டனவோ, என்னவோ!

இந்த மாதிரி பக்ஷணங்கள் இவ்வளவு நேர்த்தியாய் அமைந்ததும், என் மனைவி தன்

குரலைக் காட்டாமல் சமையலறையில் தன் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்ததும், எனக்கே பொறுக்கவில்லை. ஏன், தெய்வத்துக்குக் கூடப் பொறுக்கவில்லை போல் தோன்றுகிறது. சடக்கென்று என் வாயில் ஒரு கல் அகப்பட்டுக் கொண்டது.

இங்கிலீஷ் அரசாங்கம் ஏற்படுவதற்கு முன்னமேயே, நம்மைப்போல் தரித்திர நாராயணன் ஒருவர், "கல்லைத்தான் மண்ணைத் தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா!" என்று கடவுளை நொந்துகொண்டிருக்கிறார். அந்தக் கடவுளுக்கு இந்தியாவில் இங்கிலீஷ் அரசாங்கம் ஏற்படப் போகிறது என்று தெரிந்தும், ஜனங்களுக்கு இந்த வித்தையை இன்னும் கற்பிக்கவில்லை யாதலால், என்னால் அந்தக் கல்லைக் கடிக்க முடியாமற் போகவே, எனக்கும் என் மனைவிக்கும் வாக்கு வாதம் பலமாக வளர ஆரம்பித்து விட்டது.

"அடி பாவி! இந்த மாதிரி கல்லைப் போட்டு என் பல்லை உடைக்க வேண்டுமென்று பார்க்கிறாயா?" என்று சிங்கம் போல் கர்ஜித்தேன்.

"ஆமா! ஒரு கல் அகப்பட்டால் தான் என்ன குடி முழுகிப் போச்சு? இதுக்காகப் பல் உடைந்து விடுமா?" என்று சீறினாள் என் மனைவி.

"அப்படியா! இதோ பார்" என்று என் மனைவியின் மேலிருந்த கோபத்தை யெல்லாம் வைத்துக்கொண்டு அந்த கல்லை 'நறுக்'கென்று

ஒரு கடி கடித்தேன். அவ்வளவுதான். வந்தது மோசம்! என்னுடைய கடை வாய்ப் பல் ஒன்று ஆட ஆரம்பித்து விட்டது.

இரண்டு நாள் கழித்து, எனக்கு வலி பொறுக்க முடியாமற் போகவே, என் மனைவி, அவளுக்கு வேலை செய்வதற்குச் சோம்பலா யிருக்கும் போதெல்லாம் உபயோகப்படுத்து வதற்காக வைத்திருந்த இமிருதாஞ்சன டப் பாவை எடுத்து ஆடுகிற பல்லின் மேல் சிறிது தடவினேன்.

அடுத்த நாள் காலை முக க்ஷவரம் செய்து கொள்வதற்காக நான் கண்ணாடியின் முன் உட் கார்ந்து கொண்டிருந்தேன்......என்ன ஆச்சரி யம்! முகத்தில் என் கண்ணாடியே......இல்லை, கண்ணாடியில் என் முகமே தெரியவில்லை. கண் ணாடியை எப்படித் திருப்பிப் பார்த்தும்—பின் பக்கம் திருப்பிப் பார்த்தும்கூட—என் முகம் அதில் தெரியவில்லை. அதற்குப் பதிலாக வேறு யாரோ ஒருவருடைய முகம் அதில் தெரிந்தது. என்ன விகாரமான முகம்! இடது பக்கத்துக் கன் னம் அப்படியே 'பம்'மென்று வீங்கி யிருந்தது.

இப்படிப்பட்ட அதிரூப சௌந்தரியன் யார் என்று தெரிந்து கொள்வதற்காகப் பின் பக்கம் திரும்பிப் பார்த்தேன். ஆனால் அங்கும் ஒருவரையும் காணவில்லை. பிறகு ஏதோ யோசனை பண்ணிக் கொண்டே சோப்பைக் கன் னத்தில் தடவிக்கொள்ளும் பொழுது தான்

எனக்கு உண்மை புலனாயிற்று. கண்ணாடிக்குள் தெரிந்த மனிதன் நான்தான். என்னுடைய முகம்தான் அப்படி 'பம்' என்று வீங்கி யிருந்தது!

கன்னம் வீங்கிக்கொண்டு விட்டது என்று தெரிந்ததும் அதற்கு வைத்தியம் பண்ண வேண் டியது அவசியமாகிவிட்டது. எனக்குப் பக்கத்து வீட்டில் நஞ்சுண்ட சாஸ்திரி என்னுமோர் ஆயுர் வேத வைத்தியர் வசிக்கிறார். "பக்கத்து வீட்டி லிருக்கிறாரே, அவரைத்தான் ஆதரிப்போமே" யென்று நினைத்துக்கொண்டு அவரிடம் வைத்தி யம் செய்துகொள்ள ஆரம்பித்தேன்.

ஒரு வாரம் கழித்துப் பார்த்தபோது என் னுடைய வலது கன்னமும் சற்று வீங்கி யிருப் பதைக் கண்டேன். வைத்தியரைக் கண்டு, "என்னய்யா இது! இடது கன்னத்தைச் சொஸ் தப் படுத்துகிறேன் என்று சொல்லிவிட்டு வலது கன்னத்தையும் வீங்க வைத்து விட்டீரே?" என்றேன்.

"ஆமாங்கணும்! இது ஒரு புது மாதிரியான வைத்தியம். நானே கண்டுபிடித்தது. இரண்டு கன்னங்களும் வீங்கி விட்டால் அவை இரண்டை யும் சேர்ந்தாற்போல் சொஸ்தப்படுத்த என் னிடம் பஸ்பம் இருக்கிறது. அந்தப் பஸ்பத்தை இப்பொழுது கொடுத்தேனானால் இடது கன்னம் வீக்கம் குறைவதோடுகூட வலது கன்னம் இன் னும் உள்ளே போய்விடும்" என்றார்.

"ஐயையோ ! அப்படியானால் சொஸ்தமாக இன்னும் எத்தனை நாள் ஆகும்?"

"சொஸ்தமா ! வலது கன்னம் வீங்குவதற்கே இன்னும் ஒரு மாதம் ஆகுமே. அதற்குத் தானே இப்பொழுது மருந்து கொடுத்துக் கொண்டு வருகிறேன்?"

"ஒரு மாதமா? என்னய்யா விளையாட்டாக இருக்கிறது? ஒரு கன்னம் வீங்கிக் கொள்வதற்கு ஒரு மாதமா? என் இடது கன்னத்தை ஒரே நாளில் வீங்கப் பண்ணிக்கொண்டேனே!"

ஆனால் வைத்தியர் நான் சொன்னது ஒன்றுக்கும் செவி சாய்ப்பவராயில்லை. ஒரே வார்த்தையில், சற்றுக் கடுமையாகவே, "இது தான் வைத்திய முறை. இஷ்டமானால் பண்ணிக் கொள்ளும். கஷ்டமானால் வேண்டாம். இந்தாரும், இது வரையில் ஆன செலவுக்கு பில்" என்று சொன்னார்.

பார்த்தேன்! யார் கோபத்திற்கு ஆளானாலும், வைத்தியர், அதிலும் பக்கத்து வீட்டுக் காரர் கோபத்திற்கு ஆளாகக்கூடாது என்று யோசித்து, இன்னும் சில நாட்களுக்கு வைத்தியம் செய்து பார்க்கலாம் என்று தீர்மானித்தேன். வைத்தியர் கொடுத்த மருந்து நல்ல மருந்துதான் போலிருக்கிறது. ஏனெனில் அவர் சொன்னபடியே வலது கன்னம் கொஞ்சம் கொஞ்சமாக வீங்கிக்கொண்டே வந்தது.

வலது கன்னம் வீங்க வீங்க, எனக்குப் பயம் அதிகமாகிக் கொண்டே வந்தது. "என்னடா

இது? "தலைவலி போயத் திருகுவலி வந்தது" என்று சொல்வார்களே, அதைப் போலல்லவா இருக்கிறது? ஒரு கன்னம் வீங்கி யிருந்ததற்குப் பதிலாக இரண்டு கன்னமும் வீங்கி விட்டதே" என்று நினைத்துக்கொண்டு, எதற்கும் ஓர் இங்கிலீஷ் டாக்டரிடம் காட்டலா மென்று போனேன்.

அவர் என்னுடைய எடை, உயரம், மார் பகலம் எல்லாவற்றையும் அளந்து கொண்ட பிறகு, விருத்தாந்தங்களை விசாரித்தார். நான் நடந்த விஷயங்களைச் சொன்னதும், "அடடடடா! நம் ஜனங்களே எப்பொழுதும் இப்படித்தான். பத்து இடத்தில் நாட்டு வைத்தியமும், காட்டு வைத்தியமும் செய்து பார்த்துவிட்டுக் கடைசியில் வந்து இங்கிலீஷ் டாக்டர் கழுத்தை அறுக்கிறது" என்று முனகிவிட்டு, "இந்தாங்கோ சார்! முதல் முதலில் சமீபத்தில் வீங்கிக்கொண்ட வலது கன்னத்தைச் சரிப்படுத்திக் கொண்டுதான் இடது கன்னத்தைக் கவனிக்க முடியும்" என்று சொல்லிவிட்டு வலது கன்னத்திற்கு ஏதோ மருந்து தடவ ஆரம்பித்தார்.

என்ன ஆச்சரியம்! நஞ்சுண்ட சாஸ்திரி இரண்டு வாரங்கள் சிரமப்பட்டு வீங்க வைத்த கன்னத்தை இரண்டே நாளில் வடிய வைத்துவிட்டார். ஆனால் இடது கன்னத்தில் அவருடைய பாச்சா பலிக்கவில்லை. ஒரு வாரமாக மருந்து போட்டும் அது குணமடையும் வழியாயில்லை.

இதற்குள் என்னுடைய நண்பர்கள் சிலர், இந்த மாதிரி 'பிரைவேட்' டாக்டர்களிடம் வைத்தியம் பண்ணிக் கொண்டால் இப்படித் தான் நாள் நடத்திக்கொண்டு போவார்கள் என்றும், சர்க்கார் ஆஸ்பத்திரியில் பார்ப்பது தான் நல்லதென்றும், அங்கு ஒருவரல்ல, இருவரல்ல, அநேக டாக்டர்கள் என்னைக் கவனித்துக் கொள்ள இருப்பதாகவும் சொன்னார்கள்.

அதன்படியே ஒரு சர்க்கார் ஆஸ்பத்திரியை அடைந்து அவர்கள் கொடுத்த ஒரு கட்டிலில் படுத்துக் கொண்டேன். என் நண்பர்கள் சொன்ன படியே அங்கு ஒரு பெரிய டாக்டர், அவருக்குக் கீழ் ஒரு சின்ன டாக்டர், அவருக்குக் கீழ் ஒரு குட்டி டாக்டர், இந்த மாதிரி படிப்படியாக அநேக டாக்டர்கள் இருக்கிறார்கள்.

நான் அங்கு போய்ச் சேர்ந்ததுதான் தாமதம், யாரோ இரண்டு டாக்டர்கள் வந்துபார்த்தார்கள்.

**ஒருவர்** :—பல் வலியினால் தானே கன்னம் வீங்கிக் கொண்டுவிட்டது? அந்தப் பல்லைப் பிடுங்கிவிட்டால், தானாகவே வீக்கம் குணமாகி விடும்.

**மற்றொருவர்** :—நோ! நோ! நோ! பல்லைப் பிடுங்கினால் வீக்கம் இன்னும் அதிகமாகிவிடும்.

* ஐந்து நிமிஷங்கள் கழித்து வேறு இரண்டு டாக்டர்கள் வந்தார்கள்.

**ஒருவர்** :—உடனே ஆபரேஷன் பண்ண வேண்டும். இல்லாவிடில் வீக்கம் வடியாது.

மற்ருெருவர் :—இப்பொழுது ஆபுரேஷன் பண்ணுவது அபாயம். வீக்கம் வாடிய பிறகு வேண்டுமானுல் ஆபரேஷனைப் பற்றி யோசித்துக் கொள்ளலாம்.

ஐந்து நிமிஷங்கள் கழித்து இன்னும் இரண்டு டாக்டர்கள் வந்தார்கள்.

ஒருவர் :—ஆடுகிற பல்லுக்குப் பக்கத்துப் பல்லைப் பிடுங்கி விட்டால் நல்லது.

மற்ருெருவர் :— ஒரு பக்கத்துப் பல் போதாது. இரண்டு பக்கத்துப் பல்லையும் பிடுங்கிவிட வேண்டும்.

ஐந்து நிமிஷங்கள் கழித்து ஒரு டாக்டர் தனியாக வந்து பார்த்தார்.

"அடாடாடாடா! கன்னம் எப்படி வீங்கிப் போய் விட்டது! வியாதி வந்த பிறகு இங்கு வருகிறீர்களே யொழிய, முன்னுலேயே கவனித்துக் கொள்ளுகிறதில்லை. ஏன் கன்னம் வீங்கிக் கொள்வதற்குமுன் இங்கு வரக்கூடாது?" என்று கடிந்து கொண்டார்.

இதற்குள் இன்னொரு டாக்டர் வந்து பார்த்துவிட்டு, "இவருடைய ரத்தத்தைப் பரிசோதனைக்காகச் சீமைக்கு அனுப்ப வேண்டும். அதைப் பார்த்துக் கொண்டுதான் இவருக்கு என்ன வைத்தியம் செய்யலாம் என்று தீர்மானிக்க முடியும்" என்ருர்.

இதற்கு முதலில் வந்தவர், "ரத்தத்தை மாத்திரம் அனுப்பினுல் போதாது. ஆடுகிற பல்லையும்

பிடுங்கி அனுப்ப வேண்டும். சீமைக்கு அனுப்பு வதைவிட அமெரிக்காவுக்கு அனுப்புவது நல் லது" என்றார்.

இன்னும் எத்தனை டாக்டர்கள் வரப்போகி றார்களோ என்று நான் கதி கலங்கிக் கொண் டிருக்கையில் இவர்கள் எல்லோரும் போய்ப் பெரிய டாக்டரைக் கூட்டிக்கொண்டு வந் தார்கள்.

பேருக்கு மாத்திரம் பெரிய டாக்டரே ஒழிய, ஆள் உருவத்தில் சிறியவராய்த் தானிருந்தார்.

"இன்னும் ஒரு வாரம் 'ஆப்சர்வேஷ'னில் வைத்திருக்க வேண்டும். அதற்கு மேல்தான் ஏதாவது சொல்ல முடியும்" என்று சொல்லி விட்டுப் போய்விட்டார்.

அதன்படியே நான் ஒருவாரம் 'ஆப்சர்வேஷ' னில் இருந்தேன். 'ஆப்சர்வேஷன்' என்றால் ஏதோ ஒரு பெரிய மலையைத் தாங்கிக் கொண் டிருக்க வேண்டும் என்று நினைக்காதீர்கள். தினம் இரண்டு ஆரஞ்சு, எட்டு பிஸ்கட், இரண்டு ரொட்டி, இரண்டு கப் காப்பி, மூன்று டம்ளர் பால் சாப்பிட வேண்டியது, அவ்வளவுதான். அதோடு கூடப் படுக்கையை விட்டு அந்தண்டை இந்தண்டை அசையாது, சாப்பிட்ட வேளை தவிரப் பாக்கி நேரமெல்லாம் படுத்துத் தூங்க வேண்டியது.

'ஆப்சர்வேஷன்' முடிந்ததும் பெரிய டாக் டர் பத்து வாலிபர்கள் புடை சூழ வந்து சேர்ந்

தார். அந்தப் பத்துப் பேரும் வைத்தியப் பரீ கைக்ஷக்கு வாசிக்கும் மாணவர்களாம். அவர்க ளிடம் என் வியாதியைக் குறித்து என்னென்ன னமோ சொல்லிக் கொண்டு வந்தார்.

அந்தப் பத்துப் பேரும் பொல்லாத பசங் கள். ஒவ்வொருத்தனும் என் கன்னத்தை அமுக் கிப் பார்ப்பதும், பல்லை ஆட்டிப் பார்ப்பதும், "நாக்கை நீட்டு" என்று சொல்வது மாகவே இருந்தார்கள்.

என்னால் அந்த வேதனையைச் சகிக்க முடிய வில்லை. அந்தப் பத்து பசங்கள் கன்னத்திலும் பத்து அறைகள் கொடுத்து, அவர்கள் கன்னத் தையும் என் கன்னத்தைப்போல் வீங்கவைத்து விடலாமா வென்று யோசனை பண்ணினேன்.

இதற்குள் பெரிய டாக்டர் கேட்டுக்கொண் டதின் பேரில் ஒவ்வொரு மாணுக்கனும் எனக்கு என்ன வைத்தியம் செய்யலா மென்று சொல்ல ஆரம்பித்தான். முதலில் வந்து பார்த்த டாக்டர் கள் சொன்னபடியே, ஒருவன் ஆபரேஷன் என் றும், ஒருவன் பல்லைப் பிடுங்கலாம் என்றும் இந்த மாதிரியே சொல்லிக்கொண்டு போனார்கள்; கடைசிப் பையன் முறை வந்தது.

"வீக்கம் கண்ணுக்கு வெகு சமீபத்தில் இருக்கிறபடியால் அது நாளடைவில் கண்ணைக் கெடுப்பதற்கு முன்னமேயே நாம் கண்ணைப் பிடுங்கிவிட வேண்டும்" என்றான் அவன்.

அவன் சொல்லி வாய் மூடவில்லை. கொடுத்தேன் அவன் முகத்தில் ஒரு குத்து. அவன் திருப்பிக் குத்தினுன் ஒரு குத்து. அவ்வளவுதான். ஆடுகிற பல்லும், இந்தப் பக்கத்துப் பல் இரண்டும், அந்தப் பக்கத்துப் பல் இரண்டுமாக ஐந்து பற்கள் வெளியே வந்தன.

பெரிய டாக்டர், சிரித்துக்கொண்டே "வெகு சுலபமாகப் பிடுங்கியாய்விட்டது. இன்னும் ஒரு வாரம் 'ஆப்சர்வேஷ'னில் வைத்துப் பார்த்துவிட்டு ஆபரேஷன் செய்ய யோசனை பண்ணலாம்" என்ருர்.

"நீருமாச்சு! உம்முடைய ஆபரேஷனுமாச்சு!" என்று சொல்லிவிட்டு ஆஸ்பத்திரியை விட்டு வெளிக் கிளம்பிவிட்டேன்.

இடது கன்னத்து வீக்கம் இன்னும் அப்படியே தானிருக்கிறது. நஞ்சுண்ட சாஸ்திரியிடமே திரும்பிப் போகலாமென்ருல், அவர் வலது கன்னத்தையும் வீங்க வைத்துவிடுவார்... "வீக்கம் இருந்துவிட்டுத்தான் போகட்டுமே. அது என்ன, நம்மைச் சாதம் கேட்கிறதா, தீர்த்தம் கேட்கிறதா? நமக்கு இனிமேல் அழகு என்னத்திற்கு? யார் பெண் கொடுக்கப் போகிருர்கள்? இந்தப் பெண்டாட்டியிடம் படும் பிடுங்கல் போதாதா?" என்றும் ஒரு சமயம் தோன்றுகிறது.

இப்பொழுது தெரிகிறதா நான் ஏன் கட்டுரை எழுதவில்லையென்று? அல்லது இப்பொழுது ஏன் எழுதினேனென்று?

# யாரும் எழுதாத கட்டுரை

என்ன கட்டுரை எழுதியனுப்பினாலும் அது எனக்கு மறு தபாலில் திரும்பி வந்து விடுகிறது. ஏன் என்று கேட்கப் போனால், "இது பழசு, பிரயோசனமில்லை. இது மாதிரி எத்தனையோ பேர் எழுதியனுப்பி விட்டார்கள்; எங்களுக்குப் புது சமாசாரம் வேண்டும்" என்று ஆசிரியரிடமிருந்து பதில் வருகிறது.

சரி, இது வரையில் யாரும் எழுதாத, யாரும் பேசாத விஷயம் ஏதாவது இருக்கிறதாவென்று யோசனை பண்ணினேன். இது மாதிரி சமயங்களில் கதாசிரியர்கள் தங்கள் மனைவியின் தயவைத் தான் எதிர் பார்ப்பது சம்பிரதாயம். ஆகவே என் மனைவியைக் கூப்பிட்டுக் கேட்டதில் அவள், "ஆமா, போங்கோ, நேற்று அம்மாவுக்குப் பணம் அனுப்பினதற்கு என்னைத்தான் உத்தரவு கேட்டேளோ? இதுக்கு மாத்திரம் கேட்க வந்து விட்டீர்களே!" என்று சண்டை போட ஆரம்பித்து விட்டாள். அப்புறம் கெஞ்சிக் கூத்தாடிக் கேட்டதில (சொல்வதற்கே வெட்கமாயிருக்கிறது!) நாணிக் கோணிக்கொண்டு, "சுங்கடிப் புடவையைப் பற்றி எழுதுங்கோ; அதை இப்பொழுது ஒருவரும் கட்டிக் கொள்வதுமில்லை, அதைப் பற்றிப் பேசுவதுமில்லை" என்று சொன்னாள்.

இவளிடம் யோசனை கேட்பதை விடக் குட்டிச் சுவரில் முட்டிக் கொண்டாலாவது யோசனை

கிடைக்குமென்று யோசித்து இந்தப் புதிய யோசனையை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவதற்காகத் தெருக் கோடியிலிருந்த குட்டிச் சுவரைத் தேடிக்கொண்டு போனேன். வெண் ணெய் வரும் சமயத்தில் தாழி உடைந்தது போல, ஒரு போலீஸ்காரன் என்னை வந்து தடுத் தான். அவனைக் கண்டதும், எனக்குக் கட்டு ரைக்கு வேண்டிய யோசனை தோன்றிவிட்ட படி யால், அவனிடமிருந்து தப்பித்துக் கொண்டு, வீடு போய்க் கட்டுரை எழுத ஆரம்பித்தேன்.

இது, போன பதினைந்துவருஷங்களாக யாரும் எழுதாத சமாசாரம்......அதாவது, நமது காருண்ய துரைத்தனத்தார் நமக்குச் செய்துள்ள நன்மைகள்.

பதினைந்து வருஷங்களுக்கு முன், எங்கே கண்டாலும், பொதுக் கூட்டங்களிலும், நாடக மேடைகளிலும், ஆற்றோரத்திலும், இதே பேச் சாகத் தானிருந்தது, அதிலும் நமது பாடசாலை மாணவர்கள் வாசிக்கும் புத்தகங்களைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். பக்கத்துக்குப் பக்கம் இதே போதனைதான். ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் முதலியவற்றில் உள்ள நீதி வாக்கியங் கள் போல், இதையும் ஒரு பெரும் உண்மை யாக ஜனங்கள் போற்றி வந்தார்கள். ஆனால் காந்தி மகான் ஒத்துழையாமை இயக்கம் ஆரம் பித்தாலும் ஆரம்பித்தார், எல்லாரும் இந்த சமா சாரத்தை மறந்தே போய் விட்டார்கள். பதி னைந்து வருஷமாக இதைப்பற்றி ஒருவரும்பேசுவ தில்லை; அதைவிட முக்கியம்—எழுதுவதில்லை.

ஆகவே அந்த மறந்து போன விஷயத்தைப்பற்றி இப்போது நான் எழுதுவது புதியதுதானே?

(1) முதலாவதாக, இதுதான் ரொம்ப முக்கியமான நன்மை. நாம் தற்கொலை புரிந்து கொள்ளாதபடி நம்மை நமது சர்க்கார் காப்பாற்றிக்கொண்டு வருகிறார்களல்லவா? அந்தக் குட்டிச் சுவருக்குப் பக்கத்தில் அந்தப் போலீஸ்காரன் நிற்காவிட்டால் என்னுடைய கதி என்னவாகி யிருக்கும்? நம் தேசத்தில், நாம் இருக்கும் ஏழ்மை ஸ்திதியையும், படும் கஷ்டங்களையும் பார்க்கும்போது, நாம் ஒருவரும் வாழ்க்கையை விரும்பவில்லை.

ஆனால் நம் சர்க்கார், நாம் அசட்டுத்தனமாக ஏதாவது செய்து விடாதபடி நம்மைக் காப்பாற்றி வருகின்றனர். நீங்கள் தற்கொலை செய்து கொள்ளப் பிரயத்தனப் படுவதைப் போலீஸார் பார்த்துவிட்டால், உங்கள் பாடு ஆபத்துத்தான்; உயிரை வாங்கி விடுவார்கள்! நீங்கள் காரியத்தை முடித்த பிறகு கண்டு பிடித்தார்களோ, அப்போதும் உங்கள் பாடு ஆபத்துத்தான். நீங்கள் எப்படி இறந்தீர்கள், என்ன விஷம் சாப்பிட்டீர்கள், சாப்பிட்ட அளவு என்ன என்று குடலைப் பிடுங்கிக் கண்டுபிடித்த பிறகுதான், உங்களை வெளியே அனுப்புவார்கள்.

என்னைப் பொறுத்த மட்டில் எனக்கு மாத்திரம் சர்க்கார் உத்தரவு கொடுத்து விட்டால், ஒரு நாளைக்கு நூறு தடவை தற்கொலை புரிந்து கொண்டிருப்பேன். "பால்காரன் பணம் கேட்

கிருன்"...சரி, தற்கொலை. "தயிர்க்காரி பணம் கேட்கிருள்"......சரி, தற்கொலை. "அடுத்த வீட்டு அம்மாள் கொடுத்த ஐந்து ரூபாயைத் திருப்பிக் கேட்கிருள்"......சரி, தற்கொலை. "கட்டிக் கொள்ளப் புடவை யில்லை."......சரி, தற்கொலை.

அப்புறம் பால்காரன், தயிர்க்காரன், நெய்க் காரி, அடுத்த வீட்டு அம்மாள் எல்லாரும் தலையில் கையை வைத்துக்கொண்டு போக வேண்டியது தான் !

(2) இரண்டாவதாக, இதுதான் ரொம்ப முக்கியமான நன்மை. இந்த மகத்தான உப காரத்தை நமது சர்க்கார் நமக்குச் செய்து கொண்டிருக்கிருர் களென்று எனக்கு ஐந்து வருஷங்களுக்கு முன்பு தான் தெரியும். அதுவும் மகாத்மா காந்தி மூலமாய்த்தான். நமது சர்க் கார், எவ்வளவோ சிரமப்பட்டு, அதற்கென்று தனி உத்தியோகஸ்தர்க ளெல்லாம் நியமித்து, நமது சமுத்திரத்தில் இருக்கும் உப்பை யாரும் திருடர்கள் திருடிக்கொண்டு ஓடிப் போகாதபடி காப்பாற்றிக் கொண்டு வருகின்றனர்.

ஆனல் அது தெரியாமல் மகாத்மா காந்தி, யார் வேண்டுமானலும் சமுத்திரத்திற்குப் போய் உப்பு அள்ளிக் கொண்டுவர உத்தரவு கேட் கிருர். அப்படி எல்லாரையும் எடுத்துக்கொண்டு போக விட்டுவிட்டால், ஒரு சர்க்கார் உத்தி யோகஸ்தர் என் காதோடு மாத்திரம் சொன்ன கணக்குப்படி, இன்னும் மூன்று வருஷம், ஏழு மாதம் இருபத்து மூன்று நாள், பதிஞேரு மணி,

ஐம்பத்தேழு நிமிஷம், முப்பத்தேழு விநாடிக்குள் சமுத்திரத்தில் இருக்கும் உப்பெல்லாம் தீர்ந்து போய் விடும். பிறகு நமக்குச் சாப்பிடுவதற்கு உப்பே இருக்காது. இப்பவே நமது ரோசம் கேட்க வேண்டியதில்லை! உப்பும் இல்லையென்றால் சொல்ல வேண்டியதில்லை.

(3) மூன்றாவதாக, இதுதான் ரொம்ப முக்கியமான நன்மை. நமக்கெல்லாம் பாக்கி தேசத்தார்போல் ராணுவப்பயிற்சி செய்து வைத்து, துப்பாக்கி வைத்துக்கொள்ள உத்தரவு கொடுக்காததுதான். இப்படிக் கொடுத்து விட்டால், நாமெல்லாரும் ஒருவருக்கொருவர் சண்டை போட்டு மண்டையை உடைத்துக் கொண்டு விடுவோம். ஆனால் ஒன்று. யாருக்குத் துப்பாக்கி கொடுத்தாலும் கொடுக்கட்டும். அடுத்த வீட்டு ராமசாமிக்கு மாத்திரம் கொடுக்க வேண்டாம். அவனிடம் ஏதோ அவசரத்தில் ஐந்து ரூபாய் கடன் வாங்கினதற்காக அவன் என்னைச் சுட்டு விடுவேன் என்று பயமுறுத்துகிறான். நல்ல வேளை, அவன் கையில் துப்பாக்கி இல்லை!

(4) நான்காவதாக, இன்னொரு முக்கியமான நன்மை, சமீபத்தில் ஸ்ரீமான் கிரெய்க் துரை விளங்கச் சொன்னார். அதுதான் நம் சர்க்கார், நம் நன்மையை உத்தேசித்து வங்காள விரிகுடாவில் ஒரு சொர்க்கம் ஏற்படுத்தியுள்ளது. (அந்தமான் தீவை அவர் சொர்க்கம் என்று சொன்னதைத் தான் குறிப்பிடுகிறேன்.) அங்கே உள்ள ஜனத் தொகையில் 100-க்கு 17 பேர்தான்

ஸ்திரீகளாம். இதிலிருந்தே அது சொர்க்கமாய்த் தானிருக்க வேண்டுமென்று தோன்றவில்லையா!

இதுவரையில் நாம் சொர்க்கத்திற்குப் போவதற்கு என்னென்னமோ வழிகளைக் கைப் பற்றி வந்தோம். பிச்சை போடுதல், சத்திரம் சாவடி கட்டல், பிறருக்கு அன்னம், உடை முதலி யன அளித்தல், கோவில் குளம் அமைத்தல் முதலியன. அப்படிச் செய்தும் சொர்க்கத்திற் குப் போகிறோமா வென்று நமக்குத் தெரியாது. ஆனால் இந்த சொர்க்கத்திற்குப் போவது அவ்வ ளவு கஷ்டம் இல்லை. யாராவது வக்கீலைக் கேட் டால், சட்ட புத்தகங்களைப் புரட்டிப் பார்த்து, சுலபமான வழி கண்டுபிடித்துச் சொல்வார்.

(5) ஐந்தாவதாக...போதும்! போதும்!! இதற்குமேல் சொன்னால் இந்தத் துரைத்தனத் தார் எனக்கு ஏதாவது ஸர், கிர் பட்டம் கொடுத்து விடுவார்கள். பட்டத்தைக்கூட சிர மப்பட்டுப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் எல்லாருக்கும் விருந்து வைக்கவேண்டும். விருந்து கூட வைத்து விடலாம். ஆனால் அதற்கு நமது புது கவர்னரைக் கூப்பிடவேண்டும். அவரைக் கூப்பிடுவதில் எனக்கு இஷ்டமில்லை. ஏனெனில், கவர்னர் வேலை காலிக்கு நானும் அப்ளிகேஷன் போட்டிருந்தேன். இவர் எனக்குப் போட்டியாக அப்ளிகேஷன் போட்டு, யாரையோ 'காக்கா' பிடித்து வேலையை அடித்துக் கொண்டு போய் விட்டார்!

★

# வண்ணான் வந்தானே!

வேங்கடராமய்யர் வீட்டில் அன்று ஏக நிர்த்தூளி. ஒரு மாத காலமாக வராத வண்ணான் வீட்டிற்கு வந்திருக்கிறானென்றால், வீட்டில் நிர்த்தூளி யில்லாமலா இருக்கும்? நான்கு வருஷங்களுக்கு முன்னர் கலியாணம் ஆனதும் ஆகாததுமாகப் புருஷனுடன் பம்பாய்க்குப் புறப்பட்டுச் சென்ற வேங்கடராமய்யர் பெண் ஜானகியும், அவள் புருஷன் கோபால கிருஷ்ணனும் வந்திருந்தால் கூட வீடு அத்தனை நிர்த்தூளிப் பட்டிருக்காது. இத்தனை தூரம் வளைத்து வளைத்துச் சொல்வானேன்? வேங்கட்ராமய்யர் குடும்பத்திற்கு எத்தனையோ வேண்டியவனான நானே அவர் வீட்டிற்குப் போனால்கூட அத்தனை வரவேற்புக் கிடைத்திருக்காதென்றால் வேறு என்ன சொல்ல வேண்டும்!

வண்ணான் தன் காலை வாசல் படியில் வைத்தானோ இல்லையோ, கிட்டுப் பயல் அவனைப் பார்த்துவிட்டான். அவ்வளவுதான். உடனே "வண்ணான் வந்துவிட்டான், வண்ணான் வந்துவிட்டான்" என்று வீடு கிடு கிடுத்துப் போகும்படி கத்தினான். தண்ணீர் அற்று வரண்டு கிடக்கும் பூமியில் ஒரு நல்ல மழை பெய்தாற்போல வுள்ள இந்த சப்தத்தைக் கேட்டதும், கிட்டுவின் தாயார் சுந்தரியம்மாளும், அவன் அக்காள் சுலோசனாவும், ஏன், தூளியில் தூங்கிக் கொண்

டிருந்த குழந்தை பாலுவும் கூட எல்லாரும் கூடத்துப் பக்கம் தலையை நீட்டினார்கள். இந்த சந்தோஷ சமாசாரத்தைத் தாங்கள் மாத்திரம் அனுபவிப்பது பிசகு, அப்பாவுக்கும் அதில் ஒரு பங்கு கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்து, கிட்டு தடவைக்கு மூன்று படிகளாக மாடிப் படிகளில் ஏறி, அப்பாவிடம் சென்றான். "அப்பா! வந்துட்டானப்பா! வந்துட்டானப்பா!" என்றான்.

அப்பா, அப்பொழுது தான் சாவதானமாகப் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தவர், இதைக் கேட்டதும், பத்திரிகையைத் தம் எதிரே யிருந்த மேஜைமேல் வைத்து விட்டு, மூக்குக் கண்ணாடியைக் கழற்றி, அதைத் தம் மேல் துண்டு நுனியால் துடைத்துக்கொண்டு, முகத்தைச் சுளுக்கிக் கொண்டு, "என்னடா! படிக்கிறபோது தொந்தரவு படுத்தாதே என்று எத்தனை தடவை சொல்லுகிறது? யாருடா வந்திருக்கா?" என்றார் சற்றுக் கோபத்துடன்.

"அவன்தான், வண்ணான். அவன்தானப்பா வந்திருக்கான்" என்றான் கிட்டு.

இதைக் கேட்டதும் அப்பா சந்தோஷப்படுவார் என்று நினைத்தான் கிட்டு. ஆனால் அவர் முகத்தில் கோபம்தான் தாண்டவமாடியது. உண்மை யென்னவெனில், வண்ணான் வந்தது, அதுவும் அன்று காலை வந்தது அப்பாவுக்குச் சந்தோஷம் தான். இருந்தாலும் அவன் நாள் கழித்து வந்ததால், அவன் என்றைக்கு வருவான்

என்று தெரியாமல் அப்பா ரொம்பவும் திண்டாடிப் போயிருந்தார். அதனால் தான் அவருக்குக் கோபம்.

ஒரு மாதமாக வண்ணான் வராததனால் அவருக்கு ஆபீஸுக்குப் போட்டுக்கொண்டு போகச் சுத்தமாக ஒரு சட்டை கிடையாது. சட்டையைத் தாமே சோப்புப் போட்டுத் துவைத்துக் கொள்ளலாம் என்று தினம் நினைப்பார். ஆனால் திடீரென்று வண்ணான் வந்து விட்டால், துவைத்த சட்டையை அவனிடம் போடவேண்டும், வேலை மெனக்கட்டுத் துவைத்தது தான் மிச்சமாகும் என்று நினைத்து, அடுத்த நாள் பார்த்துக் கொள்வோம் என்று பேசாமல் இருந்து விடுவார். ஆனால் அன்றைக்கு வண்ணான் வரமாட்டான்.

கடைசியாக வண்ணான் வந்தால் வந்துவிட்டுப் போகிறான், சட்டையை சோப்புப் போட்டுத்தான் துவைத்து விடுவோமே யென்று தீர்மானித்து, சாயந்திரம் ஆபீஸை விட்டு வந்ததும், சுந்தரியம்மாளைக் கூப்பிட்டுத் தம் சட்டையைத் துவைத்து வைக்கும்படி சொன்னார். அம்மாளும் தன் கைக் காரியம் எல்லாம் ஒழிந்த பிறகு ராத்திரி பத்து-மணிக்கு மேலே அழுக்குப்போனதும் போகாததுமாகத் துவைத்து உலர்த்தினாள். ஆனால் ராத்திரி, திடீரென்று கோடை மழை பிடித்துக் கொள்ளவே, சட்டை காலையில் கூட உலரவில்லை. " இன்று ஆபீஸுக்கு எப்படியடா

போவது, சட்டைக்கோசரம் லீவ் சொல்லி யனுப்பி விடுவதா?" என்று யோசனை பண்ணிக் கொண்டிருந்தார் கையில் பத்திரிகையுடன். அப் பொழுது தான்வந்து சேர்ந்தான் நம் வண்ணுன்!

மாடிப் படியை விட்டுக் கீழே இறங்கிக் கூடத்திற்கு வந்தார். வண்ணுனைப் பார்த்து, "என்னடா நீ நினைச்சப்போ வருகிறது, நினைச் சப்போ வரதில்லை யென்றிருக்கிருயா?" என்று உறுமினுர்.

"இல்லீங்க சாமி! ஊரிலே கிளவியொன்னு செத்துப் போயிடுத்துங்க. அதற்குப் போயிருந்தே னுங்க" என்ருன் வண்ணுன்.

"என்னடா இது, வேடிக்கையா யிருக் கிறது! போன மாதம் தான் ஒரு கிழவி செத்துப் போனுளென்று சொன்னே. இந்த மாதம் ஒரு கிழவியா! அப்படி உன் வீட்டில் எத்தனை கிழவி யடா இருக்கிருள்!"

"இப்ப போன கிளவி வூட்டிலே இல்லீங்க. ஊரிலே இருந்தாங்க. இது என் ஆயியுங்க; முன்னே போனது என் மாமியாருங்க. அவ தான் வூட்டோடே இருந்தாளுங்க."

"சரி, சரி, தொலை. உன் வீட்டுத் தொல் லையை யெல்லாம் கேட்க எனக்கு 'டய'மில்லை. இப்படி நீ ஆபீஸுக்குப் போகிற டயமாய்ப் பார்த்து வந்தால், நான் எப்படியடா கணக்குப் பார்க்கிறது? எப்படி அழுக்கைக் கணக்குப் பார்த்துக் கொடுக்கிறது?........ஆமா, போன

தடவை பாக்கி நாலு துணி உண்டே, அதைக் கொண்டு வந்திருக்கிறாயா?"

"அது எங்கேயோ தவறிப் போயிட்டது போலிருக்குங்க. நாளைத் தேடியாந்து கொண்டாந்துரேனுங்க."

இதற்குள் சமையல் அறையில் குழம்பைக் கலக்கிக் கொண்டிருந்த சுந்தரியம்மாள் கரண்டியும் கையுமாக வெளியே வந்தாள். தலைவாரிப் பின்னிக் கொண்டிருந்த சுலோசனாவும், பாதிப் பின்னலோடு அம்மாளைப் பின் தொடர்ந்து வந்தாள்.

சுந்தரியம்மாள், "என்னடா இப்பொழுது வந்தால் எப்படியடா அழுக்குப் போடுகிறது! லீவு நாளாய் ஞாயிற்றுகிழமை யன்று வரக் கூடாதோ?" என்றாள்.

"என்னம்மா, இன்றைக்குச் செவ்வாய்க் கிழமைக்கு வந்ததுக்கே ஐயர் இப்படிக் கோபித்துக் கொள்ளுகிறாரே. நான் அடுத்த ஞாயிற்றுக் கிழமைக்கு வந்தால் அவர் என்னைச் சும்மா விட்டு விடுவாரா?" என்றான் வண்ணான்.

"என்னடா, ஞாயிற்றுக் கிழமை என்றால் அடுத்த ஞாயிற்றுக் கிழமை தானா? ஏன், முந்தாநேற்றே வரக்கூடாதோ?" என்று அய்யர் குறும்புச் சிரிப்புடன் கேட்டுவிட்டு, "சரி, இந்த வெள்ளையைக் கணக்குப் பார்க்கணும். பிறகு அழுக்குத் துணியை எடுத்துப் போடணும்.

அதற்கெல்லாம் இப்போ 'டயம் இல்லை. நீ எப்பொழுது வருகிறாய்?" என்று கேட்டார்.

"நான் நாளைக் காலை கட்டாயம் வந்திர்றே னுங்க... இன்னிக்கு ஒரு கலியாணத்துக்குப் போகனுங்க. பணம் இருந்தால் ஒரு இரண்டு..." என்று இழுத்தான்.

"அதெல்லாம் ஒரு தம்பிடி கூடக் கேட் காதே. நாளைக் காலை வா, பார்ப்போம்" என்றார்.

ஆனால் வண்ணான் அவரை அத்தனை லகு வில் விடுபவன்? அவரிடம் எப்படியோ நயமாகப் பேசி, ஒரு ரூபாய் பெற்றுக்கொண்ட பிறகு தான் நடையைக் கட்டினான்.

சாப்பிட்டு முடிந்ததும், தம் சட்டையை எடுத்துப் போட்டுக்கொள்வதற்காக, அவசரம் அவசரமாக மூட்டையைப் பிரித்தார் வேங்கட ராமய்யர். என்ன ஆச்சரியம்! அவர் சட் டையை அங்கே காணோம். காரணம் அது அவர் மூட்டையல்ல. வண்ணான் தவறுதலாக வேறு யாரோருவர் மூட்டையையோ அங்கு வைத்து விட்டுப் போய்விட்டான்.

"டேய், கிட்டு! வாசலிலே ஓடிப் போய்ப் பார், வண்ணான் இருக்கானுவென்று!" என்றார்.

வண்ணான் வாசலில் எங்கு இருக்கப் போகி றான்? வேறு வழி யில்லாமல் அந்த மூட்டையில் இருந்த ஒரு சட்டைடையே எடுத்துப் போட்டுக் கொள்ளத் தீர்மானித்தார்.

ஆனால் இவரோ வஞ்சகமில்லாமல் மத மத வென்று வளர்ந்திருந்தார். சட்டையோ மிகச் சின்னதாயிருந்தது. வேறு வழியில்லை யென்று தீர்மானித்து முண்டி யடித்து, கஸரத்து செய் வதுபோல் தம் கை, கால்களை வைத்துக்கொண்டு அந்த சட்டைக்குள் தம்முடைய ஸ்தூல உடம் பைப் புகுத்தினார். சட்டைக்கும், அவருடைய உடம்புக்கும் ஏற்பட்ட இந்த குஸ்தியில், சட்டை தோற்றுப் போய் முதுகில் கிழிந்துவிட்டது. அதைப் பொருட்படுத்தாமல் அதையே போட்டுக் கொண்டு ஆபீஸுக்கு ஓடினார். இவர் போன கொஞ்ச நாழிக்கெல்லாம் இவருடைய சகபாடி கிருஷ்ணசாமிப் பிள்ளையும் வந்து சேர்ந்தார்.

"என்ன கிருஷ்ணசாமிப்......" என்று ஆரம் பித்தவர் சடக்கென்று தன் பேச்சை நிறுத்தினார். கிருஷ்ணசாமிப் பிள்ளையை முழித்து, முழித்துப் பார்த்தார் வேங்கடராமய்யர். வேங்கடராமய் யரை முழித்து முழித்துப் பார்த்தார் கிருஷ்ண சாமிப் பிள்ளை.

காரணம் அன்று வண்ணான் பண்ணின ஒரு காரியத்தினால், வேங்கடராமய்யரின் சட்டையை கிருஷ்ணசாமிப் பிள்ளையும், கிருஷ்ணசாமிப் பிள்ளையின் சட்டையை வேங்கடராமய்யரும் போட்டுக்கொண்டிருந்தார்கள்!

# கலியாணராமன் கலியாணம்

பெயருக்கு மாத்திரம் கலியாணராமனே யொழியக் கலியாணராமனுக்கு வெகுநாள் கலியாணம் ஆகாமலிருந்தது. இப்படி அவன் கலியாணம் ஆகாமல் நின்றதற்குக் காரணம், அவன் பெற்றோர்களோ, அல்லது அவன் தம்பியோ அல்லது தங்கையோ என்று நினைத்து விடாதீர்கள். இவர்கள் எல்லாரும் சென்ற இரண்டு வருஷங்களாக அவனைக் கலியாணம் பண்ணிக் கொள்ளும்படி வற்புறுத்திக் கொண்டுதான் வந்திருக்கிறார்கள்.

தாயாருக்குத் தனக்குக் காரியங்களை யெல்லாம் செய்து கொடுக்க ஒரு நாட்டுப் பெண் இருந்தால் தேவலை யென்பது. தகப்பனாருக்கோ இவனுக்கு ஒரு கால் கட்டைக் கட்டி விட்டால் தான் அவனுக்குக் குடும்ப பாரம் சற்று உறைக்கும், இன்னும் கலியாணராமனுக்கு வரும் வர தட்சணைப் பணத்தைக் கொண்டு தம் சில்லறைக் கடன்கள் சிலவற்றை ஒழிக்கலாம் என்பது. கலியாணராமன் தங்கைக்கோ அண்ணாவுக்குக் கலியாணமானால் தனக்கு ஏதாவது புடவை, நகை முதலிய சீர் வரிசைகள் கிடைக்குமென்பது.

ஆனால் இவர்கள் எல்லாரையும் விடக் கலியாணராமன் கட்டாயம் கலியாணம் செய்து

கொண்டுதான் ஆக வேண்டுமென்று வெகு மும்முரமாய் இரட்டைக் காலில் நின்றவன் (ஒற்றைக் காலில் நிற்பதைவிட இரட்டைக் காலில் நிற்பது இரண்டு மடங்கு விசேஷத்தைக் காண்பிக்கிற தல்லவா?) கலியாணராமனின் தம்பி கலியாண சுந்தரம் தான். அவன் எத்தனையோ தடவை கலியாணராமனைக் கெஞ்சிக் கேட்டிருக்கிறான், நயந்து கேட்டிருக்கிறான், அதட்டிக்கேட்டிருக்கிறான் கலியாணம் செய்து கொள்ளும்படி. இதற்குக் காரணம் தம்பி கலியாணத்துக்கு அண்ணன் இடையூறாக நின்றது தான். அண்ணனுக்குக் கலியாணம் ஆனபிறகுதான் தம்பிக்குக் கலியாணம் ஆகவேண்டுமென்ற நியதியிருக்கிற தல்லவா?

ஆனால் கலியாணராமன் இப்படிக் கலியாணம் பண்ணிக்கொள்ள மறுத்ததற்கு ஒரு காரணம் இல்லாமலுமில்லை. இந்தப் பழி முக்கால்வாசி அவன் தாயாரைச் சேரவேண்டும். பாக்கிக் கால்வாசிப் பழி பக்கத்து வீட்டு பங்கஜம் அம்மாளைச் சேரவேண்டும்.

கலியாணராமனின் தாயார் பர்வதத்தம்மாள் முன் ஜன்மத்தில் ஒரு கிராமபோன் பெட்டியாயிருந்தாளோ என்ற சந்தேகம் உண்டு. அந்த மாதிரி அவள் கிராமபோன் பெட்டியாயிருந்திருந்தால், அவள் புருஷன் கைலாசமய்யர் —அதுதான் கலியாணராமனின் தகப்பனார்— அந்த கிராமபோனை ஓடச் செய்யும் கிராமபோன்

ஊசியா யிருந்திருக்க வேண்டும். பார்வதத்தம்மாளுக்குத் தன் புருஷனை அதிகாரம் பண்ணுவதில் ஓர் அலாதி ஆசை. அதற்கேற்றுப் போல் கைலாசமய்யரும் ஏதாவது நமிண்டு விஷமம் செய்துகொண்டிருப்பார். தன் மனைவி பத்ரகாளியைப் போல் சீற ஆரம்பித்து விடுவாள் என்று தெரிந்திருந்தும், ஏதாவது கோணா மாணாவென்று காரியங்களைச் செய்து அவளைக் கிண்டிவிட்டு விடுவார்.

பார்வதத்தம்மாள் ஒரு சின்ன விஷயத்தை வைத்துக் கொண்டு எவ்வளவு நாழி வேண்டுமானாலும் பேசுவாள். இத்தனைக்கும் கலியாணராமன் காலேஜில் எத்தனையோ பேச்சுப் போட்டிகளில் மெடல்கள் வாங்கி யிருக்கிறான் என்று தான் பெயர். ஆனால் தன் தாயாரிடம் இந்த விஷயத்தில் அவன் எதிரே நிற்கக்கூட முடியாது.

ரயில் ஒரு பெரிய பாலத்தின் மீது போகும் போது "கட கடா, குடு குடு, கட கடா குடு குடு" என்ற சப்தம்உண்டாகுமே,கேட்டிருக்கிறீர்களா? அந்த மாதிரியான சப்தத்தைத் தன் வீட்டில் தன் தாயாரிடமிருந்தும், பக்கத்து வீட்டுப் பங்கஜத்தம்மாளிட மிருந்தும் கேட்டுக் கேட்டுத்தான் கலியாணராமனுக்கு ஸ்திரீ வர்க்கத்தின் மீதே ஒரு வகையான வெறுப்பு ஏற்பட்டு விட்டது. "சீ! ஸ்திரீகள் எல்லாருமே பெரிய வாயாடிகள்! இந்த ஸ்திரீகள் முகத்தில்கூட நாம் முழிக்கக்

கூடாது" என்று தீர்மானித்தான். அதனுல் தான் அவன் தனக்குக் கலியாணமே வேண்டாமென்று சொன்னது.

ஒரு நாள் கலியாணராமனை அவன் தாயார், தம்பி முதலியோர் சூழ்ந்துகொண்டு அவன் கலியாணம் பண்ணிக் கொண்டால்தானுச்சு என்று வற்புறுத்தினர்.

"என்னுல் முடியாது. இந்த ஸ்திரீகளின் வாயைக் கண்டாலே எனக்குப் பயமாயிருக்கிறது" என்ருன் கலியாணராமன்.

"ஏண்டாப்பா! பொம்மனுட்டிகளுக்குத் தான் வாய், புருஷாளுக்கெல்லாம் வாய் இல்லையோ?" என்ருள் அவன் தங்கை.

"ஆமாம்" என்ருன் கலியாணராமன்.

"நாளைக்கு உனக்கு ஒருத்தி வரப்போகிருளே, அவள் மாத்திரம் வாய் இல்லாமல் ஊமையாய் இருக்கப் போகிருளாக்கும்?"

"ஆமாம். நான் அப்படிக் கலியாணம் பண்ணிக் கொள்வதா யிருந்தால் ஒரு ஊமைப் பெண்ணைப் பார்த்துத் தான் கலியாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன்."

இந்த வார்த்தை அறையில் இருந்த எல்லாரையும் தூக்கி வாரிப் போட்டது—கலியாணராமனைத் தவிர. ஒரு நிமிஷம் அந்த அறையில் நிசப்தம் நிலவியது. தாயாருக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அப்பொழுது கலியாண

சுந்தரம் " ஏன் அம்மா! அவன் இஷ்டப்படிதான் விட்டுவிடேன் " என்றான்.

" சரிடாப்பா. அப்படியே உன் இஷ்டப் படியே ஒரு ஊமைப் பெண்ணைப் பார்த்துக் கலி யாணம் பண்ணுகிறேன் " என்றாள் தாயார்.

கலியாணராமன் பண்ணின அதிர்ஷ்டத் தாலோ—இல்லை, கலியாணசுந்தரம் பண்ணின அதிர்ஷ்டம்தான் என்று கொள்ள வேண்டும்—கலியாணராமனுக்கு வெகு சீக்கிரமே ஒரு ஊமைப் பெண் கலியாணம் நிச்சயமாயிற்று. பெண்ணைப் பார்த்தபோது இவ்வளவு அழகான பெண் இப்படி ஊமையாயும் செவிடாயும் போக வேண்டுமா என்று தோன்றிற்று. சீக்கிரம் ஊமைப் பெண்ணுக்கும், கலியாண ராமனுக்கும் இனிதே கலியாணம் நடந்தேறிற்று.

கலியாணம் ஆன இரண்டு மூன்று மாதங் களுக்குக் கலியாணராமனின் வாழ்க்கை வெகு சுகமாகப் போய்க்கொண்டிருந்தது. வீட்டில் அவன் தாயாரின் இரைச்சலைத் தவிர இவன் மனைவி ஜானகியிடமிருந்து ஒரு சப்தமும் கேட் காது. அவள் மாட்டில் தன் காரியங்களைச் செய்து கொண்டிருப்பாள். கலியாணராமனும் ஜானகியும் முதலில் சைகை காண்பித்துப் பேசிக் கொண்டார்கள். பிறகு கடிதம் மூலமாகப் பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். இதற் கென்றே கலியாணராமன் காகிதத்தைச் சின் னது சின்னதாகக் கிழித்து பைண்டு பண்ணி

வைத்திருந்தான். இந்த மாதிரி ஒரு நோட்டும் பென்சிலும் கலியாணராமன் கையிலும், ஜானகி கையிலும் எப்பொழுதும் தயாராக இருக்கும்.

சில சமயங்களில் கலியாணராமனும் ஜானகியும் ஒரு மேஜையண்டை எதிரும் புதிருமாக உட்கார்ந்து கொண்டு இந்த மாதிரி சீட்டு மாற்றிக் கொண்டிருப்பார்கள். தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு ஏதோ கடிதம் எழுதிக் கொண்டிருப்பது போல் தோன்றும். ஆனால் அந்தச் சீட்டுகளை வாசித்துப் பார்த்தாலோ, அல்லது சதி பதிகளின் மனதில் புகுந்து பார்த்தாலோ தான், அங்கு நடந்து கொண்டிருக்கும் காதல் நாடகத்தின் அருமை தெரியும். ஒவ்வொரு சமயம் காளிதாஸன், ஷேக்ஸ்பியர் போன்ற மகா கவிகளின் காதல் நாடகங்களெல்லாம் இவர்கள் நடத்திக் கொண்டிருக்கும் காதல் நாடகத்தின் முன் எம் மாத்திரம் என்று தோன்றும்.

கலியாணராமனும், ஜானகியும் தாங்கள் இருவரும் பேசிக்கொள்வதற்காக எழுதிக்கொண்ட சீட்டுகளை யெல்லாம் அவ்வப்பொழுது கிழித்து எறிந்து விட்டார்கள். அவற்றைப் பின்னர் ஒன்று சேர்த்து ஜாக்கிரதையாக ஒட்டிப் பத்திரப் படுத்தவும் ஆசாமி இல்லாமல் போய்விட்டது. ஆகவே உலக மகா காதல் காவியங்களில் ஒன்று ஜனங்களுக்குக் கிடைக்காமலேயே போய் விட்டது என்று எனக்குத் தோன்றுகிறது.

கலியாணராமனுடைய சுகமான வாழ்க்கை ரொம்ப நாள் நீடித்து நிற்கவில்லை. ஒரு நாள்

அவன் வெளியே சுற்றி விட்டுச் சாயந்திரம் திரும்பியபோது வெகு சந்தோஷமான செய்தி கொண்டு வந்தான். அவனுக்கு ஒரு கம்பெனி யில் ரூ. 60-க்கு வேலை யொன்று கிடைத்து விட்டது. அந்த சந்தோஷ சமாசாரத்தை ஜானகி யிடம் சொல்ல வேண்டுமென்று துடியாய்த் துடித்துக் கொண்டு வந்தான். அதற்கேற்றுப் போல் வீட்டிலும் ஜானகி மாத்திரம் தனியாய் இருந்தாள். பாக்கி எல்லாரும் எங்கேயோ வெளியே போய் இருந்தார்கள்.

"ஜானகி! ஜானகி! இங்கே வா, இங்கே வா!" என்று கத்திக்கொண்டே உள்ளே நுழைந்தான், கலியாணராமன். ஆனால் ஜானகிக்கு அவன் சொன்னது எங்கே கேட்கப் போகிறது? அவள் பாட்டில் பின் கட்டுத் தாழ்வாரத்தில் பின்னல் வேலை செய்து கொண்டிருந்தாள்.

ஜானகியைத் தேடிக்கொண்டு கலியாண ராமன் தாழ்வாரத்துக்குப் போனபோது, ஜானகி தன் தையல் வேலையைக் கீழே போட்டுவிட்டு எழுந்தாள். அவன் தன்னிடம் ஏதோ சொல்லப் பரபரப்பா யிருப்பதைக் கண்டு, சீட்டு எழுதும் நோட்டை எடுப்பதற்காக உள்ளே ஓடினாள். ஆனால் அதற்குள் கலியாணராமன், "ஜானகி, ஜானகி" என்று ஆயிரம் குரல் கூப்பிட்டுக் கொண்டு அவளைப் பின் தொடர்ந்தான். கடைசி யாக ஜானகி நோட்டைத் தேடி எடுத்துக் கொண்டு நோட்டும் கையுமாக வந்தபோது கலி

யாணராமனுக்கு ஏற்பட்ட ஏமாற்றம் கொஞ்ச நஞ்சமல்ல.

அவன் எவ்வளவு ஆசையாகத் தனக்கு வேலை கிடைத்ததைப் பற்றித் தன் மனைவியிடம் சொல்லிக் கொஞ்சிக் குலாவ வேண்டுமென்று வந்தான்! ஆனால் அவளுக்குப் பேசத் தெரியாததாலால் அவன் ஆசையெல்லாம் நிராசையாய்ப் போயிற்று. என்ன தான் இருந்தாலும் வாயினால் சொல்லக் கூடிய விஷயங்களை எல்லாம் எழுத்தில் எழுதிக் காண்பிக்க முடியுமா?

இதுவரையில் மனைவி ஊமையாயிருப்பதனால் என்னென்ன அனுகூலங்கள் உண்டு என்று சிந்தித்துக் கொண்டிருந்த கலியாணராமனுக்கு ஜானகி வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேச மாட்டாளா என்று ஆகிவிட்டது. தன் தாயார் எத்தனையோ இரைச்சல் போட்டும், அதையெல்லாம் சகித்துக்கொண்டு, சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்த தன் தகப்பனாரின் மனோ தத்துவம் அவனுக்கு அப்பொழுதுதான் புரிந்தது.

ஜானகி நோட்டுப் புஸ்தகத்தைக் கொடுத்ததும், "ஜானகி, உன் பவள வாய் திறந்து ஒரு வார்த்தை பேசமாட்டாயா?" என்று எழுதினான்.

"ஐயோ! நான் என்ன பண்ணுவேன்? பகவான் என்னை இப்படிச் சிருஷ்டித்து விட்டானே" என்று எழுதினாள் ஜானகி.

" நல்லதோர் வீணை செய்தே—அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ ?"

என்ருன் கலியாண ராமன்.

கலியாணராமனுக்கு வேலையாகி ஒரு வார மிருக்கும். அவன் மிகவும் உற்சாகம் குறைந்தே காணப்பட்டான். காரணம், ஜானகி ஊமையா யிருந்ததே.

ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை காலை எல்லாரும் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது பார்வதத்தம்மாளுக்கு அவள் சம்மந்திமார்கள் செய்த சீர் வரிசைகளைப் பற்றிப் பேச்சு திரும்பியது. "என்ன இருந்தாலும் பெரிய சம்மந்திக்குத் துளிக்கூடச் சவரணை போதாது. சின்ன சம்மந்தி அடிக்கொரு தடவை வந்து போய்க் கொண்டிருக்கிருளே. பெரிய சம்மந்தி ஒரு நடை 'நீ நன்ருயிருக்கிருயா' என்று கேட்பதற்கு வருகிருளா ? கலியாணத்தின்போது ஒரு நொள்ளை இரண்டாயிரம் ரூபாய் கொடுத்தாள். அவ்வளவு தான். ஆடி அதிலேதான், ஆறு மாசம் அதிலேதான், தீபாவளியும் அதிலேதான்..."

" என்னம்மா நீங்க சொல்வது வேடிக்கையா யிருக்கிறதே ! மூவாயிரம் ரூபாய் உங்களுக்கு எங்கம்மா கொடுக்கல்லையா ?" என்று யாழும் வீணையும் கலந்ததுபோல் ஒரு மதுரமான தொனி கேட்டது. அவ்வளவு மதுரமான தொனியைக் கலியாண ராமன் இதுவரையில் கேட்டதில்லை.

இந்த இனிய தொனிக்கு உரியவர் யார் என்று தலை நிமிர்ந்து பார்த்தான். தொனி ஜானகியின் வாயிலிருந்து தான் வந்தது என்று அறிந்தான். கலியாணராமனுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. "ஜானகி! என் ஜானகி!" என்று கத்திக் கொண்டே சாப்பிடுவதைவிட்டும் எழுந்து ஜானகியண்டை ஓடி அவள் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

"அடே அசடே! அவளைப் போய் விழுப்புப் பண்ணி விட்டாயே!' என்றாள் பார்வதத்தம்மாள்.

"என்னம்மா! என்னை இப்படி ஏமாற்றி விட்டாயே! இருந்தாலும் நீ என்னை இப்படி ஏமாற்றினதில் எனக்கு மிகுந்த சந்தோஷம்தான்" என்றான் கலியாணராமன்.

"எனக்குத் தெரியாதாடா, கலியாணராமா! நீதான் அசடு, ஊமைப் பெண்ணைத்தான் கலியாணம் பண்ணிக் கொள்வேனென்றால், நான் கூட அசடா, உனக்கு ஊமைப் பெண்ணைப் பார்த்துக் கலியாணம் பண்ணுவதற்கு? நான் வரன் பார்க்கப் போனபோது அவள் படுத்த படுக்கையா யிருந்தாள். நான் உன் விஷயத்தை அவள் அப்பா அம்மாவிடம் சொல்லி, 'வியாதியினால் நாக்கு உள்ளே இழுத்துக்கொண்டு பேச முடியவில்லை. காதும் செவிடாய்ப் போச்சு' என்று எல்லாருக்கும் சொல்லச் சொன்னேன். அப்படியே சொன்னார்கள். இந்த ரகசியம் எனக்கும், ஜானகிக்கும், அவாளுக்கும் தான்

தெரியும். உன்னிடம் இன்னும் கொஞ்ச நாள் கழித்துச் சொல்லலாம் என்றிருந்தேன் ! ஆனால் நான் அவள் பிறந்தகத்தைப் பற்றிக் குற்றம் சொன்னதில் அவளுக்கு ரோஸம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது. தன்னை யறியாமலேயே பேசிவிட்டாள்" என்றாள்.

"ஜானகி ! நல்லவேலை செய்தாயே !"

"என்னத்தைச் செய்து விட்டேன். நான் தெய்வமே என்று இருந்தவளை உங்கள் அம்மா..." வந்து என்று ஆரம்பித்து விட்டாள்.

இப்பொழுதெல்லாம் பேசுவதில் ஜானகி தன் மாமியாரையும் தோற்கடித்து விடுவாள் போலிருக்கிறது. கலியாணராமனும் தன் தகப்பனாரைவிடப் பத்துமடங்கு சாந்த மூர்த்தியாக விளங்குகிறான்.



# இப்படியா சமாசாரம்

"ஓய்! இந்தப் பொம்மனாட்டிகளே இப்படித்தான். துளியாவது புருஷனுச்சே, அவனுக்குத் துளி மரியாதை கொடுக்க வேண்டும், அவன் சொன்னபடி கேட்கவேண்டும் என்று கிடையாது. நாம் எட்டியென்றால் அவள் போட்டியென்கிறது. நாம் 'தாம்' என்றால் அவள் 'தூம்' என்கிறது. ஏதோ யாரும் இல்லாத சமயத்தில் தான் அப்படி யிருக்கிறாள் என்றாலும் பரவாயில்லையென்று விட்டுவிடலாம். ஆனால் நாலு பேருக்கு நடுவிலே யல்லவா என் மானத்தை வாங்கி விடுகிறாள்!" என்று அடுத்த வீட்டு அண்ணாசாமி அய்யர் என்னிடம் 'ஓ' வென்று கதறி அழுதார்.

"ஓய்! அழுது என்னாங் காணும் பண்ணுகிறது? எல்லாம் உம்மிடம் அல்லவாங்காணும் விசை இருக்கிறது? நீர் இருக்கிற கெட்டிக்காரத்தனத்தில் இருக்கிறது, உம்முடைய மனைவி உம்மிடம் பயந்து கொண்டிருக்கிறது. நீர் 'கண்ணே, மூக்கே' என்று அவள் பின்னாடேயே சுற்றிக் கொண்டிருந்தால் அவள் உம்மை இதுவும் பண்ணுவாள், இன்னும் எதுவும் பண்ணுவாள். என்னைப் பாருங்கள். எனக்குந்தான் ஒரு மனைவி இருக்கிறாள். என்னிடம் ஒரு மூச்சு விடுவாளா, பாரும்! நான் சொன்னால் சொன்னதுதான்,

என்னைக் கண்டால் சிம்ம சொப்பனமாக்கும்!" என்றேன்.

"எல்லாம்அப்படித்தான்சொல்லிக் கொள்ளுகிறது. பொம்மனாட்டியாவது, புருஷனைக் கண்டு பயப்படுவதாவது, ஓய்! அதெல்லாம் பழைய காலம், ஐயா! என்னமோ ஆற்ற மாட்டாமல் என் குறைகளைச் சொல்லி உம்மிடம் அழலாமென்று வந்தால் நீர் என்னமோ பிரமாதப் படுத்துகிறீரே ?"

அந்த அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்யர் இப்படிப் பேசினது எனக்கு மிகவும் கோபத்தை உண்டு பண்ணிவிட்டது. குதிரை கீழே தள்ளி விட்டது மல்லாமல் குழியையும் பறித்தது என்று சொல்லுவார்களே, அதைப் போலல்லவா இருக்கிறது சமாசாரம்? என்னமோ மனுஷன் பெண்டாட்டியிடம் அகப்பட்டுக்கொண்டு இப்படி விழிக்கிருனே, அவனுக்கு ஏதாவது யோசனை சொல்லுவோமென்ருல் இப்படியா என்னுடைய வார்த்தையிலேயே சந்தேகப்படுவது?

"ஓய்! அண்ணுசாமி அய்யர்! நீர் என்னோடேயே என் வீட்டுக்கு வாரும். நான் என்னுடைய வார்த்தையை நிரூபிக்கா விட்டால் என்னுடைய பெயர் வெங்கட்ராமய்யர் இல்லைங்காணும்! என்ன சொல்லுகிறேள், இதற்கு?" என்றேன்.

"என்ன சொல்வது? சரி" என்ருர்.

உடனே அண்ணுசாமி அய்யரை என் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போனேன்.

"ஓய்! நீர் இந்த அறையிலேயே இரும். நான் என் மனைவியை உமக்குக் காது கேட்கும்படி அதிகாரம் பண்ணுகிறேன். அவள் எப்படிப் பயந்துகொண்டு பதில் சொல்லுகிருள், பாரும்" என்றேன்.

அண்ணுசாமி அய்யரை அங்கேயே விட்டு விட்டுக் கூடத்துக்குப் போனேன்.

"அடியே! இன்றைக்கு என்ன சமையல்?" என்று சற்று அதிகாரமாகவே வினவினேன்.

"ஏன், பாகற்காய்தான் இருக்கிறது. அதைத் தான் கறி பண்ணப் போகிறேன். உங்களுக்குத் தான் கொத்தவரங்காய் என்ருல் வேம்பாச்சே."

"என்ன, பாகற்காயா! சீ! அதெல்லாம் துளிக்கூட உதவாது. கொத்தவரங்காய்க் கறி தான் பண்ணணும். தெரிந்ததா! சரி, குழம்பு என்ன பண்ணப் போகிருய்?"

"மோர்க்குழம்பு வைக்கலாம் என்று உத்தேசம்."

"மோர்க் குழம்பா? கூடவே கூடாது. வெங்காய சாம்பார்தான் வைக்க வேண்டும். தெரிந்ததா?"

"சரி; இன்னிக்கி ஞாயிற்றுக் கிழமையாயிருக்கிறதே! சாயந்திரம் என் சிநேகிதிகள் எல்

லாரும் சினிமாவுக்குப் போகப்போகிருர்களாம். நானும்—"

"சீ, சீ! சினிமாவாவது, கினிமாவாவது? இன்று சாயந்திரம் என்னுடன் பரத நாட்டியக் கச்சேரிக்குத்தான் வரணும். தெரியுமா? உன்னிஷ்டத்துக்கு ஒன்றையும் விட முடியாது. ஜாக்கிரதை!"

இவ்வளவு அதிகாரத்தையும் பண்ணிவிட்டு, நான் என் அறைக்குப் போய், அண்ணுசாமி அய்யரைப் பார்த்தேன். "எப்படி?" என்றேன்.

"என்ன வெங்கட்ராமய்யர்! நீர் அதிர்ஷ்டசாலி, அய்யா! அகமுடையாள் என்ருல் உமக்கு வாய்த்திருக்கிருளே, அது மாதிரி யல்லவா வாய்க்க வேண்டும்? எனக்கும் வாய்த்திருக்கிறதே, ஒரு பிசாசு, ஒரு நாளாவது நான் சொன்னபடி கேட்டது என்று உண்டா? ஒரு நாளைக்கு எனக்கு வாய்க்கு வேண்டியதைப் பண்ணிக் கொடுத்தது என்று உண்டா? ஒரு நல்ல காயா, கறியா சாப்பிடாமல் என் நாக்கு மரத்துப் போய் விட்டதுங்காணும். உம்முடைய வீட்டில் தான் இன்றைக்குக் கொத்தவரங்காய்க் கறியும், வெங்காய சாம்பாரும் என்று உத்தரவிட்டிருக்கிறீர்களே! கொத்தவரங்காய்க் கறியென்ருல் எனக்கு உயிருங்காணும். நான் இன்றைக்கு உம்முடைய வீட்டிலேயே சாப்பிடுகிறேன்" என்ருர்.

"ரொம்ப சரி. நீரும் என்னமோ பெண் டாட்டியைப் படைத்துக் குடித்தனம் பண்ணு கிறேன் என்று சொல்லுகிறீரே! என் மனைவி யும் எனக்குப் பயந்து கொண்டு நடந்து வரு வதைப் பாரும்" என்றேன்.

அடுத்த நாள் நானும் அண்ணுசாமி அய்ய ரும் அவர் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அப்பொழுது உள்ளே யிருந்து என் மனைவி சரசுவின் பேச்சுக் குரல் கேட்டது. அவள் அண்ணுசாமி அய்யரின் மனைவி பங்கஜத்துடன் சற்று இறைந்தே பேசிக்கொண் டிருந்தாள். நாங்கள் திண்ணையிலிருந்தது அவர் களுக்குத் தெரியாது. இரண்டொரு வார்த்தை காதில் விழுந்ததும் நாங்கள் திகைத்துப் போனோம். எங்கள் பேச்சும் நின்றது.

பங்கஜம் :—என்ன அம்மாமி! எங்காத்துக் காரர் இருக்கிறாரே, அவர் பண்ணுகிற ஹிம்சை சொல்லிச் சகிக்கல்லே. இல்லாத்தையும் பொல் லாத்தையும் கொண்டா என்றால், நான் என்ன மாமி பண்ணட்டும்? ஆம்படையான் என்றால் அதிகாரம் பண்ணு என்று எந்த சாஸ்திரத்தில் எழுதியிருக்கிறதோ?

சரசு :—அடி அசடே! ஆம்படையான் என்றால் அதிகாரம் பண்ணத்தான் பண்ணுவார். இருந்தாலும் எல்லாம் நாம் கொண்டு போகிற தினுசில் இருக்கிறது. இதோ, எங்காத்துக்காரர்

இருக்கிறரே, அவர் இப்படித் தான், டாம், டோம் என்று என்னை அதிகாரம் பண்ணுகிறர். நான் ஒன்று சொன்னல் அவர் பத்துச் சொல் கிறர். நான் எது சொன்னலும் அதற்கு நேர் எதிரிடை யொன்று சொல்வதுதான் கெட்டிக் காரத்தனம் என்று வைத்துக்கொண்டிருக்கிறர்.

ஆனல் எனக்கா அவரை ஆளத் தெரியாது? எனக்கு எந்தக் காரியம் ஆகவேண்டும் என்று இருக்கோ, அதற்கு நேர் எதிரிடை யொன்று சொல்வேன். அவர் நான் சொல்வதற்கு நேர் எதிரிடையாகச் சொல்வார். கடைசியில் என் பக் கம்தான்ஜயமாயிருக்கும். இன்னிக்கிப் பாரு. வீட் டில் கொத்தவரங்காய்தான் இருந்தது. நான், "அது தான் இருக்கு. அதைப் பண்ணட்டுமா!" என் றல், உடனே வேண்டாம் என்று சொல்லி விடு வார். அதற்காகப் "பாகற்காய்க் கறி பண்ணட் டுமா, உங்களுக்குத் தான் கொத்தவரங்காய் என் றல் வேம்பாச்சே" என்றேன். அவ்வளவுதான். உடனே கொத்தவரங்காயைப் பண்ணடி தகி டிகே என்றர். அதேமாதிரி தான் இன்னிக்கி நீ நாட்டியத்துக்குப் போகணும்னு சொன்னயா, நான் அதற்காகச் சினிமாவுக்குப் போகணும் என் றேன். அவர் அது தான் சாக்கு என்று நடனத் திற்குப் போகத்தான் வேண்டும் என்றர்.........

பங்கஜம் :—ஐயோ! கத்திப் பேசுகிறேளே! அவா இரண்டு பேரும் திண்ணையிலே இருக்காப் பலே இருக்கே!

(கொல்லென்ற சிரிப்பு.)

**சரசு** :—என்னமோடி யம்மா! பொம்மனாட்டி யென்று பிறந்தால் ஆம்படையானைக் கட்டி மேய்க்க தெரிய வேண்டாமா? இதுகூடத் தெரியாவிட்டால் அவள் என்ன பொம்மனாட்டி?

அண்ணாசாமி அய்யர் என்னைச் சிரிப்பாகப் பார்த்தார். "என்ன ஓய்! உம்முடைய குட்டு வெளிப்பட்டு விட்டதே?" என்று சிரித்துவிட்டு வீட்டிற்குப் போய்விட்டார். ஆனால் ஒரு விதத்தில் என் மனைவி அன்று அவர் மனைவிக்குச் செய்த குட்டிப் பிரசங்கத்தை ஒட்டுக் கேட்டது அவருக்கு நல்லதாய்ப் போயிற்று. இப்பொழுதெல்லாம், அவர் மனதுக் குகந்தபடி அவர் மனைவி இருப்பதாகப் பிரஸ்தாபம். இதனால் அவர் சொன்னபடி யெல்லாம் அவள் மனைவி கேட்டுவிடுகிறாள் என்று நினைத்துக் கொள்ளாதீர்கள்! அதெல்லாம் இல்லை. அவர் தான் தமக்கு எது வேண்டுமோ, அது வேண்டாம் என்று சொல்லும் ஒரு புது தந்திரம் கற்றுக்கொண்டிருக்கிறார்!

# இரண்டு போண்டா, ஸாம்பார்!

என்ன இருந்தாலும் இந்தத் தம்பி அய்யர் ஹோட்டல்காரர்களுக்கு இத்தனை மரியாதைக் குறைவு வேண்டாம், ஸார்! என்னமோ ஆபீசுக்குப் பக்கத்தில் இருக்கிறதே, வீட்டிலும் சரசு சரியானபடி டிபன் பண்ணிக் கொடுப்பது கிடையாதே என்று போனால் ஒரு மனுஷனை இப்படியா அவமானப்படுத்துவது!

நான் முதல் முதல் தம்பி அய்யர் ஹோட்டலுக்குள் நுழைந்ததும், "என்ன ஸார் வேண்டும்?" என்றான் ஒருவன் வந்து. அவனைப் பார்ப்பதற்கே எனக்கு முதலில் பிடிக்கவில்லை. அவனுடைய சுருட்டைக் கிராப்பும், அவனுடைய போலோ ஷர்ட்டும், அவன் காதில் செருகியிருந்த பென்சிலும், அவன் அம்மை வடு முகமும், என்னை யறியாமலே அவன் மேல் எனக்கு வெறுப்பை உண்டாக்கின.

"என்ன ஸார் வேண்டும்!" என்று அவன் கேட்ட கேள்விக்கு, நான் "என்ன இருக்கு?" என்று கேட்டேன். அவ்வளவு தான். கடல் மடை திறந்தாற்போல் அவன் தன் மனப் பாடத்தை ஒப்பிக்க ஆரம்பித்துவிட்டான். "ப்ரூட் ஸாலட் இருக்கு; ஐஸ்கிரீம் இருக்கு; பாதம்கீர் இருக்கு; பம்பாய் ஜிலேபி இருக்கு; கல்கத்தா ரஸகுல்லா இருக்கு........" என்று இந்தமாதிரி அடுக்கிக்கொண்டே போனான்.

"இரண்டு போண்டா—ஸாம்பார்" என்றேன். "ஏன் ஸார்! சூடாக ஒரு வடை சாப்பிடுங்களேன்!" என்றான். "இல்லை போண்டா—ஸாம்பார் தான்" என்றேன். அவ்வளவுதான். அடுத்த நிமிஷமே இரண்டு போண்டாக்களும், ஸாம்பாரும் ஒரு தட்டில் எதிரில் வைக்கப்பட்டன. ஒரு போண்டாவில் ஸ்பூன் ஒன்று செருகியிருந்தது. போண்டா சாப்பிட்டான பிறகு அரை கப் காப்பி சாப்பிட்டு விட்டு ஆபீசுக்குப் புறப்பட்டேன்.

அடுத்த நாளும் முதல் நாள் போல் ஒரு அடுக்கு லிஸ்ட் ஒப்பித்தான். கடைசியில் நான் "போண்டா—ஸாம்பார்" என்றதும், போண்டாவும் ஸாம்பாரும் கொண்டுவந்து வைத்தான்.

மூன்றாம் நாள் தான், ஸார், தகராறு ஏற்பட்டது. அன்று நான் ஹோட்டலுக்குள் நுழைந்ததுதான் தாமதம். அந்த அம்மை வடு ஆசாமி என்னைக் கண்டதும் உள்ளே நுழைந்து விட்டான். என்னிடம் வந்து, "என்ன ஸார் வேண்டும்?" என்று கேட்பதற்கோ, அல்லது என்னென்ன இருக்கு என்று பாடம் ஒப்பிப்பதற்கோ வரவில்லை. உள்ளே போனவன் ஒரு நிமிஷங் கழித்து ஒரு தட்டில் இரண்டு போண்டா, சாம்பாருடன் திரும்பி வந்து, தட்டை என் எதிரே வைத்தான். எனக்கு முதலில் இது சற்றுத் திகைப்பா யிருந்தும், கடைசியில் சந்தோஷமே கொண்டேன். ஏனெனில் அவன் என்னிடம் தன் லிஸ்டை ஒப்பித்தாலும்,

ஒப்பிக்கா விட்டாலும், நான் கேட்கப்போவது இரண்டு போண்டா—ஸாம்பார் தான். தற் காலத்தில் நம் மனைவிமார்கள் நம் குறிப்பறிந்து நடக்காத போது, ஒரு ஹோட்டல்காரன் நம் குறிப்பறிந்து நடப்பதென்றால், அது சந்தோஷப் படக் கூடிய காரியந்தானே ?

இந்த மாதிரியே கொஞ்ச நாள் நடந்து கொண்டு வந்தது. ஆனால் கொஞ்சநாள் கழித் துத்தான் அவன் என்னை அவமானப்படுத்துவதற் காக அப்படிச் செய்கிறான் என்று தெரிந்தது. ஏனென்றால் நான் ஒரு நாள் வழக்கமாக உட்கா ரும் இடத்தை விட்டு ஒரு புது மேஜையண்டை போய் உட்கார்ந்தேன். எனக்கு என்ன வேண் டும் என்று கேட்க வந்த, அந்த மேஜை ஸெர் வரை அந்த அம்மை வடு ஆசாமி தடுத்து, "ஸாருக்கு இரண்டு போண்டா ஸாம்பார் கொடு" என்று உரத்துச் சொன்னான். அவன் போட்ட குரலில் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் எல்லாரும் என்னை ஆச் சரியத்துடன் பார்த்தார்கள். அவ்வளவுதான். அன்று முதல் அந்த ஹோட்டலில் இருந்த எல்லா ஸெர்வர்களும் என்னைப்பற்றித் தெரிந்து கொண்டுவிட்டார்கள். நான் கேட்பதற்கு முன்ன மேயே போண்டா ஸாம்பார் கொண்டு வைக்கத் தொடங்கினர். மனுஷனுக்கு இதை விட வேறு அவமானம் என்ன ஸார் வேண்டும்? அதற்காக அந்த ஹோட்டல் பக்கமே முழிப்பதில்லை யென்று கங்கணம் கட்டிக் கொண்டேன்..

இவ்வளவு தூரம் உங்களுக்கு நான் அந்தத் தம்பி அய்யர் ஹோட்டலைப்பற்றிச் சொல்ல வந்ததற்குக் காரணம் எல்லாம் என் நண்பர் அண்ணு சாமி அய்யர் தான். "வாங்க சார்! தம்பி அய்யர் ஹோட்டலுக்குப் போய் சாப்பிட்டு வரலாம்" என்றார்.

"தம்பி அய்யர் ஹோட்டலுக்கு நான் வரமாட்டேன். வேறு எந்த ஹோட்டலுக்காவது போகலாம்" என்றேன்.

"என்? தம்பி அய்யர் ஹோட்டலுக்குப் போவதைப் பற்றி உமக்கு என்ன ஆக்ஷேபம்?" என்றார்.

அவரிடம் போய் இந்தக் கதையையெல்லாம் சொல்லுவானேன் என்று நினைத்து, "ஒன்றுமில்லை. அந்த ஹோட்டல் காரனுக்கும், எனக்கும் சண்டை. ஏன், நீங்கள் வழக்கமாகப் போகும் பரிமள விலாஸுக்குத் தான் போவோமே" என்றேன்.

அண்ணுசாமி அய்யருக்குப் பரிமள விலாஸுக்குப் போவதில் இஷ்டமில்லைபோல் தோன்றிற்று. கடைசியில் வேறு ஹோட்டலும் பக்கத்தில் இல்லாததால், பரிமள விலாஸுக்குப் போவதற்கு ஒருவாறு சம்மதித்தார்.

நாங்கள் இரண்டு பேரும் பரிமள விலாஸுக்குள் நுழைந்தோம. நாங்கள் உட்கார்ந்தோமோ, இல்லையோ எங்களை ஒன்றும் கேட்காமலேயே ஹோட்டல் சர்வர் ஆளுக்கு ஒரு தட்டில்

இரண்டிரண்டு போண்டா சாம்பார் வைத்து விட்டுச் சென்றான்! அப்பொழுது அண்ணுசாமி அய்யர் முகத்தைப் பார்க்க வேண்டுமே! தம்பி அய்யர் ஹோட்டலில் எனக்கு என்ன "மரியாதை" கிடைத்துக் கொண்டிருந்ததோ அதே "மரியாதை" தான் அண்ணுசாமி அய்யருக்குப் பரிமள விலாஸில் கிடைத்துக் கொண்டிருந்திருக்கிறது! அதோடு அவருடன்கூடச் சென்ற தோஷத்திற்காக எனக்கும் அதே "மரியாதை" கிடைத்து விட்டது!

இந்த ஹோட்டல்காரர்களே மிகவும் மரியாதை யற்றவர்கள், ஸார்!



# குழந்தைகள் பட்டாசு

"டம் டம், டம, டம்" கம்பெனி மானேஜர் மிஸ்டர் புஸ் புஸ் அவர்களுக்கு நடுத்தெரு நாலாம் நம்பர் வீட்டிலிருக்கும் "நாடோடி" எழுதுவது :

ஐயா,

இப்பவும், உங்களைப் போன்ற கடைக்காரர்களை நான் கண்டதே யில்லை. தீபாவளிக்குப் பட்டாசு வாங்கும்போது குழந்தைகளுக்கு என்று ஒருவித பட்டாசு, பெரியவர்களுக்கு என்று ஒருவித பட்டாசு என்று உண்டா? நீங்கள் இந்த வருஷம் "குழந்தைகளுக்கேற்ற பட்டாசு, குழந்தைகள் பயமின்றி சுடலாம். இது வரையில் இது மாதிரி யாரும் செய்யாதது" என்றெல்லாம் தடபுடலாக விளம்பரம் செய்தீர்களே யென்று உங்கள் கம்பெனியில் ரூ. 5-க்குக் "குழந்தைகள் பட்டாசு" வாங்கினேன். நீங்கள் கொடுத்த பட்டாசு துளிக்கூட உபயோக மற்றது என்று தைரியமாகச் சொல்வேன். ஏனெனில் ஒன்று வெடித்தால் இன்னொன்று வெடிப்பதில்லை. இந்த மாதிரியாக எனக்குப் பாதிப் பட்டாசுகள் வீணாகி யிருக்கும். ஆகையால் தயவு செய்து நான் பட்டாசுக்காக உங்களுக்குக் கொடுத்த ரூ. 5-த் திருப்பி யனுப்பும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

"நாடோடி"

"நாடோடி" அவர்களுக்கு மிஸ்டர் புஸ் புஸ் எழுதியது :

*ஐயா,*

*தங்கள் கடிதம் கிடைத்தது. "குழந்தைகள் பட்டாசு" என்ற பெயருடன் சிறுவர்கள் பயமில்லாமல் சுடக்கூடிய பட்டாசு நாங்கள் தயாரித்து வியாபாரம் பண்ணிக் கொண்டிருப்பது உண்மைதான். ஆனால் தாங்கள் சொல்வதைப் பார்த்தால் பட்டாசு எங்கள் கடையில் வாங்கினது அல்ல என்று நிச்சயமாகத் தெரிகிறது. அநேக வியாபாரிகள் எங்கள் சரக்குகள் என்று சொல்லி போலிச் சரக்குகள் செய்து வியாபாரம் செய்வதால் அவர்கள் யாரையாவது விசாரியுங்கள்.*

*இப்படிக்கு,*

புஸ் புஸ்

மிஸ்டர் புஸ் புஸ் அவர்களுக்கு "நாடோடி" எழுதுவது :

*ஐயா,*

*தாங்கள் சொல்லுவது மிகவும் வேடிக்கையாயிருக்கிறது. பட்டாசைத் தங்கள் கடையில் தான் வாங்கினேன். நானாக இருக்கக் கொண்டு, போனால் போகிறதென்று வாங்கின கிரயத்தை மாத்திரம் திருப்பிக் கொடுக்கும்படி உங்களை கேட்டுக் கொண்டிருக்கிறேன். இன்னொருத்தராயிருந்தால் கட்டாயம் மான நஷ்டத்திற்கு உங்*

கள் மேல் தாவா போட்டிருப்பார். ஆம், மான நஷ்டத்திற்குத் தான்!

உம்முடைய பட்டாசினால் நான் பட்ட அவமானம் கொஞ்ச நஞ்சமல்ல—அதுவும் தலை தீபாவளிக்கு வந்திருக்கும் என் இரண்டு மாப்பிள்ளைகள் முன்னிலையில்!

பட்டாசு சுடப்போகிறதோ என்று பயந்து கொண்டு அதைக் கையில் பிடித்துக் கொண்டு, உடம்பைக் கோணி நெளித்துக் கொண்டு, முகத்தை வக்கிரமாக வைத்துக் கொண்டு பயந்து கொண்டிருப்பேன். பட்டாசு சுடவே சுடாது! என் மாப்பிள்ளைகள், குழந்தைகள் எல்லோரும் கொல்லென்று சிரிப்பார்கள். இதைப் பார்த்துவிட்டு நான் பட்டாசு சுடாது என்று நினைத்துக்கொண்டு மிகவும் அலக்ஷியமாக பட்டாசைக் கையில் பிடித்துக் கொண்டிருப்பேன். அது "டபார்" என்று வெடித்து என் முகம் கைகால் எல்லாவற்றிலும் தீப்பொறிகள் விழும்.

அந்த மாதிரி பட்டாசு என் கையைச் சுட்டு விட்டதனால் நான் இந்தக் கடிதம் எழுதுவது கூடச் சற்று சிரமப்பட்டுத்தான் எழுதுகிறேன். ஆகையால் பணத்தை உடனே வாபஸ் பண்ணப் போகிறீர்களா, இல்லையா?

இப்படிக்கு,

"நாடோடி"

"நாடோடி" அவர்களுக்கு மிஸ்டர் புஸ் புஸ் எழுதுவது :

ஐயா,

பட்டாசு தங்கள் கையைச் சுட்டுவிட்டதென்று கேட்க மிகவும் வருத்தமா யிருக்கிறது. ஆனால் இதிலிருந்தே பட்டாசு எங்களுடையது அல்ல என்று நிச்சயமாகச் சொல்லலாம். எங்கள் பட்டாசு இப்படிக் கண்ட மாதிரி சுட்டுக் கையைப் புண்ணாக்காது.

இப்படிக்கு,
புஸ்புஸ்.

மிஸ்டர் புஸ் புஸ் அவர்களுக்கு "நாடோடி" எழுதுவது :

ஐயா,

நான் என்ன சொன்னாலும் நீங்கள் கேட்க மாட்டீர்கள் போலிருக்கிறது. பட்டாசு உங்கள் கடையில் வாங்கினது தான். அந்தப் பட்டாசுக் கட்டின் மேல் ஒட்டப் பெற்றிருந்த படம் ஒன்று என் பிள்ளை சீனு வைத்திருக்கிறான். அதை வேண்டுமானாலும் கொண்டு வந்து காண்பிக்கிறேன்.

இப்படிக்கு,
"நாடோடி"

"நாடோடி" அவர்களுக்கு மிஸ்டர் புஸ் புஸ் எழுதுவது :

ஐயா,

நீங்கள் வீணாக இங்கு வரும் சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டாம். நான் என்ன சொன்

ளுலும் உங்களுக்குத் தெரியமாட்டேன் என்கிறது. நீங்கள் உங்கள் கையில் சுட்டதாகவும், ஒன்று சுட்டு, ஒன்று சுடாமல் உங்களை அவமானப் படுத்தினதாகவும் சொல்லும் பட்டாசு எங்களுடையது அல்ல. ஏனென்றால் எங்கள் பட்டாசு ஒன்று கூடச் சுடாது. அதனால் தான் அவற்றிற்குக் "குழந்தைகள் பட்டாசு" என்று பெயர் வைத்தோம்.

இப்படிக்கு

புஸ் புஸ்.



# கூரை வீட்டின் மர்மம்

" என்ன கோபால் ராவ்! எல்லாவற்றுக்கும் நீர்தானு? கடவுள் வாழ்த்துப் பாடுவதும் நீர், பிரமுகர்களை வரவேற்பதும் நீர், வரவேற்புப் பிரசங்கத்தைப் படிப்பதும் நீர், நாடகத்தில் முக்கிய வேஷமும் நீர், வருஷாந்தர அறிக்கையைப் படிப்பதும் நீர், தலைவருக்கு மாலை போடுவதும் நீர், வந்தனோபசாரம் கூறுவதும் நீர்! ஏன், இந்த வருஷாந்தரக் கொண்டாட்டத்தில் எனக்கு ஒரு பங்குகூடக் கிடையாதா? ஏன், வருஷாந்தர அறிக்கையைத் தான் நான் வாசிக்கிறேனே" என்று கோபால்ராவைப் பார்த்து நான் கேட்டேன்.

" என்ன, வேங்கட்ராமய்யர்! நீர் சொல்வது வேடிக்கையா யிருக்கிறதே! உமக்குத்தான் நாடகத்தில் ஒரு பார்ட்டு கொடுத்திருக்கிறேனே. இதோ பாரும்" என்று சொல்லி, கொண்டாட்டத்தின் புரோகிராம் ஒன்றைக் காண்பித்தார். நாங்கள் நடிக்கப் போகும் நாடகத்தைப் பற்றி அதில் பின் வருமாறு கண்டிருந்தது:

**'கூரை வீட்டின் மர்மம்'**

**(கோபால் ராவ் எழுதிய நாடகம்)**

நாடக பாத்திரங்கள்

**போலீஸ்காரன்:**—கோபால் ராவ் (குமாஸ்தா, கலெக்டர் ஆபீஸ்)

**திருடர் தலைவன்** :—கிருஷ்ணசாமி நாயுடு (குமாஸ்தா, கலெக்டர் ஆபீஸ்)

**கதாநாயகன்** :—வேணுப் பிள்ளை (குமாஸ்தா, கலெக்டர் ஆபீஸ்)

**கதாநாயகி** :—கரீம் ராவுத்தர் (குமாஸ்தா, கலெக்டர் ஆபீஸ்)

**திருடர் கூட்டம்** :—சபா மெம்பர்கள்.

**மூர்ச்சையடைந்த மனிதன்** :—வேங்கட்ராமய்யர் (குமாஸ்தா, கலெக்டர் ஆபீஸ்)

கோபால் ராவும், நானும் கலெக்டர் ஆபீசில் சேர்ந்தாற்போல் வேலை பார்க்கிறோம். ஒரு கிழிந்த சட்டையை நாற்காலிக்கு அலங்காரமாக ஆபீஸிலேயே வைத்து விட்டுப் போவதிலிருந்து, ஆபீஸுக்குத் தினம் காலை எட்டு மணிக்கே தலை உச்சிக் குடுமியை ஆற்றிக்கொண்டு, வாய் நிறைய வெற்றிலை பாக்கு புகையிலை அடைத்துக்கொண்டு வருவது வரையில் எங்களுக்குள் மகா ஒற்றுமை. இதனால் நாங்களிருவரும் அந்த அமெச்சூர் நாடக சபாவில் மெம்பர்களா யிருந்ததில் ஆச்சரியமில்லை.

நாங்கள் சபா ஆரம்பித்த காரணத்தைப் பற்றி இங்கு சொல்வதாக உத்தேசமில்லை. ஆனால் ஒரு காரணத்திற்காக மட்டும் இல்லையென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். தமிழ் நாட்டில் நாடகம் அடைந்திருக்கும் சீர்கேட்டைக் கண்டு, கண்ணீர் உகுத்து, அதை உத்தா

ரணம் பண்ணி, மிக உன்னத ஸ்திதிக்குக் கொண்டு வருவதற்காக அது ஏற்பட்டதல்ல.

நாங்கள் சபா ஒன்று ஆரம்பித்ததற்குக் காரணம் கட்டாயம் தெரிந்துதான் ஆகவேண்டுமென்ருல், ஒரேஒரு காரணம் சொல்லுகிறேன். அதுவும் வெகு முக்கியமான காரணம். வீட்டுப் பிடுங்கல் இல்லாமல் எவ்வளவு நேரம் வீட்டுக்கு வெளியே காலம் கழிக்க முடியுமோ, அவ்வளவு நேரம் காலம் கழிப்பதற்குத்தான்.

சபை என்று ஒன்று இருந்தால் அதற்கு வருஷாந்தரக் கொண்டாட்டம் ஒன்று இருக்க வேண்டுமல்லவா? அதனுல்தான் நாங்கள் அந்தக் கொண்டாட்டம் நடத்தத் துணிந்தோம். அதோடு நாங்கள் முக்கால்வாசிப் பேர் கலெக்டர் ஆபீஸ் குமாஸ்தாக்களாதலால் எங்கள் கலெக்டரையே அந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும்படி தீர்மானம் பண்ணினதில் ஆச்சரியமில்லை.

இது விஷயத்தில் எங்கள் சபாவில் இருந்த முனிசிபல் ஆபீஸ் குமாஸ்தாக்களுக்குக் கோபம் தான். தங்கள் முனிசிபல் சேர்மனைத் தலைவராகத் தேர்ந்தெடுக்க வில்லையே என்ற கோபத்தினுல், அவர்களில் சிலர் தாங்கள் தனியாக, "முனிசிபல் சிப்பந்திகளின் அமெச்சூர் நாடக சபை" ஒன்று ஏற்படுத்தப் போவதாக எங்களைப் பயமுறுத்திவிட்டு எங்கள் சபையினின்றும் விலகிவிட்டார்கள்.

கலெக்டர் தலைமை வகிக்கப் போகிறார் என்று தீர்மானம் ஆனதும் கோபால்ராவ் கொண்ட உற்சாகத்திற்குக் கணக்கு வழக்கில்லை. நந்தனார் நாடகம் போடலாம் என்று நாங்கள் தீர்மானம் பண்ணியிருந்ததைக் கூட மாற்றி, தாமே சொந்தமாக ஒரு நாடகம் எழுதப் போவதாகச் சொன்னார். கடைசியில் எழுதியும் முடித்தார். அதுதான் "கூரை வீட்டின் மர்மம்" என்பது. அதில் என்ன மர்மம் இருக்கிறதென்பது இன்னும் மர்மமாகவே யிருக்கிறது. இருந்தாலும், "கோபால் ராவ் எழுதியது" என்று நோட்டீசில் போட்டுக்கொண்டு பெருமை யடைவது என்றால் எல்லாருக்கும் கிட்டக்கூடியதா?—அதுவும் கலெக்டர் துரையே அந்த நாடகத்திற்கு விஜயம் செய்யப் போகும் பொழுது.

புரோகிராமைப் பார்த்ததும், "மூர்ச்சை யடைந்த மனிதன்! இதுதானா எனக்கு பார்ட்?" என்று உறுமினேன்.

"என்ன அப்படிச் சொல்லுகிறேள்! உமக்கு நன்றாக நடிக்கத் தெரியும் என்று தெரிந்துதான் அந்தப் பார்ட்டை உமக்குக்கொடுத்திருக்கிறேன். சாதாரண மனிதனைப்போல் யார் வேண்டுமானாலும் நடிக்கலாம். ஆனால் மூர்ச்சை யடைந்த மனிதனைப்போல் நடிப்பதென்றால் சுலபமான காரியமா?"

"சரி. அதுதான் போனால் போகிறது. வருஷாந்தர அறிக்கையையாவது நான் வாசிக்கிறேனே?"

"அதெல்லாம் முடியாது. அதை சபா காரிய தரிசியாகிய நான் தான் வாசிக்க வேண்டும். எனக்கு எவ்வளவோ வேண்டிய ராமலிங்க அய்யரே கேட்டார். நான் கண்டிப்பாய் முடியாது என்று சொல்லிவிட்டேனே!" என்று கண்டிப் பாய்ச் சொன்னார்.

ராமலிங்க அய்யரைக் கண்டு, "என்ன ராம லிங்கய்யர்! கோபால் ராவ் சமாசாரம் பார்த்தீர் களோன்னோ!" என்றேன்.

"எல்லாம் பார்த்தேன். இந்த கோபால் ராவ் கர்வத்தை ஒழிப்பதற்கு ஏதாவது வழிபண்ணி யாக வேண்டும்" என்றார்.

சரியென்று நாங்களிருவரும் ஒன்று சேர்ந்து ஒரு 'வழி' தீர்மானம் பண்ணினோம். அதுதான், கோபால் ராவ் அறிக்கையை எங்கு வைக்கிறார் என்று கவனித்துக்கொள்ள வேண்டியது. நாட கம் முடிந்ததோ, இல்லையோ, ராமலிங்க அய்யர் சட்டென்று ஓடிப்போய் அதை எடுத்துக் கொண்டு வந்து, கட கடவென்று வாசித்து விட வேண்டியது. வாசித்து முடிந்ததும், "இந்த சபையின் முன்னேற்றத்திற்காகத் தம்முடைய உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் அர்ப் பணம் பண்ணியிருக்கும் வேங்கட்ராமய்யர் சில வார்த்தைகள் கூறுவார்" என்று சொல்ல வேண் டியது. நான் அதுதான் சாக்கென்று ஒரு 'குட்டி லெக்சர்' அடிக்க வேண்டியது. இந்த மாதிரியாக கோபால் ராவைக் கையைப் பிசைந்து கொண்டு நிற்கும்படிச் செய்ய வேண்டியது.

இந்த யோசனையைக் கோபால் ராவைப் பிடிக்காதவர்கள் என்று எங்களுக்குத் தோன்றின சிலரிடம் மாத்திரம் சொன்னோம். அவர்கள் "அது தான் சரி. கோபால் ராவ் அப்படித்தான் எதிர் பாராதபடி அவமானப்பட வேண்டும்" என்றார்கள்.

நாடக ஒத்திகை வெகு மும்முரமாக நடந்து கொண்டு வந்தது. பத்துப் பதினொரு ஒத்திகைகள் நடந்தன. முதல் இரண்டு நாளைக்கு என்னுடைய நடிப்பெல்லாம் கண்ணை மூடிக்கொண்டு படுத் திருக்க வேண்டியது; ஐந்து நிமிஷங்கள் கழித்து இரண்டு பேர் என்னைத் தூக்கிக்கொண்டு போய் விடுவார்கள், அவ்வளவுதான்.

ஆனால் கோபால் ராவ் சொன்னது போல் என்னுடைய பார்ட்டை நடிப்பது மிக்க சிரம மாய்த்தானிருந்தது. கண்ணை மூடிக்கொண்டு படுத்திருப்பது சிரமம்தான். ஆனால் அது போதா தென்று என்னைத் தூக்கிச் சென்ற நண்பர்கள் என்னைக் கீழே தொப்பென்று போட்டு விட்டார் கள். முதல் நாள் என்னை அவர்கள் கீழே போட் டதும், ஏதோ நாடகத்தில் அந்தமாதிரி வருகிற தாக்கும் என்று நினைத்தேன்.

ஆனால் இரண்டாம் நாள் அவர்கள் என்னைக் கீழே போட்ட போது என் எலும்புகள் பாதி நொறுங்கி விட்டன. ஒவ்வொரு ஒத்திகை நாளும் இவ்வாறு நடந்தால் நான் நாடகத்தன்று பிழைத்திருக்க மாட்டேன், அல்லது உண்மை

யாகவே மூர்ச்சை யடைந்த மனிதனுக மாறி விடு வேன் என்று பயந்து, கோபால் ராவிடம் இதைப் பிரஸ்தாபித்த பொழுதுதான், முதல் இரண்டு நாளும் அந்த "நண்பர்கள்" என்னை வேண்டு மென்றே கீழே போட்டிருக்கிருர்கள் என்று தெரிய வந்தது.

மூன்ரும் நாளும் இம்மாதிரியே நடந்தால் என்ன பண்ணுவது என்று பயந்து கொண்டிருக் கையில் கோபால் ராவே நாடகத்தை மாற்றி யமைத்து விட்டார். மூர்ச்சை யடைந்த மனிதனி லிருந்து நான் மூர்ச்சை தெளிந்த மனிதன் ஆனேன். என் நண்பர்களுடைய தயவில்லாமல் நானே நடந்து உள்ளே சென்றுவிட்டேன். கடைசிநாள் நெருங்க நெருங்க, கோபால் ராவ் நாடகத்தை மாற்றிக் கொண்டே போனுர். நானும் மாறிக்கொண்டே வந்தேன். திருடர் கூட்டத்தில் ஒருவன், கடைக்காரன், பிச்சைக் காரன், நொண்டி, குருடன் என்றெல்லாம் மாறி, கடைசியில் ஒரு கிழவனுனேன். கோபால் ராவும், போலீஸ்காரனிலிருந்து சப் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டரிலிருந்து சர்க்கிள் இன்ஸ்பெக் டர், என்று இதுமாதிரி மாறிக்கொண்டே வந்து கடைசியில் போலீஸ் கமிஷனராஞர். நாடகத் தில் மாற்றப்படாத பாகம் அதன் தலைப்பு ஒன்றுதான்.

கடைசி நாள் ஒத்திகை வெகு வெற்றிகர மாக நடந்தது. நானும் ராமலிங்க அய்யரும்

(அவருக்கும் என்னைப்போல் ஒரு கிழவன் பார்ட்டு) வெகு திறமையாக நடித்தோம். போலீஸ் கமிஷனர் உதவி யில்லாமலே திருடர்களை விரட்டி யடித்துக் கதாநாயகனையும் கதாநாயகியையும் தப்புவித்தோம். கோபால் ராவ், “பரவாயில்லை, ஆனால் முடிவு மாத்திரம் எல்லாரும் எதிர்பார்க்கக் கூடியதா யிருக்கிறது. எதிர்பாராத முடிவா யிருந்தால் இன்னும் எவ்வளவோ நன்றா யிருக்கும்” என்றார்.

கடைசியில் வருஷாந்தரக் கொண்டாட்ட தினம் வந்து சேர்ந்தது. நானும், ராமலிங்க அய்யரும் வெகு நன்றாக நடித்தோம். திருடர்களைத் துரத்தி யடித்துவிட்டுக் கதாநாயகனையும், கதாநாயகியையும் தப்புவிப்பதற்காகத் திரும்பி வந்தோம். இது ஒன்றுதான் பாக்கி. இது முடிந்ததோ இல்லையோ, நாங்கள் முன்பே தீர்மானம் பண்ணி யிருந்த ஏற்பாட்டின்படி நடக்க வேண்டியதுதான்.

திருடர்களைத் துரத்தி விட்டுத் திரும்பி வந்து கதாநாயகர்களுடைய கட்டுகளை அவிழ்த்ததும், அவர்கள் உள்ளே ஓடினது தான் தாமதம், என்ன ஆச்சரியம்! நாங்கள் வெகு சிரமப்பட்டு நாடக மேடைக்குள் துரத்தி யனுப்பின திருடர்கள் திரும்பி வந்து, எங்கள் கையையும் காலையும் கட்டி வாயிலும் துணியை அடைத்துக் கீழே உருட்டிவிட்டுப் போய்விட்டார்கள்!

நாடகத்தில் இந்த மாதிரி எதிர்பாராத கட்டம் ஒன்று வரும் என்று நாங்கள் எதிர் பார்க்

கவே யில்லை, சரி, இனிமேல் போலீஸ் கமிஷனர் (கோபால் ராவ்) வந்து எங்கள் கட்டுகளை அவிழ்த்து, நாங்கள் கதா நாயகர்களை விடுவித்ததற்காக எங்களுக்கு ஏதாவது வெகுமதி கொடுப்பார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில், திரை விழுந்து விட்டது! திரைக்கு வெளியே போலீஸ் கமிஷனர் வருஷாந்தர அறிக்கையை வாசிக்கும் குரல் கேட்டது!

கோபால் ராவ் தம் நாடகத்தை எதிர்பாராதபடி முடித்தார் என்று அங்கு வந்திருந்தவர்களுக்குத் தோன்றிற்றோ, இல்லையோ, எங்களுக்கு அது எதிர்பாராத முடிவாய்த்தானிருந்தது. அப்பொழுதுதான், ஏன் எங்களுடைய அபூர்வ யோசனையைச் சில நண்பர்களிடம் கூறினோம் என்று வருத்தப்பட்டோம்.



# ஐயா புருஷர்களே!

ஐயா புருஷர்களே! ஸ்திரீகள் அல்லாதவர்களே! உங்களுக்கு மாத்திரம் காதோடு ஒரு வார்த்தை! பாவம், நீங்களும் என்னைப் போல் புருஷர்களாதலால், உங்கள் சஹதர்மிணியிடம் எவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

இந்தப் பெண்ணாய்ப் பிறந்தவர்கள் இருக்கிறார்களே. இவர்கள் இந்த யுத்த சமயத்தில் கூட புருஷர்களின் கழுத்தை அறுக்காமல் இருப்பதில்லை. சாமான்கள் எல்லாம் காகித விலை, க்ஷவர பிளேடு விலை என்று விற்கையில் இதை வாங்கிக் கொடு, அதை வாங்கிக் கொடு என்று புருஷர்களை நச்சரித்துக் கொண்டே இருக்கிறார்கள்.

இவர்களை ஏமாற்றுவதற்கு எனக்கு ஒரு நல்ல வழி தோன்றுகிறது. சர்க்காரில் கையாளுகிறார்களே, "சிகப்பு நாடா" அமுல், அதே மாதிரி எல்லாம் எழுத்து மூலமாகத்தான் நடக்க வேண்டுமென்று வைத்து விடுங்கள். அப்பொழுது இந்த ஸ்திரீகள் என்ன பண்ணுகிறார்கள் என்று பார்க்கிறேன்!

உதாரணமாக, சீதா லக்ஷ்மி அம்மாள் தன் புருஷன் கோபால கிருஷ்ணனைப் புதுப்புடவை

ஒன்று வாங்கித் தரும்படி கேட்கிருள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது கோபால கிருஷ்ணன் நடந்து கொள்ள வேண்டிய விதம் இதோ கீழே கொடுத்திருக்கிறேன்.

3-3-43

புதுப் புடவை ஒன்று வெகு அவசரமாக வேண்டி யிருக்கிறது. அதற்கு வேண்டிய பணத்தை உடனே 'சாங்ஷன்' செய்யவேண்டும்.

சீதா

8-3-43

புதுப் புடவை யாருக்கு என்பது குறிப்பிடப் படவில்லை. ஆகையால் கடிதம் திருப்பி யனுப் பப் படுகிறது.

கோபு

8-3-43

புதுப் புடவை வேறு யாருக்கு? எனக்குத் தான்.

சீதா

15-3-43

அப்படியானல் இத்துடன் அனுப்பப்பட் டிருக்கும் நமூனைவைப் பூர்த்தி செய்வதுடன், கீழ்க்கண்ட விவரங்களும் தெரிவிக்கவும்.

(1) இப்பொழுது கைவசம் உள்ள புடவை கள் எத்தனை ?

(2) அவை என்னென்ன ஸ்திதியில் இருக் கின்றன ?

(3) இவற்றைக் கொண்டே காலந் தள்ள முடியாதா?

(4) முடியாது என்றால் ஏன் முடியாது?

(5) வாங்க உத்தேசிக்கும் புதுப் புடவையின் விலை மதிப்பென்ன?

கோபு

28-5-43

நமூனாவைப் பூர்த்தி செய்து இத்துடன் அனுப்பி யுள்ளேன். கேட்ட விவரங்களுக்கு இதோ பதில்.

(1) இப்பொழுது கைவசம் உள்ள புடவைகள் 33.

(2) 30 புடவைகள் அப்படியே மடிப்புப் பிரியாமல் பீரோவில் இருக்கின்றன. மீதி மூன்றில் இரண்டு கொஞ்சம் பழசானவை, ஒன்று ரொம்பப் பழசானது.

(3) ஸ்திரீகள் காலந் தள்ள முடியாது என்பதற்காகவா புதுப் புடவை கேட்கிறார்கள்? இத்தனை நாள் குடித்தனம் பண்ணியும் நீங்கள் இதுகூடத் தெரிந்து கொள்ள வில்லையே?

(4) மூன்றும் இனத்துக்கு நான் கொடுத்திருக்கும் பதிலைக் கொண்டு பார்க்குப்போது இந்தக் கேள்வி எழுவில்லை.

(5) வாங்க உத்தேசிக்கும் புதுப் புடவை யின் மதிப்பு, நான் உத்தேசித்த சமயத்தில் ரூ. 40 ஆக இருந்தது. இப்பொழுது ரூ. 60 ஆகி யிருக் கிறது. இன்னும் தாமதப் படுத்தினால் விலை இன்னும் உயர்ந்து விடலாம். ஆகவே தயவு செய்து துரிதப் படுத்தவும்.

சீதா

15-3-43

மன்னிக்க வேண்டும். வேறு அலுவல்களி னால் உன்னுடைய 15-3-43 கடிதத்தை உடனே கவனிக்க முடியவில்லை. இப்பவும் நீ கேட்ட புதுப் புடவை தேவைதானா, இல்லையா என் பதைத் தெரிவிக்கவும். கோபு

28-5-43

கட்டாயம் தேவை சீதா

4-6-43

அப்படியானால் உன்னுடைய 15-3-43 தேதி யிட்ட கடிதத்தில் இலக்கம் மூன்றுக்கு நீ எழுதி யிருக்கும் பதில் விளக்கமா யில்லை. அதைச் சற்று விளக்க முடியுமா? கோபு

4-6-43

உடுத்திக் கொள்வதற்கு இல்லையே என்ப தற்காக மட்டும் ஸ்திரீகள் புடவை வாங்குவ தில்லை. பீரோவில் வைத்து அழகு பார்ப்பதற் கும் வாங்குகிறார்கள். ஒரு ஸ்திரீ எத்தனைக் கெத்தனை நிறைய புதுப் புடவைகள் தன் பீரோ

வில் மடிப்புப் பிரியாமல் வைத்திருக்கிருளோ, அத்தனைக் கத்தனை அவளுக்கு மதிப்பு ஜாஸ்தி. இது விஷயம் இத்தனை நாள் தெரிந்து கொண்டிராவிட்டால் இனி மேலாவது தெரிந்து கொள்ளுங்கள்.

சீதா

11-6-43

என்னுடைய 4-6-43 தேதி யிட்ட கடிதத்துக்கு ஏன் இன்னும் பதில் இல்லை ?

சீதா

18-6-43

என்னுடைய 11-6-43 கடிதத்துக்கு பதில் எதிர்பார்க்கிறேன்.

சீதா

25-6-43

என்னுடைய 18-6-43 தேதி கடிதத்துக்குப் பதில் வருமா, வராதா ?

சீதா

8-7-43

உன்னுடைய 4-6-43 கடிதம் கிடைத்தது. உடுத்திக் கொள்வதற்காகத் தான் ஸ்திரீகள் புதுப் புடவை வாங்குகிருர்கள் என்று நான் இதுவரை நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனல் அப்படியில்லை, பீரோவில் வைத்து அழகு பார்ப்பதற்காக என்று நீ கூறுகிருய். இந்த விவாதத்துக்கிடமான பிரச்னையைப் பற்றி மேலதிகாரிகளான என் பெற்ருேர்களுக்கு எழுதியிருக்கிறேன். அவர்களிடமிருந்து பதில் கிடைத்ததும் உனக்குத் தெரியப் படுத்துகிறேன்.

கோபு

ஆக, இந்த மாதிரி கடிதப் போக்குவரத்து நடத்திக்கொண்டே போனுல் எந்த ஸ்திரீதான் தொடர்ந்து எழுதிக்கொண்டே போவாள் என்று நினைக்கிறீர்கள்? அப்படித்தான் தீபாவளி சமயம் வரை எழுதிக்கொண்டே வந்தாள், தீபாவளிக்காக வாங்கிக் கொடுக்கும் புதுப் புடவை இருக்கவே இருக்கிறது. "இந்தா நீ கேட்ட புதுப் புடவை" என்று அதைக் கொடுத்து விட்டால் போகிறது.

அட, யாரது பின்னுல்? அட, நீயா? பின்னுல் என் மனைவி சரசு நின்றுகொண்டிருந்தாள்! "இந்த சாமர்த்தியம் எல்லாம் கட்டுரையில். என்னிடம் செல்லாது, தெரியுமோல்லியோ?" என்முள்.



# மாப்பிள்ளைகளே ஜாக்கிரதை!

மாப்பிள்ளைகளே! போய்க் குடு, குடு என்று கலியாணத்தைப் பண்ணிக்கொண்டு வந்து விட்டீர்களே, கலியாணத்தின்போது நடந்த சில சடங்குகளுக்கும், வழக்கங்களுக்கும் என்ன தாத்பர்யம் என்று தெரியுமா?......ஐயையோ, தெரியாதா?......சரி, நான் சொல்லுகிறேன், கேட்டு, ஜாக்கிரதையாய் நடந்து கொள்ளுங்கள்.

## தேங்காய் விஷயம்

நலங்கு நடக்கும்போது ஒரு தேங்காயை எடுத்து, அதன் குடுமியைப் பிய்த்து, பந்தாகப் பண்ணி அதைத் தம்பதிகள் விளையாடுவதற்காகக் கொடுக்கிறார்கள், அல்லவா? "பந்து விளையாடினாள். பூங்கோதை பந்து விளையாடினாள்" என்னும் ஒரே பாட்டையே சுற்றியிருக்கும் எல்லா ஸ்திரீகளும் பாடிப் பாடி, அவர்கள் தொண்டை வரண்டுபோன பிறகு, அதை மாப்பிள்ளைக்கும், பெண்ணுக்கும் நடுவில் வைத்து, இரண்டு பேரையும் அதைப் பற்றி இழுக்கச் சொல்வார்கள்.

இதிலேகூட ஆண் சமூகத்தின் மீது இழைக்கப்படும் ஒரு அநியாயத்தைப் பாருங்கள். "சமத்துவம், சமத்துவம்" என்றெல்லாம் இந்த ஸ்திரீகள் பேசுகிறார்களே யொழிய, கடைசியில் தேங்

காய் இழுப்பதற்குப் பெண் இரண்டு கைகளையும் உபயோகப்படுத்த லாமாம்; மாப்பிள்ளை ஒரே ஒரு கையைத் தான் உபயோகப் படுத்த வேண்டுமாம். "பார்க்கிறேன் ஒரு கை" என்று தானே பொதுவாகச் சொல்லுகிறோம்? பின் பெண் எப்படி இரண்டுகைகளையும் உபயோகப்படுத்தலாம்?

உங்களுக்கு என்னமோ, இந்தத் தேங்காய் விஷயம் தமாஷாய்த் தோன்றி யிருக்கலாம். ஆனால் உண்மை என்னவெனில் உம் மனைவிக்கு மிகவும் கெடுதலான ஒரு பயிற்சி கொடுக்கப் பட்டு விடுகிறது! இப்பொழுது கொடுக்கப்படும் இந்தப் பயிற்சிதான் பின்னால் மனைவி புருஷனிட மிருந்து அவனுடைய மணிபர்ஸை பிடித்திழுக்க உதவுகிறது. தேங்காயைப் பிடித்திழுக்க உபயோகப் படுத்தினது இரண்டு கை. ஆனால் மணிபர்ஸைப் பிடித்திழுக்க உபயோகப் படுத்தப் போவதோ, இரண்டு கை, இரண்டு கண்கள், அவைகளில் தோன்றும் மோகனப் பார்வை, ஒரு சந்திரவதனம், அதில் தோன்றும் புன்சிரிப்பு எல்லாம். ஆகவே, மாப்பிள்ளைகளே! மணிபர்ஸ் ஜாக்கிரதை! ரொம்பப் பயமா யிருந்தால் அதை என்னிடம் கொடுத்து வையுங்கள்.

## ஔபாசனம்

கலியாணம் என்றால் ஔபாசனம் என்று ஒன்று வைத்து விடுகிறார்கள். இந்த ஔபாசனத்துக்குப் பயந்துகொண்டே நான் முதலில் கலியாணமே வேண்டா மென்றேன். "எல்லா

ரும் மாமியார்களாகி மாட்டுப்பெண் மீது அதிகாரத்தைச் செலுத்தும்போது, தான் மாத்திரம் ஏன் பேசாமல் இருக்க வேண்டும்?" என்று என் தாயார் பிடிவாதம் பிடித்ததால் கலியாணம் பண்ணிக் கொள்ள ஒப்புக்கொண்டேன்.

கலியாணத்தின்போது ஔபாசனத்திற்கு எதிரே கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்து கொண்டேன். அப்படிப் பண்ணியும் திக்கு முக்காடிப்போய் விட்டேனென்றால் எத்தனை புகையா யிருந்திருக்கும் என்று நீங்களே ஊகித்துக் கொள்ளுங்களேன்! அப்படிக் கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்ததனால் ஔபாசனம் முடிந்ததும், "பெண் கையைப் பிடிச்சுக்கோ" என்று சாஸ்திரிகள் சொன்னதும், எனக்கும் என் மனைவிக்குப் நடுவில் நெருக்கியடித்து உட்கார்ந்து கொண்டிருந்த என் எட்டு வயது மச்சினி கையைப் பிடித்து விட்டேன்!

இந்த ஔபாசனம் பண்ணுவதில் இத்தனை கஷ்டங்களிருந்தும், பெரியோர்கள் இதைக்காரணமில்லாமல் விதிக்க வில்லை என்று தெரிகிறது. முன் காலத்தில் எல்லாம் ஹோட்டல் ஏது, மண் ஏது? அவ்வளவு தூரம் போவானேன்? இந்தக் காலத்திலும் தான் கிராமாந்தரங்களில் எல்லாம் ஹோட்டல் ஏது? ஆத்துக்காரி வீட்டில் இல்லாவிட்டாலோ, அல்லது அவளுக்கு உடம்பு சரியா யில்லாவிட்டாலோ சமையல் உத்தியோகத்தை ஆத்துக்காரர் தானே ஏற்றுக்கொள்ளவேண்டும்? அப்பொழுது புகைக்குப் பயந்து முடியுமா?

அதற்காகத்தான் கலியாண நாலு நாளும் மாப் பிள்ளைகளுக்கு இந்த "ட்ரெயினிங்" கொடுக்கப் படுகிறது.

## "கையைப் பிடிச்சுக்கோ"

கலியாணத்தில் ஒரு அழகான வழக்கம் இருந்து வருகிறது. நீர் கலியாண வீட்டை விட்டு இறங்கி யிருக்கும் வீட்டுக்குப் போகும் போதெல்லாம் உம் மனைவி கையைப் பிடித்துக் கொண்டு, கூட அழைத்துக்கொண்டு தானே போகச் சொல்லுகிறார்கள் ?

இப்பொழுது பெரியவர்கள் கற்றுக் கொடுக் கும் துர்வழக்கம்தான் நாளைக்கு உம் கழுத்தை அறுக்க ஆரம்பிக்கிறது. நீர் எங்கேயாவது நாடகம், சினிமா, பாட்டுக் கச்சேரி என்று போகப் புறப்பட்டால் உம் மனைவி, "என்னையும் கையோடு அழைச்சிண்டு போங்கோ" என்று உம்முடன் புறப்பட்டு விடுகிறாள்.

## பத்தியம்

பத்தியம் என்றதும், உப்பில்லாப் பத்தியம் என்றெல்லாம் நினைத்துக் கலங்காதீர்கள் ! இந் தப் பத்தியம் கலியாணத்தில் வழங்கும் ஒரு பயித்தியக்காரத் தனமான வழக்கத்தைக் குறிக் கிறது. புருஷர்களுடைய சுயமரியாதையில் பெண்கள் தலையிடுகிறார்கள் என்பதற்கு இதைத் தவிர வேறு உதாரணம் வேண் டாம். இதில் புருஷன் ஸினிமாவுக்குப் போகக் கூடாது, காப்பிஹோட்டலுக்குப்போகக்கூடாது,

பொடி போடக்கூடாது, புகையிலை போடக் கூடாது, போன்ற அநேக உத்தரவுகள் பிறக்கும். பின்னால் புருஷனுக்கு உத்தரவுகள் போட மனை விக்கு இப்பொழுதே கற்றுக் கொடுக்கப்பட்டு விடுகிறது.

## ஊர்வலம்

கடைசியாகக் கலியாணம் முடிந்ததும் நாலாம் நாளன்று ஊர்வலம் விடுகிறார்களே தெரியுமா? ஒரு மோட்டார்காரில் இரண்டு பேர் உட்காரக்கூடிய இடத்தில் பத்துப் பேர். அதாவது மாப்பிள்ளை, மாட்டுப் பெண் அப்புறம் குட்டி மச்சினன், குட்டி மச்சினி, எதிர் வீட்டு அம்பி, அடுத்த வீட்டு அங்கச்சி, ஆக எட்டு வாண்டுகள். நாளைக்கு குடித்தனம் பெருகினால் இம்மாதிரித் தான் நெருக்கி யடித்துக்கொண்டு போகவேண்டும் என்பதைக் காட்டுவதற்காகத் தான் இந்த ஊர் வலம் விடுகிறார்கள்.

## அம்மி மிதித்தல்

அம்மி மிதித்தல் என்று ஒரு சடங்கு. மனை வியின் காலைப் பிடித்துத் தூக்கி அம்மியின் மீது வைக்க வேண்டும். நாளைக்குக் காரியம் ஆக வேண்டி யிருந்தால் காலை பிடித்துத்தானே ஆக வேண்டும்? அதற்கு இப்பொழுதே பயிற்சி அளிக்கப்படுகிறது போலும்!

ஆகவே, மாப்பிள்ளைகளே ஜாக்கிரதை!

★

# உலகம் பலவிதம்

"உலகம் பலவிதம்" என்னும் பழமொழியின் உண்மையை அனுபவத்திலேயே தெரிந்து கொள்வதற்கு முன்னெல்லாம் ஒரே ஒரு வழி தான் உண்டு என்று தெரிகிறது. அது தான் எங்கே யாவது குட்டிச்சுவருக்குப் பக்கத்தில் நிற்கும் ஒரு கழுதையைப் பிடித்துக்கொண்டு வர வேண்டியது. அதை அப்பாவும் பிள்ளையுமாகச் சேர்ந்து விற்பதற்காகச் சந்தைக்கு எடுத்துக் கொண்டு போகவேண்டியது. வழியில் எவனாவது ஒருவன், "ஐயோ, அந்தக் கழுதையின் மீது யாராவது ஒருவர் சவாரி செய்தால் என்ன?" என்று கேட்பான். உடனே தகப்பன் சவாரி செய்யவேண்டியது. பிறகு மகன் சவாரி செய்ய வேண்டியது.

இந்த மாதிரி கதையில் சொன்னது போலவே செய்து கொண்டு போய்க் கடைசியாகக் கழுதையை இரண்டு பேருமாகத் தூக்கிக் கொண்டு, ஒரு பாலத்தின் வழியாகச் செல்ல வேண்டும் (சந்தைக்குப் போகும் வழியில் பாலம் இருக்கிறதோ இல்லையோ, நாம் கடைசியாக ஒரு பாலத்துக்குத்தான் போகவேண்டும்.) பாலத்தில் ஒரு எண்ணெய் வண்டி வருமட்டும் (எந்த எண்ணெயா யிருந்தாலும் பரவாயில்லை) காத்திருக்கவேண்டும். எண்ணெய் வண்டி வந்ததும்,

கழுதையைத் 'தொபகடீர்'னு கீழேயுள்ள காவேரியிலோ, கொள்ளிடத்திலோ போட்டுவிட வேண்டும். உடனே 'உலகம் பலவிதம்' என்னும் பழமொழியின் உண்மை தெரிந்துவிடும்.

ஆனால் எனக்கு இந்த சௌகரியங்கள் ஒன்றும் கிடைக்கவில்லை. முதலாவதாக என்னிடம் கழுதையில்லை. என் வண்ணானிடமாவது ஒரு கழுதை இரவல் வாங்கிக்கொண்டு வருவோமென்றால், அவனிடமும் கழுதை கிடையாது. கழுதை தூக்கும் சுமையை அவன் தான் தூக்கிக் கொண்டு போகிறான். கழுதையைச் சந்தையில் தான் வாங்கிக் கொள்வோமென்றால், என்னுடன் கூட்டிக்கொண்டு போக எனக்கு ஒரு மகன் கிடையாது. சரசு என்னைத் தேடி வாழ்க்கைப் பட்டு இரண்டு வருஷங்கள் தான் ஆகின்றன.

இருந்தாலும் கழுதையின் தயவில்லாமலே, பழமொழியின் உண்மையைப் பின் கண்ட வழியில் கண்டு பிடித்தேன்.

ஒரு நாள் காலை எனக்கு திடீரென்று ஒரு கேள்வி தோன்றிற்று. வேதாந்த ஆராய்ச்சிகளுக் கெல்லாம் மூலமானதும், எத்தனையோ பெரிய பெரிய ரிஷிகள் மனதில் தோன்றினதுமான "நான் யார்?" என்பது தான் அந்தக் கேள்வி. இதற்கு, "நான் நான் தான்" என்று பதில் சொல்லுவதைத் தவிர வேறு பதில் எனக்குத் தெரியவில்லை. ஆனால் இதே கேள்விக்கு, அதாவது நான் யார் என்பதைப்பற்றி என்

தாயார், தகப்பனுர், தம்பி, முதலானோர் என்ன அபிப்பிராயம் கொண்டிருந்தார்கள் என்பதை எழுதுகிறேன். அதிலிருந்து உலகம் பலவிதமா, இல்லையா என்று எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

## என் தகப்பனுர்

எம். ஏ. பாஸ் பண்ணி என்ன பிரயோஜனம்? ஒரு உத்தியோகம் பார்த்துக்கொள்ள லாயக்கில்லை. நான் தான் இவனுக்காக எத்தனை பேரைப் போய்ப் பார்க்க முடியும்? சும்மா வீட்டில் சாப்பிட்டு, சாப்பிட்டுத் தூங்கினுல் வேலை இவனைத் தேடிக்கொண்டு வருமா? வேலைமெனக்கெட்டு பத்திரிகைகளுக்குக் கதை, கட்டுரை யென்று எழுதியனுப்பி விடுகிருன். அவர்கள் கொடுக்கும் பணம் அப்படியே சினிமாக்காரனுக்குப் போய் விடுகிறது. எனக்கு என்ன? என்னமோ என் காலம் உள்ளவரையில் பென்ஷன் வரும். எனக்கு அப்புறம் எப்படியாவது போகிருன். ஐந்து வருஷமாய், அந்த ஷார்ட்டு ஹாண்டு, டைப் ரைடிங் படிடா, படிடா என்று அடித்துக் கொள்ளுகிறேன். சொன்னபடி கேட்டால் தானே? இந்தக் காலத்தில் வெறும் எம். ஏக்கும், பி. ஏக்கும் எவன் வேலை கொடுக்கிருன்?

## என் தாயார்

சம்பளம் ஒத்தக் காசைக் காணும். பணத்தைக் கொட்டி வாசித்தது தான் மிச்சம். இதில்

சாப்பாட்டுக்கு அடிக்கிற ராங்கியா, கொஞ்சம் நஞ்சமில்லை. ஏதோ போட்டதைச் சாப்பிட்டோம் என்று இருந்தால் தானே! நான் சமைத்துப் போட்டால், இது நன்ருயில்லை, அது நன்ருயில்லை யென்று ஆயிரம் தொசுக்கு சொல்கிருன். ஆம்படையாள் சமைத்துப் போட்டால் வாயில் கொழுக்கட்டை அடைத்தது போல் பேசாமல் சாப்பிட்டு விட்டுப் போகிருன். அவள் சமையலுக்கு நாம் ஏதாவது குற்றம் சொன்ஞல் "இது என்ன ஹோட்டலா? முன்னே, பின்னே இருந்தால் என்ன கெட்டுப் போச்சு? என்ன இருந்தாலும், இந்த வயதில் உங்களுக்கு நாக்கு இத்தனை நீளம் இருக்கவேண்டாம்" என்கிருன். தினம் ஆம்படையாளுக்குக் கடை பக்ஷணமும், நினைத்தால் துணி மணிகளும், வாங்கிக் கொடுப்பதற்கு எங்கேயிருந்து தான் பணம் வருகிறதோ? இத்தனை நாளிலே "இந்தா அம்மா, நீ சாப்பிடு" என்று எனக்கு ஒரு பழம் வாங்கிக் கொடுத்தது கிடையாது.

## என் தமக்கை

நினைத்தா பட்டணத்திலேந்து வந்துடருனே என்னைப் பார்க்க—வரும்போது ஒரு சாமான், கீமான், ஒரு துணி, ஒரு மணி வாங்கிண்டு வராஞ? இங்கே கொட்டிக் கிடக்கிறதுன்னு அத்திம்பேரைப் பார்க்க அடிக்கடி ஓடி வந்துடருன்! குழந்தைகளுக்காவது, ஒரு பாவாடை, ஒரு சட்டை வாங்கிண்டு வராஞ? அதுவுமில்லை. என்னமோ நாங்கள் காணுதது

கண்டதுபோல் ஒவ்வொரு தடவையும் எட்டு அணுவுக்குக் கடை பக்ஷணம் வாங்கிக் கொடுத்துடருன், குழந்தைகளுக்கு.

## என் தங்கை

என்ன இருந்தாலும் எங்கண்ணு ரொம்ப நல்லவர்தான். அவரை எதற்காக அப்பாவும் அம்மாவும் இப்படிக் கோபித்துக் கொள்ளுகிருர்கள்? அவர் கிளாஸ்லே எல்லாம் முதலாகத்தான் பாஸ் பண்ணிக் கொண்டு வந்தார். வேலை கிடைக்கா விட்டால் அவர் என்ன பண்ணுவார்? இந்தக் காலத்தில் யாருக்குத்தான் வேலை கிடைக்கிறது? சும்மா வெய்யலில் அலைந்து விட்டு வந்தால் வேலை கிடைத்து விடுமாக்கும்! மன்னி தான் என்ன, நம்மிடம் எவ்வளவு பிரியமா யிருக்கிருள்! அண்ணு ஏதாவது சோப்பு, ரிப்பன், சென்டு வாங்கிக்கொண்டு வந்தால், எனக்குப் பாதி கொடுக்கிருள்.

## என் தம்பி

என்னைத் தாட்பூட், தஞ்சாவூர் என்று அதிகாரம் பண்ணுகிருனே யொழிய தனக்காகச் சம்பாதிக்க யோக்கியதை கிடையாது. பத்திரிகைகளுக்கு இரண்டு கதை எழுதி, ஒரு பத்து ரூபாய் வந்து விட்டால் போதுமா? துளியாவது குடும்பக் கவலை தெரிந்தால் தானே? நான் எஸ். எஸ். எல். ஸி. யோடு படிப்பை நிறுத்தினதற்கு என்னைப் பழித்தானே. இப்பொழுது நாளுவது

ரூ. 30 சம்பாதிக்கிறேன். அவன் அதுகூட இல்லையே!

## என் மருமகள் கோகிலி

எங்க மாமா ரொம்ப நல்ல மாமா. எனக்குத் தினம் சாக்கலேட் வாங்கிக் கொடுக்கிறு. எனக்கு சிலேட்டு, சாக் பீஸ் எல்லாம் மாமாதான் கொடுத்தா. மாமியைச் சிளிமாவுக்குக் கூட்டிக் கொண்டு போற போதெல்லாம் என்னையும் கூட்டிக் கொண்டு போரு.

### சரசு

அதுதான் என் மனைவி......ஐயோ, வேண்டவே வேண்டாம். என் மனைவி என்னைப்பற்றி நினைத்துக் கொண்டிருப்பதை யெல்லாம் வெளியிட்டு, நானே என் மரியாதையைக் கெடுத்துக் கொள்ள விரும்பவில்லை. வீட்டுக்கு வீடு வாசற்படி தான். உங்கள் மனைவி உங்களைப்பற்றி என்ன "நல்ல" அபிப்பிராயம் கொண்டிருக்கிருளோ, அதே "நல்ல" அபிப்பிராயந்தான் என் மனைவியும் என்னைப் பற்றிக் கொண்டிருக்கிருள்.

இப்பொழுது தெரிகிறதா, உலகம் பலவிதம் தான் என்று?

# கைகண்ட மருந்து

“சகல வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து! அழுதவன் சிரிப்பான்! போட்ட உடனேயே குணம் தெரியும். குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனும். நற்சாக்ஷிப் பத்திரங்களும், தங்க மெடல்களும் பரிசு பெற்றது” என்றெல்லாம் எழுதி போர்டு மாட்டித் தொங்க விட்டுக் கொண்டிருக்கா விட்டாலும், எங்கள் கிராமத்தில் கோடி வீட்டுக் குப்பண்ணுவைத் தெரியாதவர் ஒருவரும் கிடையாது.

“தலைவலியா? ஓடு, குப்பண்ணு வீட்டுக்கு!” “கால்வலியா? ஓ! ஓட முடியாதோ? பரவாயில்லை. இங்கிருந்தே ஒரு குரல் கொடு. குப்பண்ணு ஓடி வந்து விடுவார்.” “வயிற்று வலியா? குப்பண்ணு கொடுக்கும் லேகியத்தைச் சாப்பிட்டுப் பார். வயிற்று வலி ஒரு நொடிக்குள் பஞ்சாய்ப் பறந்து விடும்.

குப்பண்ணுவின் பிரதாபத்தைப் பற்றி இந்த மாதிரி ஊரில் எல்லாரும் புகழ்ந்து கொள்வது வழக்கம். இத்தனைக்கும் குப்பண்ணுவை வைத்தியத்தில் நிபுணர் என்று ஊரில் கொண்டாடினதற்குக் காரணம் அவர் தாத்தா வைத்தியத்தில் கெட்டிக்காரரா யிருந்ததுதானும். தாத்தா கெட்டிக்காரரா யிருந்தால் பேரனும்

கெட்டிக்காரஞ யிருக்க வேண்டும் என்று எந்த சாஸ்திரத்தில் சொல்லி யிருக்கிறதோ, தெரிய வில்லை.

குப்பண்ணுவின் பிராபல்யம் ஊரில் மிகவும் அதிகமா யிருந்தும், அவருடைய வைத்திய திறமையைச் சோதிப் பதற்கோ, அல்லது அத ஞல் அனுகூலம் பெறவோ, எனக்குச் சந்தர்ப் பமே வாய்க்கவில்லை.

நல்ல வேளையாகத் தையும் பிறந்தது, எனக் கும் ஒரு வழி பிறந்தது. என் மனைவிக்குத் தூரபந்து யாரோ ஒருவருக்குக் கலியாணம் என்று என் மனைவி குழந்தை குட்டிகளுடன் புறப்பட்டுப் போய் விட்டாள். நானும் மிகவும் சந்தோஷத்துடன் தானே அவளை ரயில் ஏற்றி விட்டுத் திரும்பினேன்.

திரும்பினதுதான் தாமதம், தலைவலி பிர மாதமாக வந்து விட்டது. அன்று காலைதான் நான் என் தலை உச்சியில் குடுமி யென்ற பெயருக் காக இரண்டு மயிர் மாத்திரம் விட்டு விட்டு மழுங்க க்ஷவரம் பண்ணிக் கொண்டிருந்தேன். மொட்டைத் தலையுடன் வெய்யிலில் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வீட்டுக்கு நடந்துவந்ததுதான் தலைவலிக்குக் காரணம் என்று அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்யர் சொன்ஞர். எனக்கு என்னமோ என் மனைவி ஊருக்குப் போய் விட் டதுதான் தலைவலிக்கு அத்தனை தைரியம் பிறந்து விட்டது என்று தோன்றிற்று.

எதற்கும் குப்பண்ணுவைப் போய்ப் பார்ப் போம் என்று குப்பண்ணுவைத் தேடிக்கொண்டு அவர் வீட்டுக்குப் போனேன். "குப்பண்ணு! குப் பண்ணு!" என்று கத்திக் கத்திப் பார்த்தேன். குப்பண்ணுவைக்காணும். தூண்மறைவிலிருந்து ஒரு முகம் மாத்திரம் தெரிந்தது. அது குப்பண்ணு வின் சம்சாரத்தின் முகம் என்று தீர்மானித்தேன்.

"அவர் பஞ்சு சாஸ்திரிகள் அகத்துக்குப் போயிருக்கிருர்" என்று அந்த முகம் சொல்லிற்று. உடனே பஞ்சு சாஸ்திரி வீட்டுக்குப் போனேன்.

"குப்பண்ணுவா? எனக்கு வயிற்று வலியா யிருக்கிறது என்று குப்பண்ணுவுக்குச் சொல்லி யனுப்பித்தேன். இப்போதுதான் வந்தார். வந்த தும், வராததுமாய் 'ராமசாமி அய்யர் வீட்டில், யாருக்கோ காய்ச்சல். அதைப் பார்த்துவிட்டு வரும்போது மருந்து கொண்டு வருகிறேன்' என்று போனவர் ஒரு மணி நேரம் ஆயிற்று, இன்னும் வரவில்லை" என்ருர் பஞ்சு சாஸ்திரிகள்.

சரியென்று ராமசாமி அய்யர் வீட்டுக்குப் போனேன். "கிருஷ்ணசாமி அய்யர் வீட்டில் யாருக்கோ மயக்கம் வந்து விட்டதாம். அதைப் பார்த்து விட்டு இங்கே வருகிறேன் என்று சொன்னுர், அரை மணி நேரம் ஆயிற்று" என்று தகவல் வந்தது.

சரியென்றுகிருஷ்ணசாமி அய்யர்வீட்டுக்குப் போனேன். அங்கேயும் இல்லை. இப்படியாக வீடு வீடாகத் தேடிக்கொண்டு போய்க் கடை சியில் அப்புசாமி அய்யர் வீட்டை யடைந்தேன்.

"குப்பண்ணுவா! இத்தனை நாழி என்னோடு தான் பேசிக் கொண்டிருந்தான். இப்போதான் நமது நாணு வந்து கூட்டிக்கொண்டு போனான். அவசரத்திலே யாருக்கோ தேள் கொட்டி விட்டதாம்" என்றார் அப்புசாமி அய்யர்.

சரியென்று நாணு அய்யர் வீட்டுக்குச் சென்றேன். அங்கே அவர் மனைவியும், இரண்டு குழந்தைகளும் எல்லாரும் ஒரே ராகத்தில் குய்யோ முறையோ என்றுகத்திக்கொண்டிருந்தனர். அவர்கள் மூன்று பேரில் யாரைத் தேள் கொட்டி விட்டது என்று கண்டு பிடிக்க முடியவில்லை. குப்பண்ணு ஏதோ மூலிகை கொண்டு வருவதற்காகப் போயிருக்கிறார் என்று அங்கு தகவல் தெரிந்தது.

குப்பண்ணுவுக்காகக் கிராமம் முழுவதும் தேடினேன். கடைசியில் அவரை எங்கள் கிராமத்துக்கு வெளியே இருக்கும் சத்திரத்தில் கண்டு பிடித்தேன். ஆனால் கண்டு பிடித்தும் பிரயோசனம் இல்லை. ஏனென்றால் நான் அவரை எதற்காகத் தேடினேனோ அந்த உபத்திரவம் போய் விட்டது. "குப்பண்ணு! உம்மைத் தான் இத்தனை நாழியாகத் தேடி அலைந்தேன். தலைவலிக்கு மருந்து வாங்க வேண்டுமென்று கிளம்பினேன். உம்மைத் தேடிக் கண்டு பிடிப்பதற்குள் என் தலைவலி போய் விட்டது" என்றேன்.

"பார்த்தீர்களா! அதில் தான் ரகசியம் இருக்கிறது."

"என்ன ரகசியமோ, எனக்கு ஒன்றும் தெரியவில்லை.... ஆம்மாம்! நாணு அய்யர் வீட்டில் யாரையோ தேள் கொட்டி விட்டதாம். நீர் ஏதோ மூலிகை கொடுக்கிறேன் என்றீராமே!"

"ஆமாம்! ஆமாம்! இன்னும் ஒரு கால் மணி நேரம் பொறும்."

"என்னய்யா இது? ஒருவருக்கு அங்கே தேள் கொட்டி மூவர் கதறிக் கொண்டிருக்கிறார்கள். நீர் இப்படிப் பேசாமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறீரே?" என்றேன்.

"அதுதான் சொன்னேனே, இதில்தான் ரகசிய மிருக்கிறது."

அப்படியே நானும் குப்பண்ணுவும் கால் மணி நேரத்திற்குப் பிறகு நாணு அய்யர் வீட்டுக்குப் போனபோது, அவர் சம்சாரம் தன் பாட்டில் வேலையைச் செய்து கொண்டிருந்தாள். அய்யர் வருமட்டும் அமாவாசை காத்திருக்குமோ? அதுபோல இவர் மூலிகைக்குக் காத்துக்கொண்டிராமலே அம்மாளுடைய வலி போய்விட்டது.

குப்பண்ணுவின் கைகண்ட மருந்து என்னவென்று தெரியுமா? இன்னுமா தெரியவில்லை? அவர் கைகண்ட மருந்தை நான் கண்டு பிடித்து விட்டேன். வியாதியஸ்தர்கள் இவரைத் தேடும் போது இவர் அவர்கள் கைக்கு அகப்படாமல் வீடு விட்டு வீடு பாய வேண்டியது. இவரை அவர்கள் தேடிக் கண்டு பிடிப்பதற்குள் வியாதி தன்னைப்போல் பறந்துவிடும்!

# அழும்பூர் அமளி

[அழும்பூர் பட்டணத்தில் அழும்பூர் ரயில்வே ஸ்டேஷன். கிறிஸ்துமஸ் லீவுக்காகக் கிருஷ்ணசாமி முதலியார் இந்தப் புதுப் பட்டணத்தைப் பார்ப்பதற்கு அழும்பூர் ரயில்வே ஸ்டேஷனில் வந்து இறங்குகிறார்.]

முதலியார் :—போர்ட்டர்! போர்ட்டர்! போர்ட்டர்! இங்கே வா அப்பா!

[ஒரு போர்ட்டர் ஓடி வருகிறான்.]

முதலியார் :—இந்தா, இந்த இரண்டு டிரங்குப் பெட்டி, ஒரு படுக்கை. என்ன கேட்கிறே?

போர்ட் :—நான் கேட்கிறது இருக்கட்டும். நீங்க என்ன, கௌண்டரா?

முதலியார் :—என்னடா தடியா, என்னைப் பார்த்தால் கௌண்டராட்டமா இருக்கு? என்னைப் பார்த்தால் முதலியார் என்று தோன்றலை?

போர்ட் :—அப்படினா, நான் உங்க சாமானைத் தூக்கமாட்டேன், சாமி. வேறு யாரையாவது கூப்பிட்டுக்கிங்க.

[போய் விடுகிறான்.]

முதலியார் :—அட தடியன்! சுத்த உதவாக்கரையாய் இருக்கிறானே! சரி. வேறு போர்ட்டரைக் கூப்பிடுவோம். ஏய் போர்ட்டர்! ஏய் போர்ட்டர்!

[இன்னொரு போர்ட்டர் வருகிறான்.]

இந்தாப்பா—இந்த மூன்று சாமான்—என்ன கேக்கறே?

போர்ட் :—நீங்க என்ன, முதலியாரா ?

முதலியார் :—ஏன், முதலியார் சாமானை நீ தூக்கமாட்டாயா? அந்தப் போர்ட்டர் தான் மாட்டேன்னு போய்ட்டான்.

போர்ட் :—அப்படி இல்லீங்க. முதலியாரைத் தேடிக்கிட்டுதான் நான் இத்தனை நாழி அலைஞ்சேனுங்க. ஆமா, நீங்க என்ன, பட்டணத்து முதலியாரா? தொண்டை மண்டல முதலியாரா?

முதலியார் :—இது என்னடா, குலம், கோத்திரம் எல்லாம் விசாரிக்கிறாய்? ஏதாவது சம்பந்தம் கிம்பந்தம் பண்ணப் போகிறாயா, என்ன? நான் யாராயிருந்தால் உனக்கென்ன? சாமான் தானேடா உனக்குக் கணக்கு?

போர்ட் :—அப்படி இல்லீங்க, சாமி! நீங்க இந்த ஊருக்குப் புச்சா வந்திருக்கீங்க போலிருக்கு. அதுதான் அப்படிப் பேசறீங்க. வகுப்பு வாரித் திட்டம் தெரியுங்களா? அதன் படி நடக்கும்படி எங்களுக்குச் சர்க்கார் உத்தரவுங்க. இதோ பாருங்க.

[ஒரு நீளக்கடிதத்தை எடுக்கிறான்]

வாசிக்கட்டுங்களா......பிள்ளை, நாயுடு, பேரிச்செட்டி, கோமுட்டி, கௌண்டர், அம்பலக்காரர், பட்டணத்து முதலியார், ராவுத்தர், நாட்டுக்கோட்டை செட்டியார்—

முதலியார் :—போதும், போதும்! என்னடா இது?

போர்ட் :—இதுதான் வகுப்பு வாரித் திட்டங்க. இதுபடிதான் சாமான் தூக்கணும் என்று சர்க்கார் சட்டங்க. போன ரயில்லே ஒரு அம்பலகாரர் வந்தாரு. அவரோட சாமானைத் தூக்கி வைச்சேன். இப்போ ஒரு பட்டணத்து முதலியாருக்காகத் தேடி வாரேன். பட்டணத்து முதலியார் கிடைக்கலேன்னு, யாராவது ராவுத்தரைத்தான் புடிக்கணும்......

முதலியார் :—சரி போடா! உங்களையும் கண்டா, உங்கள் ஊரையும் கண்டா! நானே பெட்டியைத் தூக்கிக்கொண்டு போகிறேன்.

[பெட்டிகளையும் படுக்கையையும் தூக்கமாட்டாமல் தூக்கிக் கொண்டு போகிறார். பாதி வழியில் எல்லாவற்றையும் போட்டுக் கொண்டு விழுகிறார். கடைசியில் மிக்க சிரமத்தின்பேரில் தம்முடைய பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு ஸ்டேஷனுக்கு வெளியே செல்கிறார். ஹோட்டலுக்குப் போவதற்காக ரிக்ஷாக்காரன்களைக் கூப்பிடுகிறார். பத்துப் பன்னிரண்டு ரிக்ஷாக்காரர்கள் இவரிடம் வருகிறார்கள். இவரை ஏற இறங்கப் பார்த்துவிட்டுப் போய் விடுகிறார்கள்.]

முதலியார் :—இது என்னடா, வம்பா யிருக்கிறது? ஒருவனாவது வரமாட்டேன் என்கிறான். டேய், ரிக்ஷா! நீ தான் இங்கே வா.

[ஒரு ரிக்ஷாக்காரன் வருகிறான்.]

ஏண்டா, வம்பு அய்யர் ஹோட்டலுக்கு என்ன கேட்கிறே?

ரிக்ஷா :—ஆமாங்க. நீங்க வந்து......

முதலியார் :—உனக்கும் என்னுடைய குலம் கோத்திரம் எல்லாம் தெரியணும் போலிருக்கு. இதோ சொல்லுகிறேன். எனக்குத் திருச்சினுப் பள்ளி. பெயர் கிருஷ்ணசாமி முதலியார். சம்பளம் நூறு ரூபாய். குழந்தைகள் நான்கு. முதல் பெண்ணுக்குக் கல்யாணம் ஆகி ஒரு பிள்ளைக் குழந்தை பிறந்திருக்கிறது. இரண்டாவது பெண் கல்யாணத்துக்கு நிற்கிருள். அவளுக்குக் கல்யாணம் இந்த வருஷம் கட்டாயம் பண்ணிவிட வேண்டுமென்று வீட்டுக்காரியும் ஒத்தைக் காலில் நிற்கிருள். பெரிய பிள்ளை வந்து......

ரிக்ஷா :—என்ன ஐயா, கோவிச்சுக்கிட்டுப் பதில் சொல்லுறீங்க! நீங்க என்ன ஜாதி என்று கேட்க்ணும்னு தான் வந்தேன். நீங்கதான் முதலியாருன்னு சொல்லிட்டீங்களே. ரூல்படி நான் இப்போ ஒரு கோமுட்டியைத் தான் இழுக்கணுங்க.

முதலியார் :—அப்படியானல் வண்டி விடமாட்டே ! சரி, எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. எனக்குத் தான் முதலியார், நம்பர், வகுப்பு வாரித் திட்டம், குட்டிச்சுவர் என்றெல்லாம் சொல்லிப்பிட்டே. இந்த சாமான்களுக்கு அப்படி யெல்லாம் ஒன்றும் ரூல் கிடையாதே?

ரிக்ஷா :—இது வரையிலும் அப்படி ஒண்ணும் இல்லீங்க.

முதலியார் :—அப்படியானல் இந்த சாமான்களைத் தூக்கி வண்டியில் வை. நான் வேண்டு

மானுல் நடந்து வருகிறேன். வண்டியைக்கூடத் தள்ள வேண்டுமானுலும் தள்ளுகிறேன்.

[ரிக்ஷாக்காரன் சாமான்களைத் தூக்கி வண்டியில் வைக்கிருன். கிருஷ்ணசாமி முதலியார் பின்னுல் நடந்து ஹோட்டலுக்கு வருகிருர்.]

ஹோட்டல்காரர் :—வாங்கோ, வாங்கோ! ஆமாம் நீங்கள் என்ன ஜாதி ?

முதலியார் :—அட நாராயணு! இங்கேயும் அந்தத் தொல்லை தானு? நான் முதலியார் ஐயா, முதலியார். முதலியாரிலும் என்ன முதலியார் என்று தெரிய வேண்டுமானுல் தொண்டைமண்டலம் முதலியார். இன்னும் உங்க ஊர் சர்க்கார் நம்பர் பிரகாரம் என்ன நம்பர் என்ருல் நம்பர் 43. இப்பொழுது சொல்லும் இட்டலி, காப்பி கொடுக்க முடியுமா, முடியாதா என்று!

ஹோட்டல்காரர் :—அட பாவமே! நம்பர் 43 என்ரு சொன்னீர்கள்? இதுவரையில் நம்பர் 29 வரையில் தான் வந்திருக்கிறேன்! இன்னும் இரண்டு மணி பொறுத்தீர்களானுல்—

முதலியார் :—(மிகவும் கோபத்துடன்) :—நீ நாசமாய்ப் போக! உன நம்பரும் ஆச்சு, நீயும் ஆச்சு! இந்த ஊரில் உன் ஹோட்டல் ஒன்று தான் இருக்கிறது என்று உன் எண்ணமாக்கும்? சரி, வேறு ஹோட்டலுக்குப் போகிறேன்.

[இன்னெரு ஹோட்டலுக்குப் போகிருர்.]

அந்த ஹோட்டல்காரர்:-(வாயில் புகையிலையை

மென்று கொண்டு) :—வாழுங்கோ, வாழுங்கோ, எப்ப வண்டாப்ளே? உங்க நம்பர் என்ன?

முதலியார் :—நம்பர் 43.

அ. ஹோட்டல் :—நம்பர் 41 வரையிலும் ஆய் விட்டது. 42 காசிப் பிராமணன் என்று போட்டிருக்கிறது ஆனால் காசிப் பிராமணன் யார் வரப் போகிறான்? நீங்க அந்த மேஜையிலே உட்காருங்கோ. இதோ இட்டிலியும், காப்பியும் கொண்டு வருகிறேன். டேய் அம்பி! அவாளுக்கு இரண்டு இட்லி சாம்பார் கொண்டு வாடா!

[அம்பி ஒரு தட்டில் இரண்டு இட்லி சாம்பாரும், ஒரு டம்ளரில் தீர்த்தமும் கொண்டு வந்து வைக்கிறான். அந்த சமயத்தில் வாசலில் யாரோ ஒருவர் வருகிறார்.]

வந்தவர் :—என் நம்பர் 42, எனக்கு இரண்டு இட்லி சாம்பார்.

ஹோட்டல் :—42 ஆ? இப்பொழுதுதானே 43 வந்தார். அதோ உட்கார்ந்திருக்கிறாரே, அவர் தான். நீங்கள் இனிமேல் 42-ம் நம்பர் வரணும் என்றால் இரண்டு நாள் காத்துக் கொண்டிருக்க வேண்டும்.

வந்தவர் :—இரண்டு நாள் காத்துக் கொண்டிருக்க வேண்டுமா?

[முதலியார் இருக்கும் மேஜைக்கு ஓடுகிறார். முதலியார் இன்னும் சாப்பிட ஆரம்பிக்கவில்லை. அப்பொழுது தான் ஸ்பூனை எடுத்து இட்லியில் செருகி

யிருக்கிருர். வந்தவர் அந்த இட்லியை தாம் எடுத்து வைத்துக் கொண்டு சாப்பிடுகிருர்.]

முதலியார் :—இது என்ன ஐயா பைத்தியக்கார ஊரா யிருக்கிறது! எனக்குத் தான் பைத்தியம் பிடித்து விட்டதா? அல்லது, உங்களுக்கெல்லாம் பைத்தியம் பிடித்து விட்டதா? (வந்தவரைப் பார்த்து) கொண்டா ஐயா இட்லி சாம்பாரை இங்கே! (இட்லி சாம்பார் தட்டைப் பிடித்து இழுக்கிருர்.)

வந்தவர் :—ஓய்! நம்பர் 43! என்ன விளையாடுகிறீர்? நம்பர் 42க்குப் பிறகுதான் நம்பர் 43. தெரியுமாங்காணும்?

[தட்டைப் பிடித்து இழுக்கிருர். முதலியாருக்கும் வந்தவருக்கும் சண்டை நடக்கிறது. முதலியார் தமக்கு இருந்த ஆத்திரத்தில் வந்தவரை மொத்து மொத்து என்று மொத்துகிருர். பெரிய கூட்டம் கூடுகிறது. முதலியாருக்குப் பைத்தியம் பிடித்து விடுகிறது. பாடுகிருர்.]

வந்தவர் :—பைத்தியம்! அவன் தான் வலுவில் என்னை வந்து இப்படி அடித்தான். இவனைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக் கொண்டு போங்கள்.

முதலியார் :—பைத்தியக்கார ஆஸ்பத்திரி வேறு தனியாக கட்டியிருக்கிறீர்களா? (சிரிக்கிருர்.) இந்த ஊரேதான் ஒரு பெரிய பைத்தியக்கார ஆஸ்பத்திரியா யிருக்கிறதே!

[பைத்தியம் பிடித்தவர் போல் உளர ஆரம்பிக்கிருர்.]

கூட்டத்தில் உள்ளவர்கள் :— ஆசாமிக்குப் பைத்தியம் சரியாகப் பிடித்து விட்டது. பாவம், இந்த ஊருக்குப் புதிது போலிருக்கிறது. பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குத் தான் கொண்டு போகணும்.

[ஒரு மோட்டாரில் ஏற்றி பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்கிறார்கள்.]

ஆஸ்பத்திரி உத்தியோகஸ்தர் :—யார் அது? என்ன ஜாதி? அவர் நம்பர் என்ன!

ஒருவர் :—பார்த்தால் முதலியார் போலிருக்கிறது. முதலியாரா யிருந்தால் நம்பர் 43 தான்.

ஆ. உத்தியோகஸ்தர் :—அப்படியானால் இன்று அவரை 'அட்மிட்' பண்ண முடியாது. இப்பொழுது தான் 43ம் நம்பர் உள்ள ஆசாமியை அட்மிட் பண்ணினேன். நீங்கள் கொஞ்ச நாழிக்கு முன்னால் வந்திருந்தால்—

முதலியார் (தம்மைப் பிடித்துக் கொண்டிருந்தவர்களிட மிருந்து திமிறிக் கொண்டு ஆஸ்பத்திரி உத்தியோகஸ்தர் முகத்தில் ஒரு குத்து விட்டு) :—சார்! யாருக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது—உங்களுக்கா, எனக்கா?

# குடிக்கூலிக்கு விடப்படும்!

சென்னை வாசிகளைத் தவிர, மற்றப் பேர்களுக்கு, "குடிக்கூலிக்கு விடப்படும்" என்றால் என்னவென்று தெரியாதிருக்கலாம். "குடிக்கூலிக்கு விடப்படும்" என்றாலும் "வாடகைக்கு விடப்படும்" என்றாலும் எல்லாம் ஒன்றுதான். "வீடா!......வாடகையா!......எங்கே, ஐயா!" என்று ஆத்திரப்படாதீர்கள்! எல்லாம் என் வீடுதான் வாடகைக்கு விடப்போகிறது!

நாங்கள் குடியிருக்கும் வீட்டின் ஒரு பாகத்தைத்தான் என் மனைவியின் கழுத்தறுப்பைப் பொறுக்க முடியாமல் வாடகைக்கு விடுவது எனத் தீர்மானித்திருக்கிறேன். எனக்கு வீட்டின் ஒரு பாகத்தை வாடகைக்கு விட்டு, அதில் எனக்கு முன்பின் தெரியாதவர்களை யெல்லாம் குடி வைத்து, அவர்களுடன் கூடிப் பழகுவதில் துளிக்கூட இஷ்டம் கிடையாது. ஆனால் எங்களுக்கு என் சகோதரி கல்யாண நிமித்தம் ஏற்பட்ட கடனை, வீட்டில் குடி வைத்தே அடைத்து விடுவது எனத் தீர்மானித்து விட்டாள், என் மனைவி!

ஆனால் நானும் என்னால் கூடிய மட்டும் வீட்டில் ஒருவரையும் குடி வர வொட்டாமலே அடித்துக் கொண்டு வந்தேன். என் மனைவி இல்லாத சமயத்தில் யாராவது வீடு பார்க்க

வந்தால், அவர்களிடம் வீட்டை எவ்வளவு இழித்துக் கூற முடியுமோ, அவ்வளவு இழித்துக் கூறி வந்தேன்.

ஒரு நாள் ஒரு விடாக் கண்டரும், ஒரு கொடாக் கண்டியும் வீடு பார்க்க வந்து சேர்ந்தார்கள். நல்ல வேளையாக என் மனைவி வீட்டில் இல்லை. எதோ காரியமாக வெளியில் போயிருந்தாள். சரி, நம்முடைய சாமர்த்தியத்தைக் காண்பித்து அவர்களைத் துரத்தி விடுவது எனத் தீர்மானித்தேன்.

வீட்டிற்குள் நுழைந்ததும், நுழையாததுமாக, "என்ன ஐயா, வீட்டில் ஒரு பகுதி வாடகைக்கு விடுகிறீர்களாமே? எங்கே வீட்டைக் கொஞ்சம் பார்க்கலாமா!" என்றார் விடாக் கண்டர்.

"உங்களுக்கு வீடு அவ்வளவு பிடித்திருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. ரொம்பப் பழைய வீடு—" என்று இழுத்தாற்போல் சொன்னேன் நான்.

"என்ன! நீங்களே அப்படிச் சொல்லுகிறேளே! நாங்கள் தான் வீடு எப்படி யிருக்கிறது என்று பார்க்கிறோமே" என்று சொன்னாள் கொடாக்கண்டி.

"இதுதான் திண்ணை. ரொம்ப சின்னது. ஒரு ஆள்கூட உட்கார முடியாது" என்றேன்.

"பரவாயில்லை. திண்ணை சின்னதாய்த்தான் இருக்க வேண்டும். திண்ணை பெரிதாய் இருந்

தால், ரோட்டில் போகிற தடியன்கள் எல்லாம் இதில் சத்திரம் போல வந்து உட்கார்ந்து விடுவார்கள்" என்றாள் கொடாக்கண்டி.

"இதுதான் கூடம். மருந்துக்குக் கூடக் காற்று கிடையாது. இங்கேதான் நான், என் குழந்தைகள் எல்லாரும் படுத்துக் கொள்வது."

"தேவலையே. ரொம்ப அடக்கமா யிருக்கிறதே. குழந்தைகளை இங்கு படுக்க வைத்தால், குளிர், காய்ச்சல், ஜல தோஷம் முதலிய தொல்லைகள் வராது."—இது கொடாக்கண்டி.

"இதுதான் சமையல் அறை. இங்கு புகை போவதற்குக்கூட வழி கிடையாது. அடுப்புப் புகை யெல்லாம் நம் கண்ணில்தான்."

"அடுப்பு இருந்தால்தானே புகையைப் பற்றிக் கவலைப் படுவதற்கு? அவருக்குப் பட்டினத்திற்கு மாத்தல் ஆனாலும் ஆச்சு, அதிலிருந்து முழுக்க முழுக்கக் குமுட்டிதான் உபயோகப் படுத்துகிறேன்."—இது கொடாக்கண்டி.

"இதுதான் படுக்கை யறை. ஓட்டுவில்தான். ஓடு மாற்றி ஐந்து வருஷங்களுக்கு மேலாகிறது. சந்திர சூரியாள் வாசம் பண்ணுகிறாள் என்று சொல்லுகிறார்களே, இந்த அறையைப் பார்த்துவிட்டுத்தான் சொல்லி யிருக்க வேண்டும். மழை பெய்தால் அதோ அந்த ஒழுகுகிற இடத்திற்கெல்லாம் கீழ் நாங்கள் ஏதாவது பாத்திரம் வைப்பது வழக்கம்."

"எப்பவுமா மழை பெய்கிறது? நம்ம சொந்த வீடா என்ன தட்டுகெட்டுப் போகிறது? நான் இப்பொழுது குடியிருக்கிற வீட்டில் கீழே பாத்திரம் வைக்கக்கூடச் சரிப்படாது. அப்படித் தொற தொற என்று கொட்டும்."—இது விடாக் கண்டர்.

"இந்த ஜன்னல் இருக்கிறது பார்த்தீர்களா? இதனால் ஏற்படும் தொல்லை கணக்கு வழக்கு இல்லை. இதைத் திறந்தால் அடுத்த வீடுதான். அடுத்த வீட்டுக் குழந்தைப் படைகளின் சத்தம் எல்லாம் நம் காதில்தான். அதற்காக நான் இங்கு சுவர் ஒன்று எழுப்பி விடலாமா என்று கூட யோசனை பண்ணிக் கொண்டிருக்கிறேன்."

"குழந்தைகளா! அவருக்குக் குழந்தைகள் என்றால் உசிர் ஆச்சே. அதோடு ஜன்னலைத் திறந்துவிட்டால், நம்மாத்து குழந்தைகளும் அவர்களுடன் விளையாடி விட்டுப் போகிறார்கள்" என்றாள் கொடாக்கண்டி.

"இதுதான் முற்றம். பச்சைப் பசேல் என்றிருக்கிறதே, அது என்னமோ வர்ணம் பூசியிருக்கிறதென்று நினைக்காதீர்கள். அத்தனையும் பாசி! இதில் வழுக்கி விழாதவர் கிடையாது. தினம் காலையில் நான் பல் தேய்க்கக் குழாய்க்குப் போகும் போதெல்லாம் ஒரு தடவையாவது வழுக்கி விழாமல் இருந்ததில்லை."

"வீடுன்னா, ஜலம் புழங்கினா, பாசி இல்லாம லிருக்குமா? கட்டைவிரலை நன்றாய் ஊன்றி வைத்து

நடந்தால் போகிறது. இதெல்லாம் பார்த்தால் வீடு கிடைக்குமா?" என்றாள் கொடாக்கண்டி.

எனக்கு என்ன பண்ணுவது என்று புரியவில்லை. இருவரும் இந்தமாதிரி நான் சொன்ன ஒவ்வொரு குற்றத்துக்கும் ஒரு சமாதானம் கூறி வந்தது எனக்கு மிகவும் கஷ்டமாயிருந்தது. இருந்தாலும் பார்ப்போம் என்று தீர்மானித்து, தைரியத்தைக் கெட்டியாகக் கையில் பிடித்துக் கொண்டு மேலே சென்றேன்.

"இதுதான் குழாய். தினம் காலையில் 4 மணியிலிருந்து 6 மணி வரையில்தான் ஜலம் வரும்."

"பரவாயில்லையே. நான் இப்பொழுது குடியிருக்கும் வீட்டில் ஜலம் எப்பொழுது வரும் என்று சொல்லவே முடியாது. நினைத்தால் வரும். நினைக்கா விட்டால் வராது" என்றார் விடாக் கண்டர்.

இதற்கு மேலே நான் வீட்டில் காண்பிப்பதற்கு வேறு ஒன்றும் இல்லை. "வீடு இத்தனை 'பேபார்சா' யிருக்கிறதே. நீங்கள் எப்படிக் குடி வரப் போகிறீர்கள்?" என்றேன்.

"என்ன அப்படிச் சொல்றேள்? எனக்கு வீடு ரொம்பப் பிடித்திருக்கிறதே......என்ன உங்களுக்கு எப்படி?" என்றாள் கொடாக்கண்டி விடாக்கண்டரைப் பார்த்து.

"உனக்குப் பிடித்து இருந்தால் எனக்கும் பிடித்தது போல் தான்" என்றார் அவர்.

"சரி. இதற்கு என்ன வாடகை? என்றையி லிருந்து குடி வரலாம்?" என்றாள் கொடாக் கண்டி.

"என்னடா, பெரிய தர்ம சங்கடமாகப் போய்விட்டது" என்று நினைத்துக்கொண்டு நான் வாடகை சொல்லப் போகும் சமயத்தில் என் மனைவி வந்து சேர்ந்தாள்.

"என்ன, வீடு உங்களுக்குப் பிடித்திருக் கிறதா?" என்றாள் அவர்கள் இருவரையும் பார்த்து.

"ரொம்பப் பேஷாய் பிடித்திருக்கிறது" என்றார்கள் அவர்கள் இருவரும்.

"இன்னொரு சௌகரியம் கூட இருக்கிறது. இரண்டு வீடு தாண்டினால் கோவில். தினம் ஸ்வாமி தரிசனம் கிடைக்கும்" என்றாள் மனைவி.

இதைக் கேட்டதும் கொடாக் கண்டி துள்ளிக் குதித்தாள்.

"ஐயோ, கோவிலா! வேண்டவே வேண்டாம். மேளச் சத்தத்தைக் கேட் டாலே அவருக்குத் தலைவலி வந்து விடும். இத் தனை நாழியாக இந்த வீட்டிற்குக் குடி வரலா மென்று ஆசையா யிருந்தோமே!......கோவில் பக்கத்தில் இருக்கிறது என்றுதானே இப்பொழுது குடியிருக்கும் வீட்டைக் காலி பண்ணப் போகி றோம்" என்றாள்.

என் மனைவியின் முகத்தில் ஈயாடவில்லை!

# டாக்டர் பில்

டாக்டருக்கு என்னமோ நான் பணம் கொடுக்கவேண்டியது உண்மை தான். அந்தப் பணத்தைக் கொடுக்காமல் ஒரு வருஷமாக சால் ஜாப்பு சொல்லிக்கொண்டு வருவதும் நிஜந்தான். ஆனால் இதற்காக டாக்டர் ஒரு மனுஷனை இப்படியா அவமானப் படுத்துவது? பகல் இல்லை, இரவு இல்லை; வீடு இல்லை, ஆபீஸ் இல்லை; நான் நான்கு பெரிய மனிதர்களுடன் பேசிக்கொண்டிருக்கிறேன் என்பது கூட இல்லை—அவருடைய பில் கலெக்டரை அனுப்பி விடுவது என்ன நியாயம்?

இன்னொருவனயிருந்தால் அந்தப் பில் கலெக்டரைப் பார்க்கச் சகிக்காமலே பணத்தைக் கொடுத்து ஒழித்து விடுவான். அந்தப் பில் கலெக்டரைப் பார்த்தால் அவன் மிகவும் பரோபகாரார்த்தமாகத் தன் டாக்டரிடம் வரும் வியாதியஸ்தர்களுடைய வியாதிகளை யெல்லாம் தான் வாங்கிக்கொண்டு விட்டவன்போலத் தோன்றும். ஆனால் நான் ஒன்றும் அவனுக்குப் பயந்து பணத்தைக் கொடுப்பதா யில்லை.

கொஞ்ச நாளைக்கு அந்த பில் கலெக்டர் தினம் ஆபீசுக்கு வந்து கழுத்தை அறுத்தான். "இன்றைக்கு வா, நாளைக்கு வா" என்று சால்

ஜாப்புச் சொல்லிக்கொண்டே வந்தேன். இது முதலில் எனக்குக் கொஞ்சம் அவமானமாய்த் தான் இருந்தது. என் பக்கத்தில் என்னுடன் கூட வேலை செய்யும் இன்னும் பத்து உத்தியோகஸ்தர்களுக் கிடையில் இந்த மாதிரி தினம் அவமானப் படுவது என்றால்? அதோடு அந்த பில் கலெக்டரும் சற்று வாயாடி. ஏதாவது கன்னா பின்னா வென்று பேசி விடுவான். நான் அவனுக்கு பதில் சொல்லுவது அழகல்லவென்று பேசாமல் இருந்து விடுவேன்.

ஆனால் இது விஷயத்தில் எனக்குச் சீக்கிரமே ஆறுதல் ஏற்பட்டது. அந்த பில் கலெக்டரின் காற்று ஆபீசில் பட்டுப் பட்டு, மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் வியாதி வந்து, அவர்களும் அதே டாக்டரிடம் போய், கடைசியில் பில் கலெக்டர் தினம் அவர்களையும் ஒரு நடை பணம் கேட்க ஆரம்பித்துவிட்டான். இந்த மாதிரி எல்லாரும் பணம் கொடுக்க நேரவே நாங்கள் எல்லாரும் பில் கலெக்டரைக் "கோட்டா" பண்ண ஆரம்பித்து விட்டோம்.

"இந்தாங்கோ, ஸார்! அவர் பணம் கொடுத்தால் நான் கொடுக்கத் தயார்" என்பார் இவர்.

"ஸார்! ஸார்! இவர் பணம் கொடுத்தால் நான் கொடுக்கத் தயார்" என்பார் அவர்.

"எல்லாரும் கொடுத்தால் நான் கொடுக்கத் தடையில்லை" என்பார் இன்னொருவர்.

இந்த மாதிரி நாங்கள் எல்லாரும் பணம் கொடுக்காமல் தகராறு பண்ணத் தொடங்கவே, அந்தப் பில் கலெக்டர் ஆபீசுக்கு வருவதை நிறுத்தினன். ரொம்ப க்ஷேமம் என்று நாங்கள் எல்லாரும் பெருமூச்சு விட்டோம். ஆனல் அவனு விடுபவன்? அந்தப் பொல்லாத பில் கலெக்டர் வீட்டுக்கு வர ஆரம்பித்து விட்டான். அது மட்டுமா? நான் இல்லாத சமயம் பார்த்து, அவன் வீட்டுக்கு வந்து என் மனைவியிடம் சொல்லி என்னை அவமானப்படுத்த வேறு ஆரம்பித்து விட்டான்.

ஒரு நாள் நான் ஆபீசுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். சரசு என்னை வழி மறித்தாள்.

"இது என்ன, டாக்டருடைய பில் கலெக்டரைத் தினம் வீட்டுக்கு அனுப்பி விடுகிறீர்கள்?"

"நான் ஒன்றும் அனுப்ப வில்லையே. அந்தத் தடியன் இங்கே வந்தானு?"

"வந்தானுவது! தினம் தான் நாலு பொம்மனுட்டிகள் இருக்கும்போது உங்களைப் பற்றித் தாறு மாருகப் பேசிவிட்டுப் போகிருன்."

"அப்படியா செய்தான்! இருக்கட்டும் பார்த்துக் கொள்கிறேன்."

"ஏன், டாக்டருக்குப் பணத்தைக்கொடுத்து ஒழிப்பது தானே?"

"ஒழிக்காமல் என்ன? வியாதி சொஸ்தமானால் தானே பணம் கொடுக்கலாம்?"

"ஏன் அதை அவரிடமே சொல்வது தானே! 'இந்தா ஐயா, நீர் மருந்து கொடுத்தது எனக்கு உடம்பு சொஸ்தமாக வில்லை. நீர் கேட்ட பணத்தைக் கொடுக்க முடியாது' என்று சொல்லுகிறது."

"சொல்லலாம் தான். சொல்லலாம் தான். ஆனால்—ஆனால்—"

"ஆமாம். ஆனால், ஆனால் என்று இழுங்கோ. உங்கள் அதிகாரம் எல்லாம் என்னிடம் தான். வெளியிலே நாலு பேரிடம் பேசுவதற்குத் தைரியம் கிடையாது."

"யாருக்குத் தைரியம் கிடையாது?"

யாருக்கா? எல்லாம் உங்களுக்குத் தான். இனி மேல் அந்தப் பில் கலெக்டர் இங்கு வந்து கழுத்தை யறுக்கட்டும், அவன் காலை ஒடிக்கிறேன்" என்று சொல்லி விட்டு உள்ளே சென்று விட்டாள் சரசு.

நான் ஆபீசுக்குப் போகும்போது சரசு சொன்ன வார்த்தைகளை நினைத்துப் பார்த்துக் கொண்டே போனேன். ஆமாம், அவள் சொன்னது நியாயந்தான் என்று பட்டது. ஒரு வருஷமாக டாக்டரிடம், எனக்கு அவர் மருந்தினால் சொஸ்தமாக வில்லை, ஆகையால் பணம் கொடுக்க முடியாது, அல்லது அவர் பணத்தைக்

குறைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்ல வேண்டுமென்று தான் எண்ணம். ஆனால் அதற்கு வேண்டிய தைரியம் இல்லை.

சரசு என் தைரியத்தைப் பற்றி இழிவாகப் பேசின பிறகு எனக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. சரி, இன்று ஆபீஸ் விட்டதும் டாக்டரிடம் சொல்லிவிட வேண்டியது தான் என்று தீர்மானித்தேன்.

"என்ன டாக்டர்! என்ன இப்படித் தினம் பில் கலெக்டரை அனுப்பிக் கழுத்தை அறுக்கிறீர்" என்றேன் நான்.

"ஆமாம், ஒரு வருஷமாகப் பணம் கொடுக்காமல் சால்ஜாப்பு சொல்லிக்கொண்டு வந்தால்?" என்றார் அவர்.

"ஆமாம். உமக்கு நியாயமாகக் கொடுக்க வேண்டியதானால் சால்ஜாப்பு சொல்லமாட்டேன் தான்."

"அப்படி யென்றால்?"

"அப்படியென்றால் நீர் கொடுத்த மருந்தினால் என் வியாதி குணமாக வில்லை—"

"ஆகையினால்—"

"ஆகையினால் உமக்கு ஒரு தம்படிகூடக் கொடுக்க முடியாது."

"என்ன? என்ன?"

"ஒரு தம்படி கூடக் கொடுக்க முடியாது."

"என்ன, பாதிப் பணம் கூடக் கொடுக்க மாட்டீரா?"

"ஊஹூம்! தம்படி யென்றால் தம்படி கூடக் கொடுக்க முடியாது."

"என்ன! உமக்கு இத்தனை தைரியமா?" என்று கேட்டார்.

நான் சிரித்துக் கொண்டேன். காலையில் எனக்குத் தைரியம் இல்லை என்று சரசு சொன்னதை நினைத்துப் பார்த்துக் கொண்டேன். இதை சரசு இருந்து கேட்கக் கொடுத்து வைக்கவில்லையே யென்று கூட வருத்தப் பட்டேன்.

"ஆமாம், தைரியம் தான்!" என்று தைரியமாகவே சொல்லி விட்டு, டெலிபோன் ரிஸீவரை 'டக்'கென்று மாட்டிவிட்டு, டெலிபோனை அப்பால் தள்ளினேன்.